பவர் (O.V) மொழிபெயர்ப்புக்கான சொற்பொருள் அகராதி





# தமிழ் வேதாகம சொற்களஞ்சியம்

தொகுப்பாசிரியர்

D. குமுதா

மோரியா



# தமிழ் வேதாகம சொற்களஞ்சியம்

பவர் (O.V) மொழிபெயர்ப்புக்கான சொற்பொருள் அகராதி

தொகுப்பாசிரியர்

**D.குமுதா**

மோரியா ஊழியங்கள்

Dictionary of words found in the Tamil Bible

Collected by D. Kumutha

Copyright © Author

Publishing Year 2022 / First Edition

MM Serial No. 166

ISBN: 978-81-956501-3-2

*Published by*
**Moriah Ministries**
Post Box No. 7193, 31/33 Water Tank Road,
MMDA Colony, Arumbakkam, Chennai - 600106
Email: <moriahministries@gmail.com> Mob.: 9444961106

*For Book Order*
Mob.: 919962494010
Email: moriahonlinebooks@gmail.com
Website: www.moriahministries.org

Typeset & Cover Design: Moriah Ministries
*Printed in India*

**தமிழ் வேதாகம சொற்களஞ்சியம்**
**(Tamil Vethakama Sortkalangium)**

தொகுப்பாசியர்: **D.** குமுதா

மோரியா வரிசை எண் 166

முதலாம் பதிப்பு 2022 / பதிப்புரிமை © ஆசிரியர்

வெளியீடு:
**மோரியா ஊழியங்கள்**
தபால் பெட்டி 7193, 31/33, தண்ணீர் தொட்டி சாலை,
எம்.எம்.டி.ஏ. குடியிருப்பு, அரும்பாக்கம், சென்னை 600 106
கைபேசி 91-9444-961106

# பதிப்பகத்தார் உரை

இந்த அகராதி ஹென்றி பவர் தமிழ் மொழிபெயர்ப்பில் (OV) காணப்படும் சொற்களுக்கும், காலம் கடந்து வழக்கில் இல்லாத சொற்களுக்கும், பொருள் சிதைந்த சொற்களுக்கும் பொருள்கூறி, அச்சொற்கள் பயன்படுத்தப்பட்டிருக்கும் வசனங்களையும் எடுத்துச் சொல்லும் அகராதி. இன்றைய தலைமுறை தமிழ் மக்களுக்கு இதுபோன்ற ஓர் அகராதி மிகவும் அவசியமாக இருக்கிறது என்பதை உணர்ந்து இது பெருமுயற்சியுடன் ஆயத்தம் செய்யப்பட்டிருக்கிறது. மற்றும் அதிக கல்வி அறிவற்ற கிராமத்து பிரசங்கிகள் இம்மொழி பெயர்ப்பில் காணப்படும் சில வார்த்தைகளுக்கு கொச்சையாக பொருள்கொண்டு பிரசங்கிப்பதையும் காண்பது அதிக வருத்தத்திற் குரியதாகும்.

இந்தக் களஞ்சியத்தை ஆயத்தம் செய்த சகோதரி, அதிக பாரத்துடனும் பெருமுயற்சியுடனும் இதை தயார் செய்திருக்கிறார்கள். இத்தகைய அகராதியை தயார் செய்யும்படி தூண்டிய முகாந்தரத்தைத் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

"ஊரீம் தும்மீம்" யாத் 28:30 என்பதை ஒருவகை செடி என்றும், "சொகுசா" எசே. 1:4 சொகுசு மாளிகை என்றும், "சரபணி" என்பதற்கு சரசர என இரங்கும் பனி என தங்கள் சொந்த அர்த்தத்தை என்னிடம் கூறியிருக்கின்றனர். இவைபோக சில வாலிபர்கள் "ஆகாமியம்", "நிணம்" போன்ற சில வார்த்தைகளுக்கான பொருள் என்ன என்று என்னிடம் வினவியிருக்கின்றனர். இத்தகைய அறியாமையை போக்க வேண்டும் என்று என் உள்ளத்தில் ஆர்வம் எழுந்தது. அதன் விளைவாக எழுந்ததே இந்த அகராதி.

மற்றும் "சுயம்பாகி" (ஆதி. 40:1), "சம்பிரதி" 2 சாமு. 20:25), "திரியாவரக்காரன்" (யோபு 5:13), "பெருநெஞ்சன்" (நீதி. 28:25), "வியாஜ்யம்" (யாத். 23:3,6) "ஆணம்" (நியா. 6:19,20), "கிரியிருப்பவர்கள்" (2 இராஜா. 14:14), "முஸ்திப்பாக்கி" (2 நாளா. 29:19) போல பல வார்த்தைகளுக்குச் சரியான பொருள் தெரியாமலேயே வேதாகமத்தை மேலோட்டமாகவே படித்து வருகிறோம்.

இந்நிலை மாறி இத்தகைய கடினமான வார்த்தைகளுக்கு சரியான பொருள்புரிந்து வேதாகமத்தை படித்துப் பயனடையவேண்டும் என்று எடுத்த முயற்சியே இந்த அகராதி. இந்தச் சிறிய நூல் தமிழ் வேதாகமத்தைப் படிக்கும் பலருக்கும் பயனுடையதாக இருக்கும் என நம்புகிறோம்.

இந்நூலின் சிறப்பு: "இன்னோம் குமாரரின் பள்ளத்தாக்கு" என்பதற்கு அதற்குரிய நிலநூல் விவரங்கள், உபாகமம் நூலுக்குத் தேவையான முழு விவரங்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஊரீம், ஏபோத்து, அறுமீன் போன்ற சொற்களுக்கான முழு விவரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அல்லேலூயா, ஓசன்னா போன்ற சொற்களுக்கு அதன் பொருளும் பயன்படுத்தப்பட்டிருக்கும் விவரங்களும் இதில் உள்ளன. சீலோ, தம்மூஸ் போன்ற சொற்களுக்கான வரலாற்று விவரங்களும் தரப்பட்டிருக்கின்றன. மெல்கிசேதேக்கின் முறைமை பற்றிய விவரத்தையும் இதில் காணலாம்.

இந்த அகராதியை ஆயத்தம் செய்த நம் சகோதரி D. குமுதாவைப் பற்றிக் குறிப்பிட வேண்டியதும் அவசியமாக இருக்கிறது. சகோதரி 1985 ஆம் ஆண்டில் செவிலியர் பயிற்சி பயின்றுகொண்டிருக்கையில் இவர்களுக்கும் இவருடன் பயிற்சியில் இருந்த வேறு இரு செவிலியர்களுக்கும் கொடிய விஷ நோய் கண்டு அவ்விருவரும் தங்கள் உயிரை இழக்க, சகோதரி குமுதா மட்டும் உயிர்தப்பி கொடிய மூட்டு நோயினால் பாதிக்கப்பட்டார்கள். முழங்கால்களுக்குக் கீழ் கால்களை நீட்ட முடியாது. கைகளையும் விரல்களையும் மடக்க

முடியாது. தோள்பட்டைகளை உயர்த்த முடியாது. உடலில் எல்லா மூட்டுகளிலும் தொடர்ச்சியாக வலி இருந்துகொண்டே இருக்கிறது. இத்தகைய சரீர நோயினால் பீடிக்கப்பட்டிருப்பினும் கர்த்தரின் அளவு கடந்த கிருபையாலும் பரிசுத்த ஆவியின் வழிநடத்துதலாலும் இந்தச் சொற்களஞ்சியத்தை தயார் செய்திருக்கிறார்கள். நாங்கள் சகோதரி குமுதாவுக்கு நன்றி கூறி கடவுளைத் துதிக்கிறோம். இந்த சகோதரிக்காக ஜெபிக்கும்படி வாசகர்களை வேண்டுகிறோம். நம் சகோதரி நமது தமிழ் கிறிஸ்தவ உலகிற்கு அருஞ்சேவை செய்திருக்கிறார்கள்.

இந்த அகராதியை அகர வரிசை செய்து ஒழுங்குபடுத்தி உதவிய திருச்சியைச் சேர்ந்த சகோதரர் N. இராஜேந்திரன் அவர்களுக்கும் நாங்கள் கடன்பட்டிருக்கிறோம். நமது O.V மொழிபெயர்ப்பு வேதாகமத்தை பயன்படுத்துவோருக்கு இந்நூல் பெரிதும் பயனுள்ளதாக இருக்கும்.

மற்றும் நாம் அதிகமாக விரும்பிப் பாடும் தமிழ்க் கீர்த்தனைப் பாடல்களில் பயன்படுத்தப்பட்டிருக்கும் பல தமிழ் வார்த்தைகளுக்கும் பொருள் தெரியாமலேயே இன்றைய தலைமுறையினர் அவற்றைப் பாடி வருகின்றனர். அத்தகைய சில சொற்களுக்கும் அருஞ்சொற் பொருள் பட்டியல் பின்னிணைப்பாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

இந்நூலைப் பயன்படுத்தி பொருள் தெரிந்து வேதாகமத்தைப் படித்தும், கீர்த்தனைகளைப் பாடியும் பக்திவிருத்தி அடைவோமாக.

# பொருளடக்கம்

பதிப்பகத்தார் உரை iii

தமிழ் வேதாகம சொற்களஞ்சியம் 1

பிற்சேர்க்கை:
தமிழ் கீர்த்தனை அருஞ்சொற்பொருள் 118

**அகணி நார்க்கயிறு** – withe or with - a flexible twig especially of willow. v.t- to bind with a withe or withes. It is flexible and wiry. தெங்கு, பனை முதலியவற்றின் உள்நார்; பனை மரத்தின் இலைப் பகுதியைத் தாங்கி நிற்கும் பட்டையிலிருந்து எடுக்கப்படும் நார் நியா. 16:7.

**அகத்தியமாய்** – Surely; Must. நிச்சயமாய், அவசியமாய் எண். 18:15; லூக். 14:18.

**அகழிகள்** – Brooks of defense. water in a ditch kept between two walls. அரண்மனை போன்ற இடங்களில் மதில் சுவரை ஒட்டி பாதுகாப்பு அரணாக அமைக்கப்பட்டுள்ள நீரோடை ஏசா. 19:6; 22:11.

**அகாதமான** – Pit. ஆழமான அதள பாதாளம், பாதாளம் ஏசா. 14:15.

**அகாலப்பிறவி** – Born out of due time. குறித்த காலத்திற்கு முன் பிறந்தவர், 1 கொரி. 15:8.

**அக்களிப்பு** – Rejoice, Joy. மகிழ்ச்சி, களிப்பு, கொண்டாட்டம் ஏசா. 14:29.

**அங்கலாய்ப்பு** – Complain, Complaint. கலக்கம், துக்கித்தல், மனக்குறையை வெளிப்படுத்துதல், புலம்பல் யோபு 7:11; 23:2.

**அசங்கியம்** – Filthiness, Immorality, Unclean, Abomination, Corruption. அருவருப்பு, அசிங்கம், அசுத்தம், தீட்டானவை எஸ்றா 6:21, 9:11.

**அசம்பிகள்** – Bodies, vessels உடம்பு, உடல்கள் 1 சாமு 21:5.

**அசறு** – A scab, sore one of the symptoms of leprosy. புண், இரணம் குஷ்டரோகத்தின் அறிகுறிகளில் ஒன்று லேவி. 13:2,7, 8.

**அசனம்** – Eating, consume சாப்பிடுதல், புசித்தல், உண்ணுதல். 2 சாமு. 9:7, 10, 11, 13;12:21.

**அசுப்பிலே** – Sudden, Suddenly திடீரென யோபு 9:23;22:10; சடிதி யோபு 9:5 சடுதி யோபு 21:17.

**அச்சாரம்** – Earnest, Assurance, Security, A Deposit, Guarantee, Safety. பாதுகாப்பு, பத்திரம், வைப்பு, உத்தரவாதம், முன்பணம். 2 கொரி. 1:22; 5:5; எபே. 1:14.

**அஞ்சனம்** – அஞ்சனம் என்றால் மை. அஞ்சனம் பார்க்குதல் என்றால், மை போட்டு மறைந்திருக்கிறவைகளைப் பார்க்கும் செயல் – Familiar Spirits, Enchanter, Medium. ஒரு மாய வித்தை. இது அஞ்சன வித்தை என்றும், அஞ்சனக் கலிக்கம் என்றும் கூறப்படும். கடவுள் இத்தகைய செயல்களை வெறுக் கிறார். லேவி. 19:31; 20:6; உபா. 18:10.

**அஞ்சிக்கை** – Fear. பயம் ஓசியா 3:5.

**அஞ்ஞானிகள்** – Fools, Gentiles, Heathen, Pagans. மூடர்கள், புறஜாதியார், நீர்மூடர், அறிவில்லாதவர்கள், நம்பிக்கையற்றவர்கள். சங். 49:10; 135:15; எசே. 20:32; மத். 6:7;32; 18:17; 1 கொரி. 5:1; 10:20; 12:2.

**அடாத காரியம்** – Not meet, Not fit, Not suitable, Not proper, Not right. தகுதியானதல்ல, ஏற்றதல்ல, உகந்ததல்ல, பொறுத்தமானதல்ல, சரியானதல்ல, ஒழுங்கற்ற. எஸ்றா 4:14.

**அடைகல்** – Anvil - a block of iron on which a blacksmith hammers his metal into the shape he desires. பட்டறைக்கல், பட்டடைக்கல், காதில் உள்ள ஓர் எலும்பு ஏசாயா 41:7.

**அடைப்பு** – Hedge, Fence, Boundary formerd of shrubs or small trees. அடைப்பு, மறைவு, பாதுகாப்பு அமைப்பு, சுவர்,

புதர்ச்செடிகளால் சிறு மரங்களால் முட்களால் ஆன வேலி. பிர. 10:8; ஏசாயா 5:5.

**அடைப்பப்பை** – Shepherds bag. மேய்ப்பர்களுடைய சிறிய தோல் பை, வெற்றிலைப் பை 1 சாமு. 17:40.

**அட்சரம்** –Language, letters, script. எழுத்து எஸ்தர் 1:22.

**அண்ணகர், அண்ணகன்** – Eunuchs - A male deprived of his Vitality - Some by birth and some by castration. (Employed as keeper of the women in the king's harem) ஆண் தன்மையற்றவன், அலி. முற்கால அரசனின் அந்தப்புரத்தில் அரசகுலப் பெண்களைக் கவனிக்கவும் காக்கவும் பணியாளனாக அமர்த்தப்பட்டவன் ஏசா 56:3, 4; மத் 19:12.

**அதம்** – Smite, Strike, Consume, cut off. அழித்தல் யாத். 12:12.

**அநந்த ஞானம்** – Manifold wisdom of God. All Kinds of wisdom of God intelligent, sensible, judicious, endured with reason and using it (Eg. The wisdom of Solomon, the king) அளவில்லாத ஞானம், அதிக ஞானம், பல மடங்கு ஞானம், எண்ணிறந்த ஞானம் எபே 3:10.

**அநாதி** - God, eternal கடவுள், புராதனம் அநாதி தீர்மானம் – என்றென்றைக்கும் உள்ள தீர்மானம் Eternal purpose. அநாதி சிநேகம் – நித்திய சிநேகம் Everlasting love. அநாதி தேவன் – Everlasting God, Eternal God எபே. 3:9; எரே. 31:3; மீகா 5:2; உபா. 33: 27; ரோம. 16:26.

**அநாதிக்காலம்** - Olden days, ancient days. பழைய நாட்கள், பூர்வகாலம். சங். 25:6. Eternal, everlasting, for ever and ever. என்றென்றைக்கும், நித்தியம், சதாகாலம், யுகாயுகம். நெகே. 9:5.

**அநாதி தேவன்** – The eternal God, The everlasting God. நித்திய தேவன், ஆதியந்தம் இல்லாத தேவன், முடிவில்லாத தேவன். ரோ. 16:25.

**அநுக்கிரக காலம்** – Acceptable time, accepted time, in a time accepted. The time of favour, kindness, help. அன்பு, ஆதரவு, உபகாரம், உதவி செய்யும் காலம் சங். 69:13; ஏசா. 49:8; 2 கொரி. 6:2;

**அநுக்கிரகம்** (இடத்திற்கு ஏற்றபடி பொருள் வேறுபடும்) – (1) I have accepted fovour தயவு, கருணை ஆதி 19: 21. (2) Kindness அன்பு, அநுகூலம் ஆதி 24:12, 14. (3) Grace தயவு, அன்பு, இரக்கம், கிருபை, உதவி ஆதி 33:11. (4) Blessing ஆசீர்வாதம் லேவி 25:21. (5) Given தந்தருளின, பாராட்டிய தயவு உபா 26:11. (6) Gift ஈவு – பிர 3:13; எபே 2:8. (7) Help உதவி, சகாயம் 1 நாளா 15:26; அப் 26:22. (8) Manifestation வெளிப்பாடு 1 கொரி 12:7. (9) Unspeakable gift, Geneorsity தேவன் அருளிய சொல்லி முடியாத ஈவு, தேவ அநுக்கிரகம் 2 கொரி 9:15. (10) Gift of God - தேவ அநுக்கிரம், கிருபை வரம், தேவனுடைய ஈவு – பிர. 3:13; எபே. 2:8.

**அநுசாரியாயிருந்தாரேயாகில்** - On his side, Uprightness, duty. பக்கம், பட்சம், துணை, உதவி. அநுசரித்து உதவி செய்கிறவராக இருந்தால் யோபு 33:23.

**அந்தகன்** – Blind man. கண்பார்வையற்றவன் ஏசாயா 42:19.

**அந்தக்கரணங்கள்** – Man's inward being, inward parts, the inmost place, heart. மனுஷனின் உள்ளார்ந்த பகுதி, ஆத்மாவின் உள்ளார்ந்த பகுதி, இருதயம், இருதயத்தின் அந்தரங்கம். யோபு 38:36; சங். 51:6.

**அந்தக்கேடு** – Disfigured, marred, Spoiled. உருக்குலைக்கப்படுதல், கெடுக்கப்படுதல் ஏசாயா 52:14.

**அந்தம்** – End. முடிவு, கடைசி ஏசாயா 46:10; வெளி. 1:8.

**அந்தரங்கம்** – Secret. இரகசியம், மறைவு, யாரும் அறியாமல் மத். 6:4. Secrets of heart within us. இருதயத்தில் உள்ள இரகசியம் சங். 44:21; ரோமர் 2:16.

**அந்தரம்** – Empty Place, nothing, Space. வெட்டவெளி, பிரபஞ்சம், வானவீதி, விண்வெளி யோபு 26:7.

**அந்தரவெளி** – In the plain, Road of the plain. சம பூமி, சம பூமியின் பாதை உபா. 2:8; wilderness வனாந்தர வழி உபா. 2:7.

**அந்தி** – Evening, Twilight (after sunset and before sunset). மாலை நேரம், சாயங்காலம் யாத். 12:6; எண். 9:3, 5; எஸ்றா 3:3; சங். 55:17. time of evening sacrifice. மாலை பலிசெலுத்தும் நேரம் 1 இராஜா. 18:29, 36; எஸ்றா 9:4, 5; தானி. 9:21.

**அந்தி சந்தி** – Evening and Morning. மாலை நேரம், காலை நேரம் 1 நாளா. 16:40; எஸ்றா 3:3; சங். 55:17.

**அந்திய காலம்** – End time, end days, dying time, and last time. முடிவு காலம், முடிவு நாட்கள், மரணம் நெருங்கும் காலம், கடைசிக்காலம் நீதி. 19:20; எபி. 11:22.

**அந்நியோந்நியம்** – Fellowship, Union, Unity. ஐக்கியம், ஒற்றுமை, ஒருமைப்பாடு, கூட்டுறவு அப். 2:42.

**அபத்தம்** – Lie, Vain, Detest, Rejection. பொய், வியர்த்தம், வீண், விருதா, வெறுத்தல், கைவிடுதல். லேவி. 26:44; ஏசா. 30:9.

**அபயம்** – Appeal. மேல்முறையீடு அப் 26:32; 28:19.

**அபரஞ்சி பூஷணம்** – அபரஞ்சி – புடமிட்டபொன்; பூஷணம் – அணி – An ornament of fine gold, Head dreses, Jewels of head. Prov 25:12; Ss 7:1; சிறந்த தங்கத்தாலான ஆபரணம். நீதி. 25:12; உன். 7:1.

**அபேட்சிக்கிற** – Desiring. ஆசைப்படுகிற, விரும்புகிற சங் 34:12.

**அபேட்சை** – Expectation, hope, desire. எதிர்பார்ப்பு, நம்பிக்கை, ஆசை, விருப்பம் நீதி. 10:28; யோபு 8:13; யோபு 34:36.

**அப்பியாசம்** – Tried, tested, proved, in use. பழக்கம், பயிற்சி. 1 சாமு. 17:19.

**அப்போஸ்தலர்** – Apostle(s). A title given to the 12 disciples of Jesus Christ who were chosen by Him, Ambassadors, preachers. இயேசு கிறிஸ்துவால் தெரிந்து, அழைக்கப்பட்ட 12 சீடர்களுக்குரிய பட்டம். தூதுவர், போதகர் மத். 10:2; லூக். 6:13; அப். 1:1.

**அமஞ்சி ஆட்கள்** – Levy, tribute, number of men enrolled for labour, forced to work, forced labourers. கடின வேலை செய்ய திரட்டப்பட்டவர்கள், கூலியின்றி வேலை செய்பவர்கள், அடிமைகள், உழைப்பாளிகள். 1 ராஜா 5:13, 14; 9:15, 21.

**அமரிக்கை** - Peace, Quiet, Quietness. அமைதி, சமாதானம் நியா. 18:7; சங். 119:165; ஏசா. 33:20; ஏசா. 32:18; சக. 1:11.

**அமளி** – Tumult, riot, uproar. கலகம், குழப்பம், சந்தடி 1 சாமு. 4:14; ஏசா. 17:12; ஓசி. 10:14; ஆமோ. 2:2.

**அமைச்சல்** – Rest, Quietness, tranquility அமைதி, சாந்தி, நிசப்தம் பிர. 4:6; 6:5.

**அம்பறாத்தூணி** - Quiver with full of arrows, case for holding arrows. அம்புகள் நிறைந்த உறை, அம்புகள் வைக்கும் கூடு ஆதி. 27:3; சங். 127:5, 6; புல. 3:13.

**அம்பாயம் / அம்பாயப்பட்டு** Pain, pangs, sorrowful, travail. வலி, வேதனை, துன்பம். மனகிலேசத்தில், தாங்க முடியாத துன்பத்தில், வேதனையில் துடிக்கிற. ஏசா. 26:17; மீகா 4:10; சக. 9:5.

**அம்பாரம்** – Heap, mound, குவியல், தானிய குவியல். 2 நாளா. 31:10; உன். 7:2.

**அயனங்கள்** – Courses, the path in which the stars move. Direction of the movement of the stars. நட்சத்திரங்கள் தங்கள் அயனங்களிலிருந்து என்றால், அவைகள் தங்கள் ஓடுபாதையிலிருந்து, மார்க்கங்களிலிருந்து என்று பொருள். நியா. 5:20.

**அயுக்தம்** – Foolish and undisciplined, Unlearned, Stupid. அறிவில்லாத, முட்டாள்தனமான, கல்லாத, கற்றறிந்தவராயிராத. 2 தீமோ. 2:23.

**அரணிப்பான இடங்கள்** – Strongholds. பாதுகாப்பான இடங்கள் 1 சாமு. 23:19; 24:22.

**அரதேசிகள்** – Aliens, Foreigners, Strangers. அயலான், அயல் நாட்டவர், வேற்றுமனிதர் 1 நாளா. 29:15.

**அரி** – Cuttings, Bundles of grain, Sheaves. அரிகள், அரிக்கட்டுகள், தானிய கதிர்கட்டுகள், அறுவடைக்குப்பின் சிந்திக்கிடக்கிற தானியக் கதிர்கள். ஆதி. 37:7; ரூத் 2:7, 16.

**அரிபிளவை** – Canker, gangrene, eating sore, Mortification of part of the body. மாம்சத்தைத் தின்று விடும் புண் 2 தீமோ. 2:17.

**அருக்களிப்பு** – Horror, Dread, Excessive Fear, Terrify, overwhelm, overpower, crush, Destroy. அதிக பயம், அச்சம்,

திகில், பயப்படுத்து, பயங்கரம், அடக்கு, மேற்கொள், நசுக்கு யோபு 3:5; சங். 55:5.

**அருக்களிப்புமானேன்** – Abomination, Dread, Reproach. அருவருப்புமானேன், பயங்கரமானேன். சங். 31:11.

**அருணோதயம்** – Dawn, Dayspring, Sunrising, morning. சூரிய உதயம், விடியல், விடியற்காலை, வைகறை. யோபு 38:13; உன். 6:10; லூக். 1:79.

**அரோசிகம்** – Abhor, Despise. வெறுத்தல், வெறுப்பைத் தெரிவித்தல், இகழுதல், இழிவாய்க் கருதுதல். லேவி. 20:23; 26:11, 15. Food Poison. கெட்டுப்போன நச்சு உணவு யோபு 6:7; Loathsome அருவருப்பு, வெறுப்பு. ஏசா. 66:24.

**அரோசிக்கிறேன்** – Despise, Dislike, Loathe. வெறுக்கிறேன் யோபு 7:16; 9:21.

**அரைகள்** – Loins, waist இடுப்பு ஆமோஸ் 8:10; லூக். 12:35.

**அரையேர் நிலம் (அரை ஏர் நிலம்)** – About half an acre of land. அரை ஏக்கர் நிலம். Area that a team of oxen could plough in one day. காளைகள் ஒரு நாளில் உழும் அளவான நிலம். 1 சாமு 14:14.

**அர்ப்பிதம்** – A Sacred portion, Holy District. அர்ப்பணிக்கப்பட்ட நிலம் பிரித்தெடுக்கப்பட்ட பகுதி. எசே. 45:1.

**அலங்கம்** – City wall, Rampart, wide bank of earth with a wall to defend a fort. நகரத்துக் கோட்டைச் சுவர் யோசு. 2:15; 2 சாமு. 20:15.

**அலங்கத்திலிருக்கிற கெவுனி** – Roof over the gate unto the wall. கோட்டைச் சுவர் மேலிருக்கும் நுழைவாயில் 2 சாமு .18:24.

**அலப்புதல்** – Babbling, Chattering, Prating. வீண் பேச்சு, வம்பு பேச்சு, வம்பு அளத்தல் நீதி. 10:10; பிர. 10:11.

**அலரிகள்** – Poplars, willows, a kind of plant with thick branches growing near waters. தண்ணீர் அருகில் வளர்கிற எளிதில் வளையும் அடர்ந்த கிளைகளை உடைய செடி. யோபு 40:22; சங். 137:2.

**அலைவுண்ணும்** – Will be weak as water. பெலனற்றுப் போகும் எசே. 21:7.

**அல்பா/ அல்ஃபா** – Alpha – First letter in Greek alphabet. கிரேக்க எழுத்துகளில் முதல் எழுத்து. இது துவக்கத்தைக் குறிக்கும் எழுத்து வெளி. 1:8, 11.

**அல்லேலூயா** – Alleluia, Allelujah, Hallelujah – means Praise ye Jah, It occours as a short doxology in the Psalms usually at the beginning. eg Ps 111; 112 or at the end. eg. Ps 104, 105 or both e.g. Ps106, 135. Alleluia, without initial H is a misspelling – Praise the Lord. Ps 104:35; Rev 19:6 இது சங்கீதங்களில் ஆரம்பத்தில் (111, 112), இறுதியில் (104, 105) அல்லது ஆரம்பத்திலும் இறுதியிலும் (106, 135) வருகிறது. முதல் எழுத்து 'எச்' இல்லாமல் உச்சரிப்பது தவறு. கர்த்தருக்குத் துதி, தேவனைத் துதியுங்கள், தேவனுக்குப் புகழ் உண்டாவதாக என்று இதற்குப் பொருள். சங். 104:35; வெளி. 19:6.

**அவயம் காத்தல்** – Hatching. அடைகாத்தல் எரே.17:11.

**அவயவம்/ அவயவங்கள்** – Organ of the body, members of the body. அங்கம், அங்கங்கள், சரீரத்தின் உறுப்புகள் யோபு 17:7; சங். 139:16; ரோமர் 6:13.

**அவாந்தரம்** – Useless earth. பயனற்ற நிலம் ஏசா. 40:23. வெற்று வெளி. Vanity – பயனற்ற பொருள்.

**அவாந்தர வழி** – Desolate way, solitary way. வனாந்தரத்திலே பாழான வழி சங். 107:4.

**அவாந்தர வெளி** – Barren land, wilderness, a place unfit to live in. வறண்டநிலம், வனாந்தரம், குடியிருக்க தகுதியற்ற நிலம். சங். 107:33, 35; ஏசா. 6:11;

**அவிழ்தம் /அவிழ்தங்கள்** – Medicine, Remedies, Healing Agent. மருந்து, ஆரோக்கியம் உண்டாக்கும் பொருள். எசே. 47:12; வெளி. 22:2;

**அழிம்பு** – Destruction, Devastation அழித்தல், பாழ்படுத்துதல், நாசம் விளைவித்தல். தானி. 8:24; 2சாமு. 14:11.

**அழிம்பன்** – Great waster. அழிவை உண்டாக்குபவன் நீதி. 18:9.

**அழுங்கு** – Chameleon. பச்சோந்தி லேவி. 11:30.

**அளகபாரம்** – Hair. கூந்தல், சிகை, முடி. உன். 4:1; 6:5.

**அறுதி** – Permanently, for ever நிரந்தரமாக, எப்போதுமாக, முடிவாக லேவி. 25:23.

**அறுமீன்** – Pleiades, Heap, cluster. A constellation of seven large and other smaller stars in the eastern sky, found in Tarsus (the bull) more particularly in the shoulder of the animal. ஏழு நட்சத்திரங்களின் தொகுப்பு. ஒரு தொகுதி நட்சத்திரக் கூட்டத்தில், நட்சத்திரங்களை ஒரு கற்பனைக் கோட்டினால் இணைத்தால் ஒரு உருவம் கிடைக்கும். அவ்வாறு கிடைத்த காளையின் உருவத்தின் தோள் பகுதியில் காணப்படும் நட்சத்திர தொகுதியே அறுமீன் நட்சத்திரம் எனப்படும். இது கிழக்கு வானில் கார்த்திகை மாதத்தில் தோன்றும் நட்சத்திரம் யோபு 9:9;38:31; ஆமோஸ் 5:8.

**அற்பர், அற்பன்** – Despised, Contemptible. வெறுக்கப்பட்டவன், இழிவாய்க் கருதப்பட்டவன், ஏளனமாய்க் கருதப்படுபவன் மல். 2:9; 1 கொரி. 1:28.

**அஸ்தகடகங்கள்** – Bracelets, an ornament for the wrist, wrist chain, Armlets. It is also worn in the arms. கடகம், காப்பு, கைவளை. புயத்திலும் அணியும் ஆபரணம் எண். 31:50; 2 சாமு. 1:10;

**அஸ்தி/அஸ்திகள்** – Bone, Bones. எலும்பு/எலும்புகள். ஆதி. 50:25; யாத். 12:46;

**அஸ்திராயுதம்** – Weapon of war, weapon of His indignation. கோபத்தின் ஆயுதம், யுத்த ஆயுதம் ஏசா. 13:5; எரே. 50:25; 51:20.

**அஸ்வம்** – Horse, Stallion. குதிரை எரே. 8:16.

**ஆகடியம்** – Mocking, கேலி செய்தல், பரிகசித்தல், ஆகடியம் பேசுதல் என்றால் விபரீதமாக அடங்காமல் பேசுவது நீதி. 1:26; 6:12; ஆப 1:10.

**ஆகமம்** – Book, commandment, Scripture, Record, Testimony, Treatise. புத்தகம், வேதபுத்தகம், நடபடி புத்தகம், பிரபந்தம், சரித்திரம், கிரந்தம், ஏடு, நூல், தர்மநூல், முதல்வன் வாக்கு, உறுதிப்பத்திரம். 2 ராஜா. 11:12; மாற். 1:2; 12:26.

**ஆகாமியம்** – wicked deeds, Evil deeds, wickedness. அக்கிரமம், கெடுதல், பொல்லாங்கு, துன்மார்க்கம், துர்க்கிரியை, துர்நடத்தை, தீமை நெகே. 9:33, 1 சாமு. 24:13; சங். 10:15;

**ஆகாயத்துருத்திகள்** – Bottles of heaven or water jars, water jars of heaven, Thick clouds of the sky. வானத்தின் தண்ணீருள்ள குடங்கள், கார்மேகங்கள், கரும்புனல்கள் யோபு 38:37, சங். 18:11.

**ஆசரிக்கக்கடவீர்கள்** – You shall keep it. கடைபிடித்தல் கைக்கொள்ளுதல், கொண்டாடுதல் யாத். 12:14; 23:14, எண். 9:3; கைக்கொள்ளக்கடவீர்கள்.

**ஆசரிப்புக் கூடாரம்** – Tabernacle, Tent of meeting. கர்த்தர் வாசம் பண்ணும் பரிசுத்த வாசஸ்தலம். கர்த்தர் இஸ்ரவேல் மக்களை சந்திக்கும் இடம். இஸ்ரவேலர் தேவனைத் தேடும் கூடாரம் யாத். 33:7.

**ஆசனம்** – A Seat. இருக்கை, உட்காரும் இடம். வகைகள்: இராஜாசனம், கிருபாசனம், சிங்காசனம், நியாயாசனம். நீதி. 9:14; மத். 21:12.

**ஆசனவழி** – Anus மலம் கழியும் வாய். மத். 15:17.

**ஆட்டுத்தோழங்கள்** (ஆட்டுத்தொழுவங்கள்) – Sheep pens. ஆடுகள் அடைக்கப்படும் பட்டி செப். 2:6.

**ஆணம்** – Broth, a thin soup, meat soup. நீர்த்த திரவம் போன்ற ஆகாரம், குழம்பு. நியா 6:19, 20.

**ஆதிக்கக்காரன்** – Ruler, Officer. அதிகாரி, அதிகாரமுள்ளவன், உரிமைக்காரன் 2 நாளா. 26:11.

**ஆதியாகமம்** – Genesis. Beginning, Birth, origin. ஆதி+ ஆகமம் = ஆதியாகமம். ஆதியான ஆகமம், ஆரம்ப புத்தகம், ஆரம்பங்களை உள்ளடக்கிய புத்தகம், ஆரம்பம், மூலம், உற்பத்தி மற்றும் மனித வரலாற்றின் துவக்கம் பற்றிக் கூறும் ஆகமம். வேதாகமத்தின் முதல் ஆகமம்.

**ஆதீனம்** – Authority, Belonging, Power, Bondage, Servants. அதிகாரம், சுதந்திரம், ஆளுகை, வேலைக்காரராக இருத்தல், சொந்தமாகுதல். ஆதி. 47:19;25; 1 சாமு. 6:18; அப். 1:7.

**ஆத்துமா** – Soul, Inner being, Inward man. Related to bodily and worldly things such as emotions, feelings. தேவன்

மனுஷனுடைய நாசியிலே ஊதி உயிர் பெறச் செய்தபோது (ஆதி 2:7) மனிதன் ஜீவாத்துமா ஆனான். இந்த ஆத்துமா சரீரம் முழுவதும் வியாபித்து இதுவே (Inner being) உள்ளான மனிதன் (Living being) ஆத்துமா என்று அழைக்கப்படுகிறது. ஆத்துமா அழிவில்லாதது. இது சரீர காரியங்களிலும் உலகக் காரியங்களிலும் மன உணர்களோடும் தொடர்புடையது. பாவத்தில் விழவும் நரகத்துக்குச் செல்லவும் கூடியது, எனவே தான் ஆத்துமா இரட்சிப்பு, ஆத்தும மீட்பு என்று சொல்லப்படு கிறது. ஆதி 2:7; மத்10:28; 1 தெச 5:23.

**ஆபரணாதிகள்** – Rows of Jewels, Ear rings, Choice ornaments that adorn the cheeks. ஆபரணங்களின் தொகுப்பு, காதணிகள், கன்னங்களை அலங்கரிக்கும் ஆபரணங்கள். உன் 1:10.

**ஆமென்** – Let it be so, Firm, Faithful, True, Established. அப்படியே ஆகக்கடவது, அப்படியே ஆவதாக. A word used to affim and confirm a statement. ஒரு வாக்கை உறுதிப்படுத்தும் சொல். One of the names of God. தேவனுடைய பெயர்களில் ஒன்று உபா. 27:15–26; சங். 106:48; வெளி. 3:14; 22:21.

**ஆயக்காரன்** – Publican, Tax Collector. வரி வசூலிப்பவன், தண்டல்காரன் மத். 9:10, 11; லூக். 19:2.

**ஆயம்** – (பகுதி – toll, duty தீர்வை – tribute; ஆயம், சுங்கப்பணம்-custom). மத். 17:24,25; ரோமர் 13:7.

**ஆயாசம்** – Fast asleep, weary. ஆழ்ந்த தூக்கம், களைப்பு நியா. 4:21 fainting, grief. சோர்ந்து போதல், துன்பம் யோபு 4:2 Discouraged Job 4:5. தைரியம் இழத்தல் யோபு 4:5. Impatient பொறுமையின்மை.

**ஆயிரவர்கள்** – Thousands (of Israel). ஆயிரம் பேர்களான இஸ்ரவேலர். எண். 1:16; 10:36.

**ஆயிரம் பேருக்கு அதிபதி/ ஆயிரம்பேருக்கு தலைவர்** –Head of thousand, captain of the thousand. ஆயிரம் பேருக்கு தலைவர் யோசு 22:21; 1 சாமு. 17:18.

**ஆயுததாரி** – Armour bearer. அரசனின் போர் ஆயுதங்களைச் சுமப்பவர், ஆயுதங்களை வைத்திருந்து அவ்வப்போது எடுத்துக்கொடுப்பவர். 1 சாமு. 14:6.

**ஆரங்கள்/ஆரம்** – Bracelets, Ornament for the wrist ஆதி. 38:18, 25. Crescent ornaments, collars கழுத்துப்பட்டை அணிகலன் நியா. 8:26. Chains of gold. Strings of gold. பொன்சங்கிலிகள், பொற்சரம் உன். 1:10; ஏசா. 3:19.

**ஆரோகணம்** – A Song of degrees, A Song of ascents. From Ps 120 to Ps 134 are Called song of degrees. ஆரோகணம் என்றால் ஏறுதல் என்று பொருள். மலைகளின் மேலுள்ள பட்டணமாகிய எருசலேமுக்கு கர்த்தரை ஆராதிக்கச் செல்லும்போது இந்தப் பாடல்களைப் பாடிக்கொண்டே செல்வார் கள். 120 முதல் 134 வரை உள்ள சங்கீதங்கள் ஆரோகண சங்கீதங்கள் என அழைக்கப்படும்.

**ஆலெப்** – Aleph. This is the first letter in Hebrew alphabet. எபிரெய மொழியில் இது முதல் எழுத்து 119 ஆம் சங்கீதம் 22 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பகுதியும் ஒவ்வொரு எபிரெய எழுத்தை தலைப்பாகக் கொண்டுள்ளது.

**ஆவலாதியான** – Bringing an evil name upon a person, shameful things. ஒரு நபர் மேல் அவப்பெயரைக் கொண்டு வருதல், அவதூறு, வெட்கக் கேடான காரியம். உபா 22:14, 17

**ஆவி** – Spirit, Ghost, Breath, wind. Leads to God, Spirit is that part related to worship and divine communion. The soul is said to be lost but not the spirit. 'ஆவி' தேவனை ஆராதிக்கவும் தெய்வீக காரியங்களில் ஒருமையுடன் பங்கேற்பதற்கும் உதவுகிறது. ஆதி. 2:7. ஆத்துமா இழந்துபோகக் கூடும், ஆனால் ஆவி அழியாது. ஆதி. 25:8. நீதி. 20:27. யோவான் 10:17.

**ஆழாக்கு**– Liquid measure. It is equal to 0.3 litre. திரவப்பொருளை அளக்கும் முகத்தல் அளவை. 1 ஆழாக்கு – 0.3 லிட்டர். லேவி 14:10.

**ஆழி** – Depths (of water). யாத் 15:5. தண்ணீர்களின் ஆழம். யோனா 2:5.

**ஆளோட்டிகள்** – Task masters. கடிந்து வேலை வாங்குபவர்கள், கடுமையாக வேலைவாங்குபவர்கள். யாத் 3:7.

**ஆற்றலரி** –Willows of the brook. அலரிச் செடிகள் யோபு 40:22 சங். 137:2.

**இக்கட்டு** – Troubles, Distress. உபத்திரவம், சஞ்சலம், இடுக்கண், சிறுமை, கஷ்டம், துன்பம், நெருக்கம், பாடு, வருத்தம். யோபு 5:19; சங் 25:22; 116:3; 1 ராஜா 1:30.

**இச்சக உதடு** – Flattering Lips, Praising insincerely, Telling lies. பொய்யாகப் புகழும் உதடு, பொய்பேசுதல் சங் 12:2, 3.

**இச்சகம்** – Flattery. முகஸ்துதி, பொய்யாகப் புகழுதல். தானி. 11:21.

**இச்சகம் பேசி அடங்குவார்கள்** – Will Cower, Crouch in fear or shame. பயத்தினாலாவது வெட்கத்தினாலாவது ஒடுங்கு வார்கள். உபா 33:29; சங் 81:15.

**இஸ்ரவேலில் ஆயிரவர்களுக்கு தலைவர்** – Heads of thousands in Israel, Captains of thousands. ஆயிரம் பேர்களுக்குத் தலைவர் எண்1:16, 1 நாளா 13:1.

**இடுக்கண்** – Strait, Deep distress, oppression துன்பம், வருத்தம், வேதனை, கொடுமை. 2 சாமு. 24:14; சங். 116:3; ஏசா. 53:8.

**இடுக்கம்** –Trouble. துன்பம். சங். 143:11. Affliction. வேதனை, கஷ்டம். சக10:11.

**இடும்பு** – Behave proudly, proud. பெருமையாக நடத்தல், அகந்தையாக நடத்தல். யாத். 18:11, எரே. 50:29, 31; உபா. 17:12.

**இடைந்து** – Retreat, Fall back. பின்வாங்குதல், புறங்காட்டி ஒடுதல், தாழ்ந்து போதல், ஒதுங்கல் சங் 44:10.

**இதமியப்பட்டு / இதமியம்** – Glad, Rejoice. சந்தோஷம், மகிழ்ச்சி. இதமியப்பட்டு – மகிழ்ச்சியடைந்து நியா. 18:20.

**இந்திரியம்** – Man's Seed of Copulation, Semen that is discharged from a man. தாது, ஆணிடமிருந்து வெளியாகும் உயிரணு திரவம் லேவி. 15:16, 32.

**இந்து தேசம்** – India. இந்தியா எஸ். 1:1; 8:9.

**இரக்க** – To beg. பிச்சை எடுக்க, யாசிக்க. லூக்கா 16:3; சங். 37:25.

**இரட்சண்யம்** – Salvation. இரட்சிப்பு சங். 51:12; லூக்கா 2:32; வெளி. 19:1.

**இரட்சிப்பு** – Salvation, Saving. காப்பாற்றுதல், காப்பாற்றப்படுதல். பாவத்திலிருந்து, நரகத்திலிருந்து, ஆபத்திலிருந்து காக்கப்படு தல். ஆதி. 49:18; மத். 14:30.

**இரட்டு** – Sack Cloth. சாக்கு போன்ற கடினமான உடை. துக்கமான சமயத்தில் அணியும் இப்படிப்பட்ட உடை. நெகே. 9:1; யோவேல் 1:8.

**இரட்டைப்புரை உடுப்பு** – Clothed with scarlet or double garments. சிவப்பு நிற ஆடை, குளிரைத் தங்கும் உடை நீதி. 31:21

**இரண்டகம்** – Rebel, Rebellion, Transgression against God. துரோகம், கலகம், மீறுதல், முரட்டாட்டம் யோசு. 22:19, 22; 1 சாமு. 15:23; ஓசியா 7:13.

**இரண்டாம் கந்தாயத்துப் புல்** – Late Crop, Later growth. இரண்டாம் விளைச்சல், இரண்டாம் விளைச்சல் புல், இரண்டாம் விளைவு ஆமோஸ் 7:1.

**இரண்டு காசு** – Lepta. Two Mites. கிரேக்க சிறிய நாணயம், செப்பு நாணயம் லூக்கா 21:2.

**இரண்டு மாறாத விசேஷங்கள்** – 1. The blessing of Abraham to gentiles. 2. Abraham being a High Priest accroding to the order of Melchizedec to Jews and Gentiles 1. ஆபிரகாமின் ஆசீர்வாதம் 2. மெல்கிசேதேக்கின் முறைமை யின்படி பிரதான ஆசாரியர் ஆக இருக்கிறீர் என்று கட்டளை யிட்டார் சங். 110:4; கலா. 3:6–16; எபே. 2:11–18; அப். 15:9 எபி. 6:13–20

**இரம்மியமாய்** – Enjoy, Rejoice. மனமகிழ்ச்சியாய், மிகுந்த சந்தோஷமாய் லேவி. 26:34; உபா. 28:63.

**இராகாப்** – Rahab, the Serpent, Leviathan the piercing Serpent, The Dragon in the sea. இராகாப் என்னும் வலுசர்ப்பம் ஏசா. 51:9; லீவியாதான் என்னும் பாம்பு ஏசா. 27:1; சமுத்திரத்தில் உள்ள வலு சர்ப்பம் ஏசா. 27:1.

**இராசிகள்** – The constellations. நட்சத்திரக் குழுக்கள், நட்சத்திர குடும்பங்கள். துருவ சக்கர நட்சத்திரங்கள் யோபு 38:32

**இராணுவச் சம்பிரதி** – Principal Scribe of the host. படைத் தலைவர் 2 இராஜா. 25:19.

**இராணுவச் சேர்வைக்காரர்** – Captains of the army. படைத் தளபதிகள் நெகே. 2:9.

**இராயன்/ ராயன்** – Title of the Roman Emperors. ரோம பேரரசர்களின் பட்டப்பெயர் லூக்கா 2:1; 20:24, 25.

**இளக்கரிக்கப் பண்ணினார்** – Maketh my heart soft. மனம் தளரச் செய்தார். உள்ளம் குன்றச் செய்தார் யோபு 23:16.

**இளக்கரிப்பதுமில்லை** – Not fail, not falter, not discouraged. தளருவதில்லை, சோர்ந்து போவதில்லை ஏசா. 42:4.

**இளப்பம்** – Bad, poor, lean. தரம் குறைந்த, கெட்ட, மோசமான, சத்து இல்லாத லேவி. 27:10, 12; எண். 13:20.

**இன்னோம் குமாரரின் பள்ளத்தாக்கு** – Valley of the children of Hinnom. Josh 18:16 It is situated to the South and west of Jerusalem. It is a deep and narrow ravine with steep, rocky sides. இராட்சதரின் பள்ளத்தாக்கில் வடக்கே இருக்கிறது யோசுவா 18: 16. இது எருசலேமுக்கு தெற்கிலும் மேற்கிலும் அமைந்துள்ள குறுகிய ஒடுக்கமான வழி, யோசு. 15:8; 18:16.

**ஈசல்** – Hiss, Scoff. இகழ்ச்சி, அலட்சியம், அவமதிப்பு, ஏளனம், பரிகாசம் புல. 2:16; செப். 2:15.

**ஈசோப்பு** – Hyssop used in sprinkling blood. Used in quenching the thirst of a victim on the cross. This is a member of the mint family. Used for Purification. இரத்தம் தெளிக்க இதன் கொழுந்து பயன்பட்டது யாத். 12:22.

சிலுவையில் அறையப்பட்டவரின் தாகத்தைத் தீர்க்க பயன்பட்டது யோவா. 19:29. இது புதினா குடும்பத்தைச் சேர்ந்த செடியாகும். சுத்திகரிப்புக்கு பயன்படுத்தப்பட்டது லேவி. 14:4, 6.

**ஈட்டித் தாங்கு** – Staff of the spear. ஈட்டித்தண்டு 1 சாமு. 17:7.

**ஈளை** – Consumption. Levi 26:16. (The name for tuberculossis in the olden times) அழிவு, சய ரோகம், உருக்கிநோய். லேவி. 26:16.

**உகந்த** – Pleased. பிரியமான, பிடித்த, ஏற்ற 1 இராஜா. 3:10.

**உக்கல்** – Rottenness. கெட்டுப்போன, கேடு. ஆப. 3:16.

**உக்கிராணக் கணக்கு** – Stewardship, Managemnt. நிர்வாகக் கணக்கு, உத்தியோகம். லூக்கா 16:2, 3.

**உக்கிராணக்காரன்** – Steward, Manager, Superintendent மேலாளர் (கணக்குப்பிள்ளை), மேற்பார்வையாளர், காரியஸ்தர், நிர்வாகஸ்தர். லூக். 16:1; 16:3; 1 கொரி. 4:1, 2; 1 பேது. 4: 10.

**உசாவு துணை** – Advice offering, Advisor, Counsel. புத்திமதி வழங்குதல், ஆலோசனை வழங்குதல், அதனை வழங்குபவர். யோபு 26:3.

**உச்சிதம்** – The best (fruits, goods etc., ) Articles of value, Precious things, Valued gifts, The Finest. சிறந்தவை (பழங்கள், பொருட்கள்) மதிப்புள்ளவை, விலை உயர்ந்தவை, மதிப்பு மிக்க அன்பளிப்புகள், நேர்த்தியானவை. ஆதி. 43:1, சங். 81:16.

**உடந்தை** – Join, with. கூட்டுறவு, சேர்க்கை 1 இராஜா. 1:8.

**உடன்படிக்கை** – Covenant, Testament ஏற்பாடு, நியமம், உறுதிப்பாடு, உறுதிமொழி, ஆதி. 6:18; வெளி. 11:19.

**உட்கையான** – In one's hand, on one's side. The hand is with some one. பட்சம், பக்கம், உதவியாக இருப்பது, ஒருவருக்கு இரகசிய ஆலோசனையளிப்பது 2 சாமு. 3:8; 14:19.

**உத்தண்டங்கள்** – Exactions. உக்கிரம், துணிவு, வலிமை எசே. 45:9.

**உத்தர மண்டலம்** – North region, North. வடதிசை, வடதிசை விண்மீன் மண்டலம், வடக்குப் பகுதி யோபு 26:7.

**உத்தரிக்கக்கூடாது** – I Cannot endure. I cannot suffer, I can not do such things. ஈடுசெய்ய முடியாது, சகிக்க முடியாது யோபு 31:23.

**உத்தரித்ததினிமித்தம்** – The Suffering (of death), Suffered. (மரண) அவஸ்தைப்பட்டதினிமித்தம் எபி 2:9.

**உத்தரம்** – Answer, Reply. பதில், மறுஉத்தரம், மாறுத்தரம் ஆதி. 45:3.

**உத்திரம்** – Beam, Log of wood. கட்டடத்தின் கூரையைத் தாங்கும் பெரிய மரம். நெகே. 3:3, 6.

**உத்தாரம்**– Permission, Order. மறுமொழி, கட்டளை, உத்தரவு. 2 இராஜா. 23:9.

**உத்தியோகஸ்தர்** – Officer, Guards அலுவலர், பணியாளர், காவலர் 2 இராஜா. 11:18.

**உபகாரம்** – Reward, Favour, benefits, gift. பலன், தயை, நன்மை, பரிசு 2 சாமு. 19:36; சங். 103:2.

**உபகாரிகள்** – Benefactors, very good persons. உதவுபவர்கள், நல்லவர்கள், நன்மை செய்பவர்கள் 1 சாமு. 25:15.

**உபசார நிருபங்கள்** – Letters of Commendation. பரிந்துரைக் கடிதங்கள் 2 கொரி. 3:1.

**உபாகமம்** – Deuteronomy. It is the fifth book in the Bible. Christ has quoted from this book. The meaning of the title of this book is "Second law". It is a marvelous book worthy of careful study. Deuteronomy is a re-statement of the law for the new generation that had arisen during the wilderness journey. They were about to enter the promised land. In order to enjoy God's blessing there, they must know the law and obey it. இப்புத்தகம் வேதாகமத்தில் 5–வது புத்தகம் ஆகும். இயேசு கிறிஸ்துவானவர் இப்புத்தகத்திலிருந்து வசனத்தை மேற்கோள் காட்டியுள்ளார். இப்புத்தகம் "இரண்டாவது பிரமாணம்" என்னும் பொருள் கொண்ட பெயரைப்பெற்றுள்ளது. இது கவனத்துடன் படிக்கவேண்டிய வியத்தகு நூல் ஆகும். பாலைவனத்தில் தோன்றிய புதிய தலைமுறையினருக்காகக் கொடுக்கப்பட்ட நியாயப்பிரமாணத்தின் மறு அறிவிப்பே உபாகமம் ஆகும். அவர்கள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்குள் வெகுவிரைவில் செல்லவிருந்தார்கள். அங்கு தேவனுடைய ஆசிர்வாதத்தை அவர்கள் பெற்று மகிழவேண்டுமெனில் அவர்கள் நியாயப்பிரமாணத்தை அறிந்திருக்கவும் அதற்குக் கீழ்ப்படியவும் வேண்டும்.

**உபாதி** – Plague, Pains. நோய், வியாதி, வாதை சங். 73: 5; அப். 2:24.

**உபாத்தி, உபாத்தியாயன்** – Teacher, Instuctor, School master போதகன், உபதேசியார், ஆசிரியர். ரோமர் 2:20; கலா. 3: 24, 25.

**உபாயம்** – Deal Wisely, the devices of the crafty, deceit, ஞானமாக செயல்படுதல், தந்திரம், தந்திரமான யோசனை, ஏமாற்றுதல். யாத். 1:10; யோசு. 9:4; யோபு 5:12; சங். 83:3; 119:118; 2 கொரி. 12:16.

**உப்பரிகை** – Pinnacle, Top of the house, Top of the temple. மேல் மாடி, மேல்தளம், ஆலயத்தின் உச்சி. மத். 4:5; 2 சாமு. 16:22.

**உம்பிளிக்கை** – Inheritance, Possession. சுதந்தரம், சொந்தம், மானியம் எஸ்றா 9:12

**உராய்ஞ்சுகிற பட்சி** – A hunting bird, very hungry bird, very greedy bird, Plundering bird. வேட்டையாடுகிற பட்சி, பசியுள்ள பறவை, பேராசையுள்ள பறவை, கொள்ளையடிக்கிற பறவை. ஏசாயா 46:11.

**உருக்கு வில்** – Bow of steel. இரும்பு வில் யோபு 20:24; சங். 18:34.

**உருட்சியான** – Round in shape. உருண்டையான. யாத். 16:14.

**உலாத்திக்கொண்டு** – Walking (around). நடத்தல், நடந்து கொண்டு, உலாவுதல் 2 சாமு. 11:2; தானி. 4:29.

**உவர்நிலம்** – Salty land, Barren land. உப்பு நிலம், வறண்ட நிலம். யோபு 39:6; சங். 107:34; எரே. 17:6.

**உவர்மண்** – Lye, Nitre, Soil used for washing clothes. சோப்பு, சலவைத்தூள், அழுக்கை நீக்க பயன்படுத்தும் மண் எரே. 2:22.

**உழன்று** – Weary. களைப்படைந்து, சோர்ந்து, வருத்தமடைந்து. ஏசா 57:10.

**உளவு** – Spying, collecting information Secretly. இரகசியமாக தகவல் சேகரித்தல், வேவு பார்த்தல் கலா. 2:4

**உளுப்பு** – Rottenness, Decay. அழுகிய, கெட்டுப்போன ஓசி. 5:12.

**உளை** – Mire. உள்ளான மனுஷன். சங். 51:6.

**உள்ளம்** – Inward parts, Inmost being, Inner man. மனம், சிந்தனை சங். 26:2 இருதயம் உபா. 6:6.

**உள்ளிந்திரியங்கள்** – Mind, Heart. மனம், சிந்தனை சங். 26:2; இருதயம் உபா. 6:6.

**உறுக்குதல்** – Wrath, Fear. கோபம், நீதி. 19:12 பயம் நீதி. 20:2.

**உற்பவ காலத்திட்டம்** – The time of life. உற்பவ என்றால் ஒரு பிராண உற்பத்தி காலம். ஒரு உற்பத்தி காலத்திட்டம். ஆதி. 18:10; 2 இராஜா. 4:16,17.

**ஊடை** – Woof of linen. Thread that crossess the warp in weaving. நெய்யும்போது குறுக்குவாக்கில் செல்லும் நூல் ஊடை எனப்படும் லேவி. 13:48,49.

**ஊத்ஸ்** – Uz. This was the country in which Job lived. இந்த தேசத்திலே யோபு குடியிருந்தார். யோபு 1:1.

**ஊரீம் (ஊரீம், தும்மீம்)** – Urim, Thummim. Lights and perfections. They were kept in the breast plate. They were some type of device used to understand messages from Yahweh. Ex 28:30; Deu 33:8. "ஊரீம்" என்றால் ஆம் என்றும் "தும்மீம்" என்றால் இல்லை என்றும் பொருள். இவை ஆரோனின் பரிசுத்த வஸ்திரங்களின் மேல் பதிக்கப்பட்டிருக்கும் விலையேறப்பெற்ற இரண்டு இரத்தினக் கற்கள். தேவனிடமிருந்து பதில் வரும்போது அதற்குரிய கல் பிரகாசிக்கும். யாத். 28:30; உபா. 33:8.

**ஊர்** – Ur. The native land of Abraham. ஆபிரகாம் வசித்த ஊரின் பெயர். ஆதி 11:28,31.

**ஊன்** – Nourishment, Marrow, Strength. ஊட்டச்சத்து, சத்து ணவு நீதி. 3:8 எலும்பு மஜ்ஜை, பலம் எபி. 4:12.

**எட்டி** – Wormwood. kind of plant with a bitter taste. Bitterness. கசப்பு உபா. 29:18; ஆமோ. 5:7.

**எத்த ஒட்டாதே** – Don't allow to deceive. ஏமாற்ற விடாதே 2 இராஜா. 19:10

**எத்தனம்** – Plan, Plot, Devise, Conspire. திட்டமிடு, சூழ்ச்சி செய் சங். 21:11; 52:2; தானி. 2:9.

**எத்தன்** – Misleading people, Deceiving people. ஏமாற்று கிறவன், தவறாக நடக்கிறவன் ஏசா. 9:16.

**எத்து** – Error. Deception, Cheating. தவறு எரே. 51:18 ஏமாற்றுதல், வஞ்சகம் மத். 27:64.

**எபிரெயர்** – Eber. The descendants of Eber. Abraham was first called the Hebrew. ஏபேர் என்பவரின் சந்ததியார் எபிரெயர். முதன்முதலாக ஆபிரகாம் எபிரெயன் என்று அழைக் கப்பட்டார். யோனா பவுல் ஆகியோர் தங்களை எபிரெயன் என்று சொல்லிக்கொள்வதில் பெருமிதம் அடைந்தனர். ஆதி. 11:14–17; 14:13. யோனா 1:9; பிலி. 3:5.

**எப்பா** – Ephah, Bath, Bushel, Homer, Omer. The above all are the same measure. எப்பா, படி, மரக்கால், குருணி, கலம், ஓமர். திடப்பொருளை அளக்கும் அளவுமுறை ஆதி. 18:6; யாத். 16:36; ஏசா. 5:10; லூக். 16:7.

**எப்பிக்கூரர்** – Epicurean. They are the Greek philosophers. கிரேக்க தத்துவ ஞானிகள். அப். 17:18.

**எரிபந்தம்** – Severe burning fever. கொடிய எரிச்சலுடன் கூடிய காய்ச்சல் உபா. 28:22.

**எருக்களம்** – Dunghill, an ash heap. சாணக்குவியல், சாணம் சாம்பல் முதலியவை கொட்டப்படும் இடம். தானி. 2:5; 3:29; piles of rubble, debris. இடிக்கப்பட்டு மண்மேடான இடம்.

**எருசலேம்** - Jerusalem. Previous capital of Israel. A Holy Place. இஸ்ரவேல் நாட்டின் முன்னாள் தலைநகர், புனித தலம். யோசு. 18:28; நியா. 1:21.

**எறிவல்லையங்கள்** – Fishing Spears, A sharp weapon. எறியும் கூரிய ஆயுதம். யோபு 41:7.

**ஏகமாய்** – Together. ஒன்றாகச் சேர்ந்து, ஒருமனப்பட்டு. யோசு. 9:2; நியா. 20:8.

**ஏகம்** – Only one. ஒரு, ஒரே, ஒருவர், தனியருவர், ஒன்று. ஆதி. 22:2,12.

**ஏகோபித்து** – United together. ஒன்றாகச் சேர்ந்து, ஒருமனப் பட்டு, நியா. 20:1,11.

**ஏபோத்து** – Ephod. The Ephod was the part of the High Priests Clothing to which the Urim and Thummim were attached. It was an ornamental vest, elabortate four piece vest like garment by which Aaron symbolically bore Israel on his shoulders into god's presence. Ex 28: 4; 8; 15; 31; Hos 3:4 "ஏபோத்து" என்பது பிரதான ஆசாரியனுடைய பரிசுத்த வஸ்திரங்களில் ஒன்று. இதில் ஊரீம், தும்மீம் என்பவைகள் இணைக்கப்பட்டிருக்கும். 1. பொன்னால் இழைத்தநூல், 2. இளநீல நூல், 3. இரத்தாம்பர நூல், 4. சிவப்பு நூல், 5. மெல்லிய பஞ்சுநூல், 6. 12 வித இரத்தினக் கற்கள், 7. மார்ப்பதக்கம், 8. ஊரீம் தும்மீம் ஆகியவைகளால் ஆனது. இது ஒரு அலங்கார வஸ்திரம். இதனால் ஆரோன் இஸ்ரவேலரின் 12 நாமங்களையும் தமது தோளில் தேவ சமுகத்தில் சுமந்து செல்வார். யாத். 28: 4;8; 15:31; ஓசியா 3:4.

**ஏய், ஏய்த்து** – Deceive, Deceived. ஏமாற்று, ஏமாற்றி 1 சாமு. 19:7.

**ஏரோது** – Herod, a tittle. Herod Archelaus, Herod Antipa, Herod Agrippa I and II. இது பெயரல்ல, ஒரு பட்டம். ஏரோது அர்கெலாயு மத். 2:22 ஏரோது அந்திப்பா மத். 14:1 ஏரோது அகிரிப்பா 1, 2 அப். 25:13.

**ஏலாத** – Against. எதிராக, விரோதமாக 1 சாமு. 14:33,34.

**ஏற்றச்சால்** – A bucket, pail. A large basket or vessel made up of iron, tin, or leather used to irrigate the field. தண்ணீர் இறைக்கும் வாளி அல்லது சால். கிணற்றிலிருந்து வயலுக்கு தண்ணீர் இறைக்க பயன்படுத்தப்படும் பெரிய வாளி, கூடை போன்ற பாத்திரம். இது இரும்பு, தோல் அல்லது தகட்டினால் செய்யப்பட்டிருக்கும். ஏசா. 40:15; எண். 24:7.

**ஐசுவரிய சம்பன்னர்/ ஐசுவரிய சம்பன்னன்** – The rich, Rich man, Far richer. ஆஸ்தியுள்ளவன், மிகப் பெரிய செல்வந்தன் தானி 11:2.

**ஐயம்** – Fear, Doubtful matters. பயம், நிச்சயமற்றவை. 2 சாமு. 12:18; ரோ. 14:1.

**ஐ.என்.ஆர்.ஐ** – INRI. JESUS NAZARENUS REX JEWS . இயேசுவானவரை சிலுவையில் அறைந்த பொழுது, அவருடைய தலைக்கு மேலாக பிலாத்து எழுதி வைத்த வாசகம் இது. "நசரேயனாகிய இயேசு யூதருடைய ராஜா" என்பது இதன் பொருள். மத். 27:37; மாற். 15:26; லூக். 23:38; யோவான் 19:19.

**ஒண்டியாய்/ ஒன்றியாய்** – Alone, By himself. தனியாக, ஒருவனாய். யாத். 18:14; 1 சாமு. 21:1.

**ஒத்தாசை** – Help. உதவி, சகாயம் சங். 121:1,2; தானி. 11:34.

**ஒப்பி** – Deliver. ஒப்புவி, ஒப்படை 2சாமு. 14:7.

**ஒப்புச் சொல்லி** – Take up a Parable against you. Take up a proverb concering you. A reproach, a taunt. ஏளனம் செய்தல், கேலிக்கு இடமாக்குதல். நிந்தை, வசைச்சொல். சங். 44:14; யோபு 17:6; மீகா 2:4.

**ஒமெகா** – Omega. The last letter in Greek alphabet. கிரேக்க எழுத்துக்களின் அகர வரிசையில் கடைசி எழுத்து வெளி. 1:8;11.

**ஒரு குச்சு** – A Constant and sure abode. A firm place. A hut, Cottage. நிலையான இடம், ஒரு குடிசை. எஸ்றா 9:8; ஏசா. 1:8.

**ஒரு குருணி** – An Ephah. About 22 litres எப்பா, படி, மரக்கால் 22 லிட்டர் அளவு. ஏசா. 5:10.

**ஒருசோடாய்** – Together. சேர்ந்து 2 இராஜா. 9:25.

**ஒரு துட்டு** – Two Mites, A Farthing. இரண்டு காசு. லூக். 21:2; மாற். 12:42.

**ஒரு நாழிகை** – For a time, one hour. கொஞ்ச நேரம், ஒரு மணி நேரம் தானி. 4:19; வெளி. 18:16

**ஒரு நாள் பிரயாண தூரம்** – A day's journery. About 24 Miles. ஏறக்குறைய 24 மைல் தூரம் எண். 11:31; யோனா 3:4; லூக். 2:44

**ஒரு ஒய்வுநாள் பிரயாண தூரம்** – A Sabbath day's journey. It was a limited distance. The distance between Jerusalem and the mount Olivet. A Jew might travel on the Sabbath day without breaking the law. It is about one mile. ஒரு யூதன் ஒய்வுநாளில் பிரயாணம் செய்யக்கூடிய தூரம். அது ஒரு குறிப்பிட்ட தூரம் ஆகும். எருசலேமுக்கும் ஒலிவமலைக்கும் இடைப்பட்டதூரம். ஒருவர் ஒய்வுநாள் கட்டளையை மீறாமல்,

ஒய்வு நாளில் பிரயாணம் செய்ய அனுமதிக்கப்பட்ட குறைந்த அளவு தூரம். ஏறத்தாழ ஒரு மைல் தூரம். அப் 1:12.

**ஒரு பணம்** – Danarius, A penny. A Small Roman Silver coin. A day's Wages. ஒரு சிறிய ரோமானிய வெள்ளி நாணயம். ஒரு நாளுக்கான கூலிப்பணம் மத். 20:2,9,10,13; 22:19.

**ஒரே பேறானவன்** – Only one son, Only son ஒரே பேறானவன், ஒரே குமாரன் சக. 12:10.

**ஒரே பேறான குமாரன்** – Only begotten Son. Here this phrase is used as a Metaphar, As described in Col. 1:15 " He is the first born of every creative". He is as image of the invisible god, perfect Son and has power over all creations. இச்சொல்லாட்சி ஓர் உருவகமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. "சர்வ சிருஷ்டிக்கும் முந்தின பேறு மானவர்" என கொலோசெயர் 1:15ல் குறிப்பிடப்பட்டதுபோல இவர் முதன்மை பெற்ற ஒப்பற்ற குமாரன் ஆகவும் படைப்புகள் அனைத்தின் மேலும் அதிகாரத்திலும் ஆளுகையிலும் உன்னதர் ஆகவும் வரவேற்கப்பட்டுள்ளார். (யோவான் 3:16).

**ஒலிமுகக் கெவுனி வாசல்** – The inner and outer gates. உள், வெளி நுழைவு வாயில். 2 சாமு. 18:24.

**ஒலிமுகவாசல்** – City gate. The entrace of the city. பட்டணத்தின் நுழைவு வாசல். யோசுவா 20:4.

**ஒளி வைத்தல்** – Lie in wait, way lay, Lurk Privily. பதுங்கி காத்திருத்தல், மறைந்திருத்தல், இரகசியமாய் மறைந்திருத்தல், தனிப்பட்ட முறையில் ஒளிந்திருத்தல். நீதி. 1:18.

**ஒற்தலாம்** – Mint. A tithable herb universally cultivated and used as a flavouring agent in salads and in cookery. A spice. Mtt 23:23. புதினா போன்ற உணவுக்கு வாசனை

தரும் நறுமணச்செடி. புத்துணர்வு அளிக்கும் மூலிகைச்செடி மத். 23:23.

**ஓசன்னா** – Hosanna. A Greek word derived from Hebrew. 'Save now' is the meaning of this word. The Early christian church adopted this word into its worship. Later this word was changed as a word of praise. இது எபிரெய மொழியிலிருந்து வந்த கிரேக்கச் சொல் ஆகும். 'இப்போது இரட்சியும்' என்பது இதன்பொருள். ஆதி கிறிஸ்தவ சபை, துதி செய்ய இந்த வார்த்தையைக் கைக்கொண்டது. பிற்பாடு இது துதியின் வார்த்தையாக மாற்றப்பட்டுவிட்டது. மத். 21:9,15.

**ஓமர்** – Homer. Smaller dry measure. About 2 litres.1/10 of an Ephah. Ex 16:36. தானியம் போன்றவற்றை அளக்கும் அளவு. ஏறத்தாழ 2 லிட்டர் அளவுள்ளது. 'எப்பா'வில் பத்தில் ஒரு பங்கு. யாத். 16:36

**ஓரிகள்** – wild beasts, Dragons, wolf, Hyenas, Jackals. காட்டு மிருகங்கள், வலுசர்ப்பம், நரிகள், கழுதைப் புலிகள், ஓநாய்கள் என இடத்திற்கு தகுந்தாற் போல் பொருள்படுகிறது. ஏசா. 13:22; மீகா 1:8.

**ஔஷதம்** – Medicine, Remedy. Healing agent, Health. மருந்து, பரிகாரம், சுகமாக்கும் மூலிகை, ஆரோக்கியம். நீதி. 12:18

**கசுகுசென்று** – Whisper காதில் கிசுகிசுத்தல் ஏசா. 29:4.

**கடகங்கள்** – Bracelets. வளையல்கள், கையில் அணியும் காப்புகள் ஆதி. 24:22;30.

**கடலுராஞ்சி** – Ospray. A Scavenging bird with broad wings with broad tail and eats carcasses. அகன்ற சிறகுகளும்

அகன்ற வாலும் உடைய இறந்ததை உண்ணும் சுத்தமில்லாத கழுகு வகைப் பறவை லேவி. 11:13; உபா. 14:12

**கடற்காளான்** – A Sponge. Belongs to aquatic animal family. கடற்பஞ்சு. நீர் விலங்கு குடும்பத்தைச் சேர்ந்தது. மாற். 15:36.

**கடாட்சம்** – Favour, visit. தயவு (இரக்கம்), சந்தித்தல் ஆதி. 21:1 உன். 8:10.

**கடூரன்** – Cruel man, wicked man. கொடியன், துஷ்டன் நீதி. 11: 7.

**கடையான** – A farthest part, uttermost part. கடைசியான, கடையாந்தரமான, பூமியின் மிக தூரமான இடம் உபா. 30:4; சங். 65:8.

**கட்கங்கள்** – Swords. நீண்ட பட்டயம், வாள் நீதி. 30:14; ஏசா. 3:25; நெகே. 2:3.

**கட்டியக்காரன்** – A Herald, one who announces, proclaimer, messenger. அறிவிப்பவன், பறை சாற்றுபவன், அரசு அறிவிப்பு களை அதிகாரப்பூர்வமாக வெளியிடுபவன். தானி. 3:4.

**கட்டுப்பாடு** – Conspire, Plan Secretly. இரகசிய சூழ்ச்சி, இரகசிய திட்டம், சதி 1 இராஜா. 16:16; 2 2 இராஜா. 10:9; 1 சாமு. 22:8,13.

**கணக்கர்** – Scribes, Clerk, Writer, Copyist. எழுத்தர், படியெடுப்பவர், காரியதரிசி 2 நாளா. 24:13 எஸ்றா 4:9.

**கணுக்கள்** – Joints. மூட்டுகள் எபே. 4:16; கொலோ. 2:18; எபி. 4:12

**கண்காணிகள்** – Oversears, Bishops, Supervisors. மேற்பார்வையாளர், கண்காணிப்பு செய்கிறவர் அப். 20:28; 1 பேது. 2:25; 1 தீமோ 3:1,2.

**கண்காணிப்பு** – Lord over, Over sight. மேற்பார்வை செய்தல் 1 பேது. 5:3.

**கண்டனைகள்** – Furious rebukes. வேதனைப்படுத்தும் கண்டிப்புகள் எசே. 5:15.

**கண்டிதம்** – Rebuke. கண்டித்தல், கடிந்துகொள்ளுதல் 2 சாமு. 22:16.

**கந்த வர்க்கங்கள்** – Spices. நறுமணப் பொருட்கள், வாசனைத் திரவியங்கள். உன். 4:14; லூக் 24:1;

**கப்பங்கட்டுதல் அல்லது பகுதி கட்டுதல்** – Paying tribute. In a war, the defeated king paying some amount regularly to the king who defeated him. போரில் தோற்றுப்போன அரசன், தன்னை வென்ற அரசனுக்கு செலுத்தும் காணிக்கை. நியா. 1:28; 2 சாமு. 8:2; 2 இராஜா. 17:3.

**கப்புக்கவர்** – Sprig, The shoots. இளங்கிளை, குருத்து ஏசா. 18:5

**கம்பத்து பார்க்கிறவர்கள்** – Calkers, Shipwright, a mechanic who builds and repairs ships. கப்பல் கட்டுகிறவர்கள் மற்றும் பழுது பார்க்கிறவர்கள் எசே. 27:9,27.

**கரகங்கள்** – Cups, Bowls used for drink offering. பான பலிக்கான கிண்ணங்கள் எரே. 52:19.

**கரடுகள்** – Ankles, Ankle bones. கணுக்கள், கணுக்கால் மூட்டுகள் அப். 3:7.

**கரிய போளம்** – Aloes. Used in preserving the bodies Jn 19:39. வாசனையுள்ள மூலிகைப் பொருள். உடலைப் பாடம் பண்ணி பாதுகாக்க பயன்படுத்தப்பட்டது யோவான் 19:39.

**கருகலானவைகள்** – Doubtful things, Difficult problems, Riddles. சந்தேகமான காரியங்கள், சிக்கலானவை, கடினமான பிரச்சனைகள். தானி. 5:12,16.

**கருக்காய்** – Blight. A disease in plants which shrivels or withers them. செடிகளை அழிக்கும் நோய். உபா. 28:22; ஆமோஸ் 4:9; ஆகாய் 2:17.

**கருக்கான** – Sharp. கூர்மையான. யோசு. 5:2; எபி. 4:12.

**கருமங்கள்** – Things. Matters. கிரியைகள், செயல்கள் சங். 131:1.

**கரும்புனல்கள்** – Dark clouds, Dark waters. கார்மேகங்கள், மழை மேகங்கள், தண்ணீருள்ள மேகங்கள். சங். 18:11.

**கர்த்தத்துவம்** – Dominion, Authority, Sovereignity, Government. ஆளுகை, அரசாட்சி, அதிகாரம், அரசாங்கம் ஆகியவற்றை விவரிக்கும் பெயர்ச்சொல். தானி. 4:22; 34; 6:26; 7:27; ஏசா. 9:6.

**கர்த்தர் வருகிறார்** - Our Lord comes. An expression of greetings and encouragement as well as of triumphant faith. "மாரநாத" என்ற கிரேக்கச் சொல்லின் பொருள். "வாழ்த்துதல், உற்சாகப்படுத்துதல் ஆகியவற்றிற்கும் விசுவாசத்தை வெளிப்படுத்துவதற்கும் பயன்படுத்தும் சொல். 1 கொரி. 16:22.

**கலங்கள்** – Bowls, Basins, Dishes. கிண்ணங்கள், கிண்ணிகள், கரகங்கள் எண். 7:84, 2 சாமு. 17:28.

**கலசங்கள்** – Fire pans, Basins, Spoons, censers, Jars. தூப கலசங்கள், கைப்பிடியுள்ள கிண்ணங்கள், தூபம் காட்டும் பொன், வெள்ளி, வெண்கலத்தினாலான பாத்திரம், சட்டி, கூஜா,

குவளை, ஜாடி. எண்4:14; 1 இராஜா. 17:12;14;16; 2 இராஜா. 25:14,15; 2 நாளா. 4:22. எரே. 52:19.

**கலம்** - Bowl, Basin. Dry measure, Homer, Omer. கிண்ணம், கிண்ணி. தானியங்களை அளக்கும் அளவு முறை. ஓமர் என்ற அளவு. 1 நாளா. 28:17; ஏசா. 5:10; ஆகாய் 2:16; லூக். 16:7.

**கலயங்கள்** – Dishes, Jar, Spoons, Shallow vessels, plates. கிண்ணங்கள், கூஜா, ஜாடி, தட்டு, வட்டில் 1 இராஜா. 17:12; 14;16; 2 நாளா. 4:22; எரே. 52:18,19.

**கலாதி** - A Place of rebellion, Sedition. கலகத்தின் இடம், அமைதிக்குலைவு, ராஜதுரோகம். எஸ்றா 4:15.

**கலிக்கம்** – Eye Salve, Eye ointment. A soothing ointment. தெளிந்த பார்வைகிடைக்க கண்களில் இடப்படும் மருந்து. மிருதுவான களிம்பு. வெளி 3:18.

**கல்தேயர்** – Chaldean. They came from Arabia and lived in southern Babylon. Among them Nebuchadnezzar was very famous king. They were intelligent and highly educated people. Many of them were astrologers, astronomers and wisemen. இவர்கள் அரபியாவிலிருந்து வந்தவர்கள். பாபிலோனியாவின் தெற்குப் பகுதியில் வசித்தவர்கள். இவர்களில் நேபுகாத்நேச்சார் என்ற மன்னன் பேர்பெற்றவன். இவர்கள் அறிவும் அதிக கல்வியும் உள்ளவர்கள். இவர்களில் பலர் ஜோதிடம், வானவியல் ஆகியவற்றில் தேறியவர்கள் மற்றும் புத்திசாலிகள். எஸ்றா 5:12; 2 நாளா. 36:17.

**கவசம்** – An helmet of brass, A coat of mail, greaves of brass, வெண்கலச் சீரா – தலையில் பாதுகாப்புக்காக அணியும் கவசம்; போர்க்கவசம் – உடம்பில் அணிவது; வெண்கலக் கவசம் – கால்களில் அணிவது; வெண்கலக் கேடகம் – தோள்களில் அணிவது 1 சாமு. 17:5,6,38; எபே. 6:14,17.

**கவண்** – Sling. Strip of leather used for throwing stones. கல் எறியப் பயன்படும் தோல்கருவி. இழுவிசை உள்ள வார்க்கருவி. பண்டைய இஸ்ரயேல் மெய்ப்பர்கள் பயன்படுத்தும் ஆயுதம். 1 சாமு. 17:40; 2 நாளா. 26:14.

**கவண்காரர்** – Slinger. கவண்கல் எறிகிறவர்கள் நியா. 20:16; 2 இராஜா. 3:25.

**கவராசம்** – Compass. A tool used to draw circles. வட்டமிடும் கருவி. யோபு 26:10 நீதி 8:27; ஏசா 44:13.

**கவை** – Care. அக்கறை, கவலை லூக். 10:40.

**கவைகாரியம்** – Business, Relationship. காரியம், வேலைகள், உறவுகள் நியா. 18:7.

**கழலை** – A wen, Swelling or growth on the skin. தோலில் எழும் வீக்கம், கட்டி லேவி. 22:22.

**கழுதை மறிகள்** – Young asses. கழுதைக் குட்டிகள் (மறி–குட்டி) ஏசா. 30:6,24; மத். 21:4.

**கழுந்து** – Tenon. ஒரு மரத்துண்டில் செதுக்கப்பட்ட காடியில் பொருந்து மாறு மற்றொரு மரத்துண்டில் செய்யப்பட்ட கூர். யாத். 36:24.

**களிம்பு** – Dross, The refuse of metals, wastage, Balm. அழுக்கு, உலோகக்கழிவு, கசடு, பிசின் தைலம். சங். 119:119 நீதி. 25:4; ஏசா. 1:22:25; எரே. 8:22.

**கறளை** – A shrub in the desert, Tract of waste land with shrubs, வறண்ட நிலத்தில் உள்ள வளராத புதர்ச்செடி எரே. 17:6.

**கற்பித்த** - Invented. Teach , Command கண்டுபிடித்த 2 நாளா. 26:15 போதித்த, சொல்லிய, கட்டளையிட்ட யாத். 19:7; 34:32.

**கன்னம்/கன்னமிடுதல்** – Breaking up, Dig through houses, Break through, To be broken up. வீடுகளில், கடைகளில் சுவரில் துளையிட்டு திருடுதல் யாத். 22:2; யோபு 24:16; மத். 6:19,20; மத். 24:43.

**கன்னார் / கன்னான்** – Smiths. Metal worker. Goldsmith, silversmith Bronzesmith. coppersmith, Blacksmith. உலோகங்களில் வேலை செய்பவர். பொன், வெள்ளி, வெண்கலம், செம்பு, பித்தளை இரும்பு முதலிய உலோகங்களில் வேலை செய்யும் தொழிலாளர் 1 இராஜா. 7:14; 2 நாளா. 24:12; ஏசா. 40:19; 2 தீமோ. 4:14.

**கஜானா** – A place for Royal archives. Royal records. Treasury, Treasure house. Royal Treasury. அரசாங்க தஸ்தாவேஜுகள், பதிவேடுகள் வைக்கும் இடம். பொக்கிஷ சாலை, அரசரின் பொக்கிஷத்தைப் பாதுகாக்கும் இடம். எஸ்றா 5:17; 7:20; எஸ்தர் 3:9.

**தஸ்திர அறை/கஜானாவிலுள்ள தஸ்திர அறை** – House of the rolls. Archives stored in the treasury. Records and books, Scripts stored in the treasury. Records stored in a place. சுருள்கள், பதிவேடுகள் வைக்கப்படும் அறை. பத்திரங்கள், பதிவேடுகள், பழைய ஆவணங்கள், தஸ்தாவேஜுகளைப் பாதுகாப்பாக வைக்கும் அறை, ஆவணக் காப்பகம். எஸ்றா 6:1.

**கஜான்சிகள்** – Treasurers. பொக்கிஷதாரர்கள், பொருளாளர்கள், எஸ்றா7:21.

**காங்கை** – Heat. வெப்பம், வெயில் ஏசா. 25:5.

**காஞ்சொறிகள்** – Nettles, Brambles, Briers, weeds. வலை பின்னல் போல் கொடியாகப் படர்ந்த முட்செடி. ஏசா. 34:13; ஓசி. 9:6; செப். 2:9.

**காடி** – Vinegar, Fermented wine. புளிப்பானது, புளித்த திராட்ச ரசம். போதை தரும் மதுவான திராட்சரசம், நீதி. 10:26.

**காணி** – Field, Land, Possession. நிலம், இடம், வயல், பூமி. நெகே. 11:3; யோபு 31:38.

**காணியாட்சி** – Possession, Commonwealth, Ownland, citizenship சொத்து, சொந்தமான இடம், நிலம், தேசம், குடியுரிமை ஆதி. 47:27 லேவி. 25; அப். 5:1; 7:5; எபே. 2:12.

**காந்தி** – Brightness, Shining, Heat, Sunshine, Bright light.பிரகாசம், ஒளிமயம், வெப்பம், வெளிச்சம், பொன்மயமான கதிர்கள். யோபு 37:21; சங். 19:6; 2 சாமு. 23:4; ஏசா. 18:4; ஆப. 3:4.

**காப்புகள்** – Necklaces, Tablets, Bracelets, Anklets கழுத்தில், கைகளில், கால்களில் அணியும் ஆபரணங்கள். எண். 31:50.

**காப்பு நாடாக்கள்** – Phylacteries, A broad girdle. பாதுகாப்பிற்காக கையில் கட்டிக்கொள்ளும் அகலமான நாடா மத். 23:5.

**காய்மகாரம்** – Jealous. Jealous eye. பொறாமை, பொறாமைக் கண்களுடைய, எரிச்சல். 1 சாமு. 18:9.

**காரியக்காரர் / காரியக்காரன்** – Person who has charge of the office or business or affair. Officer, steward, Treasurer. ஒரு பணியின், காரியத்தின் பொறுப்பானவர். பொறுப்பாளார், பொருளாளர். எஸ்றா 3:9; மத். 20:8.

**காருண்யம்/ காருணியம்** – Favour, Grace, goodness, loving kindness, Virtue. நன்மை, கிருபை, அன்பான இரக்கம், நலம் சங். 5:12; 2 பேது. 1:3; சங். 25:6; 1 பேது. 5:10; சக. 9:17.

**காவற்கிடங்கின் நிலவறைகள்** – A vaulted cell in a dungeon. A dark underground cell, Cabin. நிலவறை, சிறையாகப் பயன்படும் பூமிக்கு அடியில் உள்ள இருண்ட அறை. எரே. 37:16.

**காளவாயில் / காளவாய்** – Furnace, Kiln. உலைக்களம், சூளை. உபா. 4:20; 1 இராஜா. 8:51; சங். 12:6; தானி. 3:6.

**காற்பங்கு தேசாதிபதி** – Tetrach. One who rules the fourth part of a region. ஒரு மாகாணத்தின் நான்கில் ஒரு பகுதியை ஆட்சி செய்பவர் காற்பங்கு தேசாதிபதி ஆவார். மத். 14:1; லூக். 3:1; அப். 4:28.

**கிச்சிலி மரம்** – Citron tree (citron) A shade tree that yields orange coloured fruits commonly. translated as "apple". நிழலுள்ளதும் ஆரஞ்சு நிறப் பழங்களையும் தரும் மரம். எலுமிச்சை வகை பழ மரம் என்பது பொதுவாக கிச்சிலி என மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. உன். 2:3,5; யோவேல்1:12.

**கிடாரி** – Heifer. Young cow that has not had a calf. கன்று ஈனாத இளம் பசு. நியா. 14:18.

**கிரணங்கள்** – Rays. ஒளிக்கதிர்கள் ஆப. 3:4.

**கிராதி** – Lattice, Network of cross laths. பின்னல் தட்டி போன்ற அமைப்பு 2 இராஜா. 1:2; உன். 2:9.

**கிரியிருப்பவர்கள்** – Hostages. பிணையாளிகள், பிணையாக நிறுத்தப்பட்டவர்கள். 2 இராஜா. 14:14.

**கிருபை** – Grace, Mercy, Favour, Kindness unto Unworthy. தேவ தயவு, இரக்கம், சலுகை, தகுதியில்லாதவர்கள் மேல் காண்பிக்கப்படும் இரக்கம். ஆதி. 6:8; சங். 32:10; புல. 3:22.

**கிர்த்தியங்கள்** – Evil practices, Wrong doings, பொல்லாத நடக்கைகள், சொந்த செய்கைகள் நியா. 2:19.

**கிலேசம்** – Grief, Misfortune, Sorrowful spirit, Danger, peril, Trouble. அல்லல், துன்பம், துக்கம், அபாயம், ஆபத்து ரூத் 1:21.

**கின்னரக்காரர்** – Those who play harp. வீணை போன்ற அமைப்புள்ள கின்னரம் என்ற இசைக்கருவியை வாசிப்பவர்கள் ஆதி 4:21.

**கீர்த்தனம்** – Sing, Praise துதி பாடுதல், புகழுதல், போற்றுதல், பாடி மகிமைப்படுத்துதல் சங். 7:17; 9:2.

**கீல்** – Pirch. A dark coloured Material Consisting of a mixture of pitch, sand etc., பூமியின் அடியிலிருந்து கிடைக்கும் ஒருவகை கரிய நிற கலவைப் பொருள் (. ஆதி. 6:14; 14:10; 11:3; யாத். 2:3; ஏசா. 34:9.

**கீழ்க்காற்று** – East wind. கிழக்கிலிருந்து வீசும் காற்று, கொண்டல் காற்று. சங். 78:26; ஓசி. 12:1; 13:15; யோனா 4:8.

**கீழ்த்திசையார்** – Eastern people. கிழக்கு திசை மக்கள், கிழக்கு தேசத்தில் குடியிருப்பவர்கள். ஏசா. 2:6.

**கீழ்மகன்** – The base. கீழான நிலையில் உள்ளவன், இழிமகன். ஏசா 3:5

**கீழ்மக்கள்** – Men of low degree. கீழ்நிலை மக்கள், தரம் தாழ்ந்தவர்கள், அற்பர். சங் 62:9.

**குச்சு** – cottage, a hut, shelter. குடிசை, குடில், தோட்டங்களில் காவலுக்காக பரண்மேல் அமைக்கப்படும் சிறு குடிசை ஏசா. 1:8.

**குடம்** – A pot for carrying water. A measurement to measure oil etc., தோண்டி. தண்ணீர் எடுக்க பயன்படும் பாத்திரம். திரவப் பொருள்களை அளக்கும் அளவுகளில் ஒன்று. ஆதி. 24:15–20; 2 இராஜா. 2:20; மாற். 14:13; ஆகாய் 2:16.

**குடா** – Bay, cove, Inlet, gulf, Creek. சிறுகுடா, வளைகுடா, விரிகுடா, கழிமுகம், கடற்கூம்பு, குடைவு நியா. 5:17; அப். 27:39.

**குண்டிக்காய்கள்** – Kidneys. சிறு நீரகங்கள் யாத். 29:22; லேவி. 3:4,10.

**கும்பங்கள்** – Chapiters, Head of pillars. போதிகைக்கட்டை, தூணின் அலங்காரத் தலைப்பு, தூணின் மேலுள்ள குமிழ். 1 இராஜா 7:16

**கும்பு** – Crowd, Multitude. கூட்டம், திரள் கூட்டம். புல. 2:22; எசே. 7:11–14.

**குயக்கலம்** – Potter's vessel. மண்பாண்டம் சங். 2:9.

**குருகு** – Gier eagle. சுத்தமில்லாத பறவை, எகிப்திய பெருங்கழுகு. லேவி. 11:18; உபா. 14:17.

**குருக்கு** – Thisles, Thorns. ஒரு வகை முள், முட்செடி ஆதி. 3:18; ஓசியா 2:6.

**குறடு** – Fork, Flesh hooks. முள் கரண்டி, முள்குறடு. 1 நாளா. 28:17.

**குறுணி** – Ephah. எப்பா, மரக்கால், படி, கலம் முதலிய தானியம், மாவு, மன்னா ஆகிய திடப்பொருள்களை அளக்கும் வெவ்வேறான அளவு முறைகளில் ஒன்று தான் குறுணி. ஏசா. 5:10.

**கூகை** – Night hawk, Barn owl, Big owl, Short eared owl. கோட்டான், ஆந்தை, லேவி. 11:16.

**கூழக்கடா** – Pelican. A gregarious web footed aquatic big bird with a long and curved bill beneath which is suspended a pouch for storing fish. மிகப்பெரிய, நீரில் வசிக்கும் பறவை. இதற்கு நீண்ட, வளைந்த அலகு உண்டு. இதனடியில் மீன் போன்ற இரையை சேமித்து வைக்க ஒரு பை இருக்கும். வனாந்தர நாரை. லேவி. 11:18; உபா. 14:17; சங். 102:6.

**கெடி** – Terror, Awesome. பயம், பயங்கரம், எசே. 32:23; செப். 2:11.

**கெபி** – Cave, Den. குகை. யோசு. 10:16; நாகூம் 2:12.

**கெம்மரீம்** – Idolatrous priests. விக்கிரகத்தை வழிபடும் பூசாரி செப். 1:4.

**கேடகம்/கேடயம்** – Small Shield, Buckler. An armour that is held in the left hand to prevent enemy's attack. பரிசை, எதிரியின் தாக்குதலைத் தடுக்க இடது கையில் பிடித்துக்கொள் ளும் ஒரு போராயுதம். 1 இராஜா. 10:17 சங். 91:4; எசே. 39:9.

**கேணிகள்** – Pits, Wells. பள்ளங்கள், குழிகள், கிணறுகள், துரவுகள் ஆதி. 14:10;37:24; 16:14.

**கேரா** – Gerah. An ancient Hebrew unit of weight and currency. பண்டைய எபிரெய அளவு முறையும் பண மதிப்பும் ஆகும். யாத். 30:13; லேவி. 27:25 ; எண். 3:47.

**கேருபீன்** – Cherubim. Created angelic being. winged living creature. Supernatural being. They were designed to represent the holy angels. They are attending upon the redeemer, to whom they were ministering spirits, in their readiness to do his will. God is said to dwell or sit between the cherubim on the mercy seat. சிருஷ்டிக்கப்பட்ட தேவதூதர்களின் வகைகள். செட்டைகள் உள்ள ஜீவனுள்ள சிருஷ்டிப்புகள். இயற்கைக்கு அப்பாற்பட்ட ஜீவன்கள். ஆதி. 3:24; எசே. 28:14,16; தானி. 4:13.

**கேரூப்** – Cherub. An angelic creature. தூதனாகிய சிருஷ்டிப்பு எசே. 28:14,16.

**கை படிந்தவர்கள்** – Trained Servants. Trained for war. பயிற்சி பெற்ற வேலைக்காரர். போர்ப் பயிற்சி பெற்றவர்கள் ஆதி. 14:14.

**கைப்பாடு** – Labour of hands. கைப்பிரயாசம், கையால் வேலைசெய்தல் ஆகாய் 1:11.

**கைப்பிசகாய்** – Oversight, Accidentally, Unintentionally God delivered, Happened to come by chance. அறியாமல், எதிர்பாராமல், தேவ செயலாக, தற்செயலாக நேரிடுவது. ஆதி. 43:12; எண். 35:11; உபா. 4:41; யோசு. 20:2; 9; யாத். 21:13; 1 சாமு. 6:9.

**கைம்பெண்** – Widow. A woman who lost her husband by death. விதவை, மரணத்தால் கணவனை இழந்த பெண். ஆதி. 38:19; 1 இராஜா. 7:14; லூக். 7:12.

**கைலாகு** – Leaning on one's arm. Leading by one's hand. Holding one's hand. கைத்தாங்கலாக நடத்துதல். கைப் பிடித்து, தாங்கி நடத்துதல் யோபு 31:18; 2 இராஜா. 7:2,17.

**கொங்கைகள்** – Breasts. மார்பகங்கள், மார்ப்பகுதி, முலைகள் புல. 4:3.

**கொடிமாசிகள்** – Clouds. மேகங்கள், யோபு 38:37.

**கொட்டாரங்கள்** – Stalls, கொட்டில், தொழுவங்கள் 2 நாளா. 32:28.

**கொண்டல் காற்று / கொண்டற்காற்று** – East wind. கிழக்கிலிருந்து வீசும் காற்று, கீழ்க்காற்று. யோபு 15:2; யோனா 4:8; ஓசி. 12:1.

**கொத்தளம்** – Siege works, Bulwarks, Battlement. அரண்கள், சுற்றிலும் தடுப்புகளின் அமைப்பு, மரங்களை வெட்டிப் போடுதல் உபா. 20:19,20; 2 சாமு. 20:15; எரே. 5:10.

**கொத்துகிறதற்கு** – To dig with spade மண்வெட்டியால் மண்ணைக் கொத்துவதற்கு, வெட்டுவதற்கு. லூக். 16:3.

**கொம்புகள்** – Horns. There are five kinds of horns. 5 வகையான கொம்புகள் உள்ளன. அவையாவன: (1) Trumpets of ram's horns. கொம்பு எக்காளம், பூரிகை – யோசுவா 6:4; எண். 10:2; (2) Horn of oil. தைலக்கொம்பு 1 சாமு. 16:1,13 . (3) Horn of my Salvation. இரட்சண்யக் கொம்பு – சங். 18:2. (4) Horn of an animal. ஆட்டுக்கடாவின் கொம்பு ஆதி. 22:13. (5) Horn of the altar பலிபீடத்தின் கொம்பு யாத். 27:1,2; 1 இராஜா 1:50.

**கொம்மைகள்** – Towers, Undersetters, Support ஆதாரம், கோபுரம், உதைவு ஆதாரம். 1 இராஜா. 7:30; 34; நெகே. 3:1.

**கொர்பான்** – Corban. It is a gift devoted to God. தேவனுக்குக் கொடுக்கப்படும் காணிக்கை. மத். 15:5; மாற். 7:11.

**கொலுக்கூடம் / கொலுமண்டம்** – Porch, Royal court, Royal house, king's hall. Gate of the king. முகப்பு மண்டபம், ராஜமண்டபம், அரசவை, அரச அரங்கம். நியா. 3:23; எஸ். 5:1 தானி 2:49.

**கொல்லர் / கொல்லன்** – Blacksmith. A person who makes things of iron and repair them. கருமான். இரும்பில் பொருள்களைச் செய்பவர். இரும்பு பொருள்களை, விவசாயக் கருவிகளைப் பழுது பார்க்கிறவர். 1 சாமு. 13:19, 2 இராஜா. 24:14,16.

**கொழு இரும்புகள்** – Plough share. கலப்பையின் முனையில் உள்ள கொழு. இது இரும்பினால் ஆனது. 1 சாமு. 13:20.

**கொளுவுகிறான்** – Stirp up. கிண்டி விடுகிறான். நீதி. 29:22.

**கொறுக்கை** – Reed, Rushes, Flags. Refers to swamp plants. நாணல். சதுப்பு நிலத்தில் வளரக்கூடிய செடி. ஏசா 19:6; 35:37.

**கொற்றர்/கொற்றன்** – Masons, Smiths. கொத்தனார், கன்னார், தட்டார், 2 இராஜா. 12:12; 22:6; 2 நாளா. 24:12.

**கோசமறுபட்டவன்** – He who has privy member cut off. A man deprived of his male role. கோசம் அறுபட்டவன், உரு சிதைக்கப்பட்டவன், விதை அடிக்கப்பட்டவன் உபா. 23:1.

**கோடிகள்** – Corners. மூலைகள். 1 இராஜா. 7:30, 34.

**கோட்டான்கள்** – Owls. ஆந்தைகள் ஏசா. 13:21.

**கோபிகள்** – Angry Fellows. கோபக்காரர். நியா. 18:25.

**கோராவாரிக் காற்று** – Whirlwind of the Lord, Grievous whirlwind. கர்த்தருடைய பெருங்காற்று. கொடிய புயல் காற்று. எரே. 30:23; 23:19.

**கோரி** – Tomb. கல்லறை. யோபு 21:32.

**கோவில் நாற்சாரி** – From one end to another of the temple. கோவிலின் ஒரு முனை துவக்கி மறு முனை மட்டும். 2 இராஜா. 10:21.

**கோவேறு கழுதைகள்** – Mules. Mule is an off-spring of horse and ass. குதிரைக்கும் கழுதைக்கும் பிறந்தவை. ஆதி 36:24.

**கோளிகைக் கழுதைகள்** – She asses. Female Donkeys. பெண் கழுதைகள். ஆதி. 12:16.

**சக்கந்தக்காரன்** – Mocker, Scorner. பரியாசக்காரன். ஏசா. 29:20.

**சக்கந்தம்** – Derision, Mocking, Ridicule, இகழ்ச்சி, ஏளனம், பரிகாசம், நகைப்புக்கிடமான சங். 44:13;79:4.

**சக்கரவட்டம்** – He hath compassed, set a compass. அடையாளம், எல்லை, வட்டணித்தல், யோபு 26:10; நீதி. 8:27.

**சக்கராகாரம்** – Circle, Round. வட்டம், வட்ட வடிவம் 1 இராஜா. 7:23; 31:35.

**சக்களத்தி** – Concubine, Adversary, Rival. மறுமனையாட்டி, வைப்பாட்டி, கணவனின் மற்ற மனைவி. 1 சாமு. 1:6; தானி. 5:3:23.

**சங்காரம்** – Destruction, Breakout, Slaughter. பெரும் அழிவு, நாசம், சாவு, கொல்லப்படுதல். யாத். 19:22; எண். 21:2,3; 1 சாமு. 14:30.

**சங்கீத சேவனை** – Ministering with singing. பாடல்களைப் பாடி ஆராதித்தல், வழிபடுதல், இசையுடன் சேவித்தல். 1 நாளா. 6:32.

**சடிதியாய் / சடுதியாய்** – Suddenly, So Quickly, without knowing. திடீரென, மிக வேகமாக, விரைவாக, தெரிய வருவதற்குள் அப். 9:3; ஆப. 2:7; யோபு 9:5; லூக். 2:13.

**சணல்நூல் சல்லடங்கள்/ஜல்லடம்** – Linen Breeches, Linen Trousers, Linen undergarments, under wear. கால்சட்டை, உள்ளாடை, சல்லடம், நிசார்கள் யாத். 28:42; லேவி. 6:10; எசே. 44:18

**சண்டாளர்** – The Vilest, Worthless. துஷ்டர், தீயவர், அற்பமானவர்கள், இழிவானவர்கள். சங் 12:8.

**சதிசர்ப்பனை** – Lying in wait, Spoils. சதியாலோசனை, சூழ்ச்சி, உபாயம், வஞ்சகம். ஏசா. 25:11; அப். 23:16.

**சதுசேயர்** – Saddducees -These people are members of one of the religious parties which existed among the Jews in the days of our Lord. These people didn't accept resurrection, angel and spirit. இவர்கள் கர்த்தர் வாழ்ந்த நாட்களில் யூதரிடையே இருந்த ஒரு மதப்பிரிவைச் சேர்ந்தவர்கள். இவர்கள், உயிர்த்தெழுதலும் தேவதூதனும் ஆவியும் இல்லையென்று சாதித்தவர்கள். மத். 22:23; லூக். 20:27; அப். 23:8.

**சத்துவங்கள்** – Heavenly bodies, powers of the heavens. வானத்தின் சத்துவங்கள், வான சேனை, வான ராசிகள். மத். 24:29; அப். 7:42.

**சத்துவம்** – Power, Strength. சக்தி, வல்லமை, வலிமை சங். 68:35; எபே. 3:7; 6:10.

**சந்தடி** – அமளி காண்க.

**சந்தி** – There are 3 meanings. 1. Morning 2.Street, paths or highways meeting at one place 3. Meeting, Visiting. இச்சொல் மூன்று பொருள் தரும். 1. காலை நேரம் எஸ்றா 3:3; சங் 55:17. 2. தெரு, இருவழி, பெரும்பாதைகள் சந்திக்கும் இடம். மத். 22:9; மாற். 11:4. 3. சந்தித்தல், போய்ப்பார்த்தல் லூக். 1:74,79; 7:16.

**சந்திரரோகி** – Lunatic. Mentally disturbed person. They are much affhected during full moon and new moon days. மனநிலை பாதிக்கப்பட்டவர், இப்படிப்பட்டவர்கள் அமாவாசை, பௌர்ணமியின் போது சந்திரனின் சக்தியினால் அதிகம் பாதிக் கப்படுவார்கள். மத் 17:15.

**சபேயர்** – Sabeans. The descendants of Seba are called Sabeans. சேபாவின் சந்ததியாரே சபேயர் ஆவர். ஆதி. 10:7; யோபு 1:15.

**சமஸ்த / சமஸ்தமும்** – All, All things, Entire, whole. அனைத்தும், எல்லாம், சகலமும், முழுவதும். எண். 1:50; 1 சாமு. 10:24; சங். 119:91.

**சமஸ்தானம்** – State, Residence, Throne of the Governor. மாநிலம், மாகாணம், ஆளுகைக்கு உட்பட்ட இடம், வசிப்பிடம் நெகே 3:7

**சமுசயப்படுதல்/சமுசயம்/சம்சயம்** – Doubt, Surmissing, sus pect, Jealous. ஐயம், சந்தேகம், அவநம்பிக்கை, பொறாமை எண். 5:30; ரோ. 14:23; 1 தீமோ. 6:4.

**சமுத்திரத் திரைகள்** – Waves of the sea. கடல் அலைகள். எசே. 27:34.

**சமூலமாய் / சமூலமும்** – Altogether, All, From the beginning. எல்லாம், எல்லாரையும், எல்லாவற்றையும், ஆரம்பத்திலிருந்தே. யாத். 11:1; சங். 119:160;

**சம்பாரங்கள்** – All spices. எல்லா நறுமணப்பொருள்களும், வசம்பு, பட்டை, கிராம்பு, ஏலக்காய், மிளகு போன்ற மணமூட்டும் உணவுப் பொருள்கள். எசே. 24:10; 27:22.

**சம்பிரதி** – Scribe, Secretary. – கையமுத்துப் பிரதி எழுதுபவர், பேர்த்து எழுதுபவர், செயலாளர். 2 நாளா. 34:15; 18,20 ஏசா. 37:2. 1. Scribe of the army. இராணுவச் சம்பிரதி, இராணுவத்தின் செயலர், 2 ராஜா. 25:19 2. Town clerk. பட்டணத்துச் சம்பிரதி. அப். 19:35 3. King's Scribe அரசரின் சம்பிரதி 2 ராஜா. 12:10; 2 நாளா. 24:11; எஸ். 3:12; 8:9. சம்பிரதி என்கிற சொல் கணக்கர், நியாயசாஸ்திரி, பேர்த்து எழுதுகிறவர், மணியக்காரர், வேதபாரகர் என பல பொருட்களை உடையதாகும்.

**சம்பிரமம்** – Living sumptuously. Living in pleasure. வளமுடன் வாழ்வது, இன்பமாய் வாழ்வது பிர. 2:25; லூக். 16:19; யாக் 5:5.

**சம்போகம் / சம்யோகம்** – Delight, pleasure. Sexual intercourse Prov. 7:18; Is 13:16 Family life. சுகபோகம், இன்பம், உடலுறவு கொள்ளுதல். நீதி. 7:18; ஏசா. 13:16 குடும்ப வாழ்க்கை லேவி. 18:22, எண். 31:17,18.

**சம்மட்டி** – A very big hammar. மிகப் பெரிய இரும்பு சுத்தியல். சங். 74:6; எரே. 23:29.

**சரசக்காரர்** – Scorners, Scoffers, Mockers. பரிகசிக்கிறவர்கள், ஏளனம் செய்கிறவர்கள், இகழ்கிறவர்கள். ஓசி. 7:5.

**சரசம்** – Mock, Tantalise. ஏளனம், முறையற்ற செயல், ஆசை காட்டி ஏமாற்றுதல். ஆதி. 39:14,17.

**சரப்பணி** – A gold chain around the neck. கழுத்தில் அணியும் தங்கச் சங்கிலி. நியா. 8:26; தானி. 5:7,29.

**சர்ப்பனை** – Ambush, Lying in wait, Plot. இரகசிய சூழ்ச்சி, இரகசிய திட்டம், சதி ஆலோசனை, பாய்ந்து தாக்க சதி. அப். 23:16; 25:3.

**சர்வமானியம்** – Giving lands free of cost. Exemption from taxes. வரி விலக்குடன் நிலங்களை இலவசமாக கொடுத்தல். ஆதி. 47:22; 1 சாமு. 17:25

**சலக்கரணை** – Caring with carefulness, proclamation of holiday with favours. சிரத்தையோடு, கவனமாக. குற்றமன்னிப்பு அளித்தல், விடுமுறை கொடுத்தல், சகாயம் செய்தல் 2 இராஜா. 4:13; எஸ்தர் 2:18.

**சல்லா** – Fine linen. விலையுயர்ந்த மெல்லிய ஆடை. ஏசா. 19:9; வெளி. 18:16.

**சவதரித்த** – Gathered, Prepared. சேர்த்து வைத்தவை, சம்பாதித்தவை, ஆயத்தம் செய்தவை. ஆதி. 12:5; 1 நாளா. 29:3.

**சவுக்காரம்** – Washing soda, Soap. சலவைத்தூள், உவர்மண், சோப்பு. மல். 3:2.

**சவுக்கு** – Whips, scourge. சாட்டை, வார் 1 இராஜா. 12:11; ஏசா. 10:26.

**சவுக்கைகள்** – Panels, Boards. குறுக்குக் கம்பிகள் 1 இராஜா. 7:28; 29; 31;36.

**சவுரியவான்கள்** – Valiant men, Mighty men. warriors, The noblest. போர்வீரர்கள், பெலசாலிகள், பராக்கிரமசாலிகள், சிறந்தவர்கள் (பெருமக்கள்) 2 சாமு. 17:10; உன். 3:7; சங். 45:3; 103:20.

**சளுக்குப் பண்ணுகிறார்கள்** – Grow fat and shine. கொழுத்து ஆடம்பரமாக இருப்பவர்கள் எரே. 5:28.

**சற்குணர்** – Perfect one. குற்றமற்றவர், பூரணர், உயர்ந்தவர், மேன்மையானவர் மத் 5: 48.

**சற்பனை** – Deceit. ஏமாற்றுதல் சங். 50:19.

**சன்மார்க்கன்** – Upright. செம்மையானவன், நீதிமான் யோபு 1:1

**சன்னதக்காரன்** – Spiritist, one who consults with spirits. one who interprets omen. குறிகாரன், ஆவிகளிடம் கேட்டு குறிசொல்பவன், சகுணம் கணிப்பவன். உபா. 18:11.

**சன்னதம்** – To enquire by, Prophesying. விசாரிப்பது, தீர்க்கதரிசனம் உரைத்தல் 1 இராஜா. 18:29; 2 இராஜா. 16:15.

**சன்னது** – Letter, Commissions, Orders. கடிதம், உத்தரவுகள், கட்டளைகள். எஸ்றா 7:11; 8:36.

**சாங்கோபாங்கம்** – Rest, Ease, Unconcerned, without worry. இளைப்பாறுதல், அமைதி, கவலையின்றி, விசாரமின்றி, யோபு 12:6; எரே. 46:27; எசே. 16:49.

**சாதுரியம்** – Wisdom, Skill. ஞானம், திறமை. 1 கொரி. 1:17.

**சாதுரியவான்** – Eloquent Man, wise man,Skilful man. Eloquent orator. சொல்வல்லார், விவேகி, திறமையுள்ளவர், பேச்சாளர். அப். 18:24 ஏசா. 3:3.

**சாந்துக்காறைகள்** – Ornaments and chains around the camel's neck. ஒட்டகத்தின் கழுத்தில் உள்ள அணிகலன்கள் மற்றும் பொன் ஆபரணங்கள், நியா. 8:21:26.

**சாமக்கூட்டண்டையிலே** – Near the watch Tower, The place that overlooks the watch tower. காவல் கோபுரத்தின் அருகில், காவல் மேட்டுக்கு அருகில் 2 நாளா. 20:24.

**சாமாசி பண்ணுகிற தூதனானவர்** – Interpreting messenger, interpreter, An angel as a mediator. மொழி பெயர்க்கிற தூதன், மொழிபெயர்ப்பாளர், மத்தியஸ்தம் பண்ணுகிற தூதன். யோபு 33:23.

**சாயை** – Shadow. நிழல், பிம்பம் 2 இராஜா. 20:9–11 ஏசா. 38:7,8.

**சாரம்** – Sap, Strength, tempered, moisture, Essence, savour, Blood. திருப்தி, சாறு, இனிமை, ரசம், கருத்து, தனிச் சுவைத்திறம், இரத்தம். சங். 32:4; 104:16; ஏசா. 63:6; மத். 5:13.

சாலகம் – A tunnel, A channel, A gutter, A Conduit, water way, Aqua duct. தண்ணீர் வரும் பாதை, தண்ணீர் வரும் சுரங்க பாதை, கால்வாய், வாய்க்கால், குளம். 2 சாமு. 5:8; 2 இராஜா. 20:20; 18:17; ஏசா. 36:2.

**சாவதானம்** – Circumspect, Cautious, To be careful, Take diligent heed to do. கவனமாயிருத்தல், எச்சரிக்கையாக இருத்தல், ஜாக்கிரதையாக இருத்தல். யாத். 23: 13; உபா. 5:32; 6:25; யோசுவா 22:5.

**சாவி/சாவியான** – withered, Blighted, without grain. காய்ந்த, நோயுற்ற, தானியம் இல்லாத ஆதி. 41:23,27.

**சாஷ்டாங்கம்** – Prostrate Fall, Falling down face to the ground, lying flat on the ground to show respect. முகங்குப்புற விழுதல், நெடுஞ்சாங்கிடையாய் விழுந்து பணிந்து கொள்ளுதல். ஆதி. 17:3; 1 சாமு. 28:20.

**சாஸ்திரிகள்** – Wisemen. ஞானிகள். மத். 2:1.

**சிட்சை** – Admonition, Instruction, chastening, Correcting act, கடிந்துகொள்ளுதல், போதனையுடன் கூடிய கடிந்துரை, கண்டித்தல், திருத்துதல். எபே. 6:4; எபி. 12:5–11.

**சிந்திக்கப்பண்ணி** – giving success. காரியத்தைக் கைகூடி வரச்செய்தல், வெற்றியடைதல். ஆதி. 24:12.

**சித்திக்காது** – will not prosper, will not succeed. வாய்க்காது, வெற்றி பெறாது. 2 நாளா. 13:12 .

**சித்தி பெற்றான்** – Prospered. வாய்த்தது, வளம்பெற்றான். 2 நாளா. 31:21.

**சிரங்கை** – Handful. கை நிறைய எசே. 13:19.

**சிரேஷ்டம்** – Better. சிறப்பானது, சிறந்தது. நாகூம் 3:8.

**சிலம்பம்** – Fighting with a long stick. குச்சியை சுழற்றி சண்டையிடுதல் 1 கொரி. 9:26.

**சிலாக்கியம்** – Having access. செல்ல, அணுக உரிமை பெற்றிருத்தல் உரிமை, பேறு. எபே . 2:18.

**சிவிங்கி** – Leopard, A large spotted carnivorous animal like panther. சிறுத்தைப்புலி. உன். 4:8; தானி. 7:6.

**சீதளம்** – Cold. குளிர், குளிர்ச்சி ஆதி. 8:22.

**சீமைகள்** – Provinces. மாகாணங்கள். எஸ்றா 4:15.

**சீலோ** – The name of a place. At this place the taberbacle was erected. Shiloh means "The Lord of Peace" Josh 18:1; Gen 49:10. சீலோ' என்பது ஒரு இடத்தின் பெயர் இங்கே தான் ஆசரிப்புக் கூடாரம் நிறுவப்பட்டது. – 'சீலோ' என்றால் 'சமாதானக் கர்த்தர் என்பது பொருள். யோசுவா 18:1; ஆதி. 49:10.

**சீஷர்கள்** - Disciples. The followers of a Teacher. Followers of the Lord Jesus Christ. சீடர்கள், குருவைப் பின்பற்றுகிற வர்கள். ஒரு ஆசிரியரைப் பின்பற்றுகிறவர்கள். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்கள். "மாணாக்கர்" என்று தூய தமிழில் அழைக்கப்படுகிறது. மத். 5:1.

**சுகந்த வாசனை** – Fragrant Smell, Sweet Smell. நறுமணம், கந்த வர்க்கங்களின் நல்ல வாசனை. பிலி. 4:18.

**சுகிர்த சம்பந்தம்** – Sweet influence. இனிய விளைபயன், இனிய உள்ளாற்றல். யோபு 38:31.

**சுணை** – Rough and with minute thorny surface. Bristling. நுண்ணிய முட்களுள்ள மேற்பரப்பு. கூர்மையான முட்களை உடையது. எரே. 51:27.

**சுதந்தர பாத்தியம்** – Right, Right of inheritance. உரிமை, பரம்பரையாக வரும் உரிமை. எரே. 32:8.

**சுதந்தரம்** – Inheritance, Possession. உரிமை, சொந்தம், காணியாட்சி, சொத்து எண். 33:54; 1 பேது. 1:5.

**சுதந்தரவாளி** – Heir. உரிமையாளன், எல்லாவற்றிற்கும் சொந்தக்காரன். மூதாதையர், தந்தை சொந்துகளுக்கு உரிமையாளன். ஆதி. 15:3; கலா. 4:1; எபி. 11:7.

**சுதன்** – Son. குமாரன், மகன். ஆதி. 22:2;12; ரோ. 1:5.

**சுதேசி** – citizen. One of your own country. A native of his own country. நாட்டின் குடிமகன், சுயதேசத்தான் சொந்த தேசத்தான் லேவி. 16:29.

**சுத்தாங்கம்** – Purity, Innocence. சுத்தம், தூய்மை, பரிசுத்தம், குற்றமில்லாமை ஓசி. 8:5.

**சுமுத்திரை** – Accurate, correct, Honest, Just, Sincere. மிகச் சரியான, துல்லியமான, நேர்மையான நீதி. 11:1.

**சுயமான** – Pure. The Foaming blood of the grape. புதிய திராட்சரசம், சுத்தமான திராட்சரசம் உபா. 32:14.

**சுயம்பாகி** – The butler, the Chief baker அப்பம் தயாரிப்பவன், உயர்குடி மக்களின் சமையல்காரன். ஆதி. 40:1.

**சுயாதீனம்** – Free, Freedom, Liberty. விடுதலை, சுதந்திரம், உரிமை 1 கொரி. 10:29; கலா. 4:22; 23; 1 பேது. 2:16.

**சுவறச்செய்யும்/சுவறிப்போகும்** – Dry up, Sup up. காய்ந்து போகச் செய்யும், வற்றிப்போகச் செய்யும். ஆப. 1:9; ஓசியா 13:15.

**சுவிசேஷம்** – Gospel. Go and spell good News, Good things. சு + விசேஷம் = சுவிசேஷம் = நல்லசெய்தி. எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தி. மாற். 1:1; லூக். 2:10.

**சுன்னத்து / சுன்னத்துக்காரர்** – Cicumcision, Mutilation. Mutilators of the flesh. Those who cut off a portion of the flesh. விருத்தசேதனம், மாம்சத்தின் ஒரு பகுதியை வெட்டி நீக்குபவர்கள். விருத்தசேதனம் செய்கிறவர்கள். பிலி. 3:2.

**சுனை** – Spring. நீருற்று, நீர் வரும் ஊற்று. நீதி. 25:26.

**சூதக ஸ்திரீ** – Unclean woman after giving birth. பிரசவித்த பின் சுத்தமில்லாத, தீட்டுள்ள பெண். தூர ஸ்திரீ. லேவி. 12:2; 15:33.

**சூரைச்செடி** – Juniper tree. used to make brooms. A is a shady and thorny shrub and produces hot fire. நிழல் தரும் அடர்ந்த செடி. துடைப்பம் செய்யப் பயன்படும். நீண்ட நேரம் திவிரமாக எரியும். 1 இராஜா. 19:4; சங். 120:4.

**செம்புகம்** – A bird in the cuckoo family. குயில் குடும்பத்தைச் சேர்ந்த பறவை லேவி. 11:16; உபா. 14:15.

**செருக்கு** – Tender. பண்பு, சாதுவான. உபா. 28:54; ஏசா. 47:1.

**செல்விக்கையான** – Pleasant, Enjoyable, Luxurious. இன்பமான, இனிமையான, சொகுசான. ஏசா. 13:22.

**சேகரம் பண்ணவேண்டும்** – Make preparations, provide. சவதரித்து வைக்க வேண்டும், சேர்த்து வைக்க வேண்டும், ஆயத்தம் செய்ய வேண்டும். 1 நாளா. 22:5; 29:3;16.

**சேக்கல்** – Shekels. It is a weight about 125 pounds ie about 57 kg. 57 கிலோவுக்கு சமமான எடை. 1 சாமு 17:5.

**சேணம்** – Saddle. Rider's seat on a horse, ass or camel. பயணம் செய்யும்போது கழுதை, குதிரை, ஒட்டகம் முதலிய மிருகங்களின் மீது அமருவதற்காக போடப்படும் இருக்கை. 2 இராஜா. 4:24.

**சேராபீன்கள்** – Seraphims. Living creatures. Burning and shining celestial beings. Always worshipping and praising God. ஜீவனுள்ள சிருஷ்டிகள், எரிந்து பிரகாசிக்கிற விண்ணுலக

ஜீவன்கள். எப்போதும் தேவனை ஆராதித்துக்கொண்டும் துதித்துக்கொண்டும் இருப்பவை. ஏசா. 6: 2,6.

**சேர்வைக்காரர் / சேர்வைக்காரன்** – Captains. Commanders, தலைவர், உத்தரவிடுபவர், அதிகாரி. 2 இராஜா. 25:23; 1 நாளா. 27:1; தானி. 2:15.

**சேலா** – Selah. The Capital city of Edomites, later known as Petra. It was a centre of trade. Probably a musical notation indicating an intended pause. 'சேலா' என்ற இடம் ஏதோமியரின் தலைநகராக இருந்தது. பிற்பாடு பெட்ரா என்று அறியப்பட்டது. வணிக மையமாக விளங்கியது. பாடகர்கள் பாடும்போது சற்று 'இடைவெளி கொடு' என்பதின் குறிப்புச் சொல்லாக இருக்கலாம் என்று கருதப்படுகின்றது. 2 இராஜா. 14:17; ஆப. 3:3; 9:13.

**சேஷ்ட புத்திர சுதந்தரம்** – Right of the first born. தலைப்பிள்ளையின் உரிமை, தலைமகனின் உரிமை உபா. 21:17.

**சேஷ்ட புத்திரபாகம்** – Birth Right of the first born. தலைமகனுக்குரிய பிறப்புரிமை. ஆதி. 25:31–34.

**சேஷ்ட புத்திரன்** – First born, first son. முதல் மகன், தலைமகன் உபா. 21:17; யாத். 4:22.

**சேஷ்டம்** – First, Chief, முதல், தலையாய, மூத்த 1 நாளா. 5:2.

**சொகுசாவின் நிறம்** – Brightness. Appearance of fire. It relates to the divine glory. A brilliant glowing yellow or like some highly polished metallic alloy such as brass. பிரகாசமான. தெய்வீக மகிமையின் நிறம். அக்கினியின் தோற்றம். இளம் பச்சை, இளம் மஞ்சள் கலந்த நிறம். பளபளக்கும் வெண்கலத்தின் நிறம். எசே. 1:27; வெளி. 1:15.

**சொஸ்தமாக்கினார்** – Healing Sickness. குணமாக்கினார், சுகமாக்கினார் மத். 9:35; 12:13.

**சோரம்** – Unfaithful, whoring, whoredom. உண்மையற்ற, நெறிபிறழ்ந்த, வெட்கக்கேடான, வேசித்தனம். சங். 73:27; ஓசி. 1:2.

**ஞான திருஷ்டி** – Divination, Foretelling. Prophecy. முன்னுரைத்தல், தீர்க்கதரிசனம் சொல்லுதல், தரிசனம் பார்த்து சொல்லுதல். ஆதி. 44:5,15.

**ஞான திருஷ்டிக்காரன்** – Seer, Prophet, A Man of God. A Man who stands to inquire God. In the olden days he was called seer. In the Later times he was called prophet. தேவ மனிதன். தேவனிடம் விசாரித்துச் சொல்பவன். முற்காலத்தில் ஞானதிருஷ்டிக்காரன் என்று அழைக்கப்பட்டவன், பிற்காலத்தில் தீர்க்கதரிசி என்று அழைக்கப்பட்டான். 1 சாமு. 9:6;9; 2 சாமு. 15:27.

**ஞானஸ்நானம்** – Baptism, Immersion in water. தண்ணீரில் மூழ்குதல். அடக்கம் பண்ணப்படுவதற்கு ஒப்பான செயல். மத் 3:6,7.

**ஞானார்த்தம்** – Spiritual Meaning, Spiritually. ஆவிக்குரிய அர்த்தம். வெளி. 11:8.

**ஞானேந்திரியங்கள்** – Senses exercised to discern good and evil. நன்மை, தீமையை ஆராய்ந்து நிதானிக்கும் அறிவு. எபி. 5:14; ஏசா. 7:14–16.

**டேகை** – Hawk. பருந்து. லேவி. 11:16.

**தகசுத்தோல்** – Badger's skin. This marine animal belongs to the whale family. It abounds on the coral banks of

Red sea and in tropical waters. இது கடல் வாழ் மிருகத்தின் தோல். திமிங்கிலத்தின் வகுப்பைச் சேர்ந்தது. செங்கடலின் பவளப்பாறைகளிலும் வெப்ப மண்டலக் கடல்களிலும் வசிக்கும் மிருகம். இதன்தோல் தகசுத்தோல் எனப்படும். யாத். 39:34.

**தகைவிலான் குருவி** – Swallow. சிட்டுக்குருவி, ஊர்க்குருவி சங். 84:3; ஏசா. 38:14.

**தசமபாகம்** – Tithes, One tenth (1/10) தசம் என்றால் பத்து. தசம பாகம் என்றால் பத்தில் ஒருபாகம் என்று பொருள் ஆதி. 14:20.

**தச்சர்/தச்சன்** – Carpenter, Wood worker/ Crafts men. மர வேலை செய்பவர், கல்தச்சர், சிற்பாசாரியையும் குறிக்கும். 2 இராஜா. 24:14; 1 கொரி. 3:10.

**தடை கட்டப்படாத** – without enchantment, Not charmed. கட்டுப்படுத்தப்படாத, அடக்கப்படாத பிர. 10:11; எரே. 8:17.

**தட்சண மண்டலங்கள்** – The Chambers of the south. The constellations of the South. தட்சணம் என்றால் தெற்கு என்று பொருள். தென் திசை / தெற்குத்திசை விண்மீன் குழுக்கள் என்று பொருள்படும். யோபு 9:9.

**தட்டார் / தட்டான்** – Founder, Goldsmith. Silversmith. உலோக வேலை செய்பவர், பொற்கொல்லர், வெள்ளியில் வேலை செய்பவர். நியா. 17:4; ஏசா. 40:19; எரே. 10.9; அப். 19:24.

**தண்டலாம்** – May demand. May exact. கேட்கலாம், வாங்கலாம். உபா. 15:3.

**தண்டல்காரன்** – One who receives tax, Receiver, A tax collector, Publican. வரி வசூலிப்பவன், வசூல் செய்பவன், ஆயக்காரன். ஏசா. 33:18; தானி. 11:20.

**தண்டாமல்** – Not demanding, Do not exact it, Not requiring it. கேட்காமல், வாங்காமல். உபா. 15:2.

**தண்டாயுதம்** – The Staff, The club, A heavy Stick thick at one end, a battle axe. தடி, கனமான தடி, ஒரு பக்கம் மெல்லியதாகவும், ஒரு பக்கம் தடித்தும் இருக்கும் ஆயுதம். ஏசா. 10:5; எரே. 51:20.

**தண்டில் சேவகம்** – Serving in the army, Serving in the troop. இராணுவத்தில் சேவை செய்தல் 1 கொரி. 9:7; 2 தீமோ. 2:4.

**தண்டினான்** – Demanded, Received, Exacted. வாங்கினான், வசூலித்தான். 2 இராஜா 15:20.

**தண்டு** – 1. Staff, stem. 2. Army, Troops. Band, Raiding party, Rear guard, Serving as a soldier. 3. Rowing the boat, Sailing 1. உருட்டுத்தடி, உருட்டுக்கம்பு, கோல் எண். 4:6; 1 நாளா. 15:15; 2. இராணுவம், படை யோபு 19:12; யோவேல் 2:20 பின் தண்டு காவல் குழு, காவலர் குழு. யோசு. 6:9,13; 1 சாமு. 30:8,15, 2 சாமு. 23:13. 3. படகு தண்டு வலித்தல், துடுப்புப்போடுதல் யோனா 1:13.

**தத்தம்** – Gift, Hand over, Submit. வெகுமதி, சுதந்தரம், சொந்தம், பங்கு ஒப்புக்கொடுத்தல், ஒப்படைத்தல், அர்ப்பணித்தல் எண். 8:19; 18:7.

**தத்தளிப்பு** – Afraid, Trembling. Trouble பயம், நடுக்கம், கலக்கம், குழப்பம். 2 சாமு. 22:46; யோபு 3:26.

**தப்படி** – Pace. Distance between two legs when walking. நடக்கும் போது இரண்டு காலடிகளுக்கு இடையே உள்ள தூரம் 2 சாமு. 6:13.

**தமக்கை** – Elder sister. அக்கா, மூத்த சகோதரி யாத். 2:4,7.

**தமையன்** – Elder brother. அண்ணன், மூத்த சகோதரன். ஆதி. 38:8;1 சாமு. 20:29

**தம்மூசு** – Tammuz. Tammuz was a Babylonian deity. when he died the vegetation dried up. He was recovered by his wailing wife Ishtar. The women were mourning for this deceased deity at the north gate of Jerusalem temple. தம்மூஸ் ஒரு பாபிலோனிய ஆண் தெய்வம். அவன் இறந்தபோது பயிர்வகைகள் வாடிப்போனதாக கருதப்பட்டது. இஷ்டார் என்ற இவனது மனைவி இவனைத் திரும்ப உயிருடன் கொண்டு வந்தாள் என்பது நம்பிக்கை. இறந்த இந்த தெய்வத்திற்காக பெண்கள் எருசலேம் தேவாலயத்தில் உட்கார்ந்து அழுததாக வாசிக்கிறோம் எசே. 8:14.

**தயாபரர்** – God who is with loving kindness. கிருபையுள்ள தேவன், காருணியமுள்ள தேவன் சங். 144:2.

**தரிசு நிலம்** – A Land that was neither cared nor sown. Fallow ground. உழப்படாத, விதைக்கப்படாத நிலம் பயன்படுத்தப்படாத நிலம். உபா. 21:4; எரே. 4:3

**தரித்து** – Put on, wearing up, Abide, Tarry, stand still, Tarry, Calling name, அணிந்து கொள்ளுதல். ரோ. 13:14; கலா. 3:27 தங்கியிருத்தல். 2 சாமு. 15:28; அப். 15:34. நின்று விடுதல் 2 சாமு. 15:17; 20:12 ; 2 நாளா. 20:17 பெயர்சூட்டுதல் 2 சாமு. 18:18; ஏசா. 7:14; மத். 1:21,23.

**தர்ப்பணங்கள்** – Looking glassess ie the Bronze mirrors used as looking glasses இஸ்ரவேல் பெண்கள் தங்கள் முகங்களைப் பார்க்க பயன்படுத்தும் பளபளப்பான வெண்கல முகம் பார்க்கும் கண்ணாடி யாத். 38:8.

**தலைச்சன் பிள்ளைகள்** – The fist born child. முதல் பிறந்த குழந்தை. எண். 33:4.

**தலையாரிகளின் அதிபதி** – Captain of the guards. Captain of the King's guards. காவல் காக்கிறவர்களின் தலைவன், இராஜாவின் காவலாளரின் அதிபதி, தலைவன் ஆதி. 39:1; 37:36; தானி. 2:14.

**தலையீற்று** – First born of the cattle. மிருக ஜீவன்களில் முதற்பிறந்தவை. யாத். 12:29.

**தவசம்** – Corn, grain. தானியம், தானிய வகை நியா. 20:10; நெகே. 10:31; ஆமோஸ் 8:6.

**தவனம்** – Thirst for water. தண்ணீர் தாகம். யாத். 17:3.

**தளகர்த்தர்/தளகர்த்தன்** – Captains, Officials, Marshals. தளபதி, தலைவர், தலைமை தாங்கி நடத்திச் செல்பவர், அதிகாரிகள், முதன்மையானவர்கள். எரே. 51:27; நாகூம் 3:17.

**தளவரிசை** – Pavement, Floor of the house temple. தளம், கற்களால் பாவப்பட்ட தளம். 1 இராஜா. 6:15; 16;30 ; 2 நாளா. 7:3 எசே. 42:3; யோவா. 19:13.

**தளவாடங்கள்** – Equipments. stuff. கருவிகள், ஆயுதங்கள், தட்டுமுட்டு சாமான்கள் 1 சாமு. 10:22.

**தறித்து** – Cut it off. வெட்டிப்போடுதல், துண்டித்துப் போடுதல் மத். 18:8;21:8.

**தற்பொழிவு** – Covetousness, Self Seeking, Doing something because of advantage. பேராசை, சுயலாபம், தன்னுடைய நன்மைக்காக எதையாவது செய்வது. எரே. 22:17; 1 கொரி. 13:5; யூதா 16.

**தாக்கீது** – Decree, An edict, Order. கட்டளை, ஆணை, தீர்ப்பு தானி. 6:7,8.

**தாங்கல்** – Toward, Longing for, Displease விரும்புதல், ஏங்குதல், பட்சமாயிருத்தல், வெறுப்பு கொள்வது 2 சாமு. 14:1; 1 சாமு. 29:7.

**தாசன்** – Servant. A fervent devotee of God. ஊழியக்காரன், வேலைக்காரன், பணிவிடைக்காரன், தேவனுக்கென்று தன்னை மனப்பூர்வமாய் அர்ப்பணித்தவன். யோபு 1:8; தானி. 6:20.

**தாசி** – Harlot, Prostitute. வேசி, விலைமகள் ஆதி. 38:21.

**தாணையம்** – Garrison, Outpost, Military Force stationed in a place. கோட்டை, கோட்டைக்குள் இருக்கும் படை, யுத்தத்திற்காக அணிதிரண்டு இருக்கும் படை, 1 சாமு. 13:3; 14:15; 2 சாமு. 8:6.

**தாதிகள்** – Maid, Maidens. பணிப்பெண்கள், தோழியர், தோழிகள் யாத். 2:5; எஸ். 2:9; 4:16.

**தாபரங்கள்/ தாபரம்/ தாபர ஸ்தலம்** – Pastures, The grass lands, Habitation, Dwelling place, Plants, Vegetation. மேய்ச்சல் நிலம், புல்வெளிகள், தங்குமிடம், புகலிடம். சங். 65:12; 91:9 ஆமோஸ் 1:2; யோபு 30:23 தாவரங்கள், செடி கொடிகள் 1 இராஜா. 4:33.

**தாபரிக்கப் பண்ணுவேன்** – I Will make you to dwell. தங்கி யிருக்கப் பண்ணுவேன், குடியிருக்கப் பண்ணுவேன். ஓசியா 12:9.

**தாரை** – Trumpet. எக்காளம், ஊதுகொம்பு மத். 6:2; 9:23.

**தாலந்து** – Talent, It is a weighing measure, An ancient coin among Greeks and Romans. இது ஒரு நிறுத்தல் அளவை.

ரோமர்கள், கிரேக்கர்கள் பயன்படுத்திய நாணயம் 2 இராஜா. 5:22,23; யாத். 38:24.

**தாலம்** – Charger, Dish, Bowl. தட்டு, தாம்பாளம், கிண்ணம். மத். 14:8,11; 26:23.

**தாவரம்** – House, Place. வீடு, தாபரிக்கும் இடம். யோபு 30:23. Plants. செடி கொடிகள், தாவர வர்க்கம் 1 இராஜா. 4:33.

**தாவிளை** – It is good, It is better. நல்லது, நலமாயிருக்கும். யாத். 16:3; எண். 20:3; உபா. 5:29.

**தாவு** – Waste land, Place of living. வனாந்தரம், ஒதுக்கிடம், வாழ்விடம் மல். 1:3.

**தாழ்ச்சி** – Shall be in want. குறைவு, சிறுமை. எஸ்றா 6:9; சங். 23:1.

**தாளடி** – Stubble, Straw, short end of stalk left after harvest. வைக்கோல், அறுவடைக்குப்பின் வயலில் நிற்கும் அரிதாள், அரி தாள் கட்டு. யாத். 5:12; 15:7.

**தாள்ப்பயிர்** – Bud, Not matured. இன்னும் தானியம் உண்டாகாத நிலை. யாத். 9:31.

**தாற்பரியம்** – Meaning. அர்த்தம், பொருள், கருத்து எசே. 17:12.

**தாற்றுக்கோல்** – Ox goad, sharp pointed stick for driving cattle. தார்க்குச்சி. மாடுகளை அடக்க பயன்படுத்தப்படும் ஒரு கோல். அதன் ஒரு முனையில் ஒரு ஊசியும் சாட்டையும் இருக்கும். நியா. 3:31; 1 சாமு. 13:21, பிர. 12:11.

**தானியப்போர்** – Stacks of corn, Stacks of grain. தானியக் குவியல் யாத். 22:6.

**தியங்குகிறது** – overwhelms, grows faint, disquieted. சோர்ந்து போவது, பெலனற்றுப்போவது. சங். 42:5;11; 143:4; எசே. 21:7.

**திரட்சி** – Many, Multitude, Plenty, Great. அதிகம், பெருக்கம், திரள். சங். 5:10; 2 நாளா. 31:10.

**திரணமாய்ப் பேசி** – Sneer. Expressing scorn or contempt. வெறுப்பாகப் பேசி, ஏளனமாகப்பேசி. மல். 1:13.

**திரணை** – A round about border in the Table of shew bread and at the altar of incense. சமுகத்தப்பங்களின் மேஜை மற்றும் தூப பீடம் ஆகியவற்றின் விளிம்பில் உள்ள வேலைப்பாடு. யாத். 25: 23–25; 30:3.

**திரவியம்** – Money, A large sum. பணம், பெருந்தொகை லேவி. 27:15; அப். 22:28.

**திராட்சரசத் துருத்திகள்** – Wine Skins. திராட்சப் பழ ரசம் வைக்கும் தோல் பைகள். யோசு. 9:4; ஓசியா 7:5.

**திராணி** – Ability, Able to, Be in aposition to. இயலும் சக்தி, தாங்கும் சக்தி, திறமை 1 நாளா 29:14; லேவி. 27:8 தாங்கக்கூடிய, சகிக்கக்கூடிய 1 கொரி. 10:13.

**திரியாவரக்காரன்** – Froward, Cunning fellow. வஞ்சகன், தந்திரக்காரன், கபடம் உள்ளவன். யோபு 5:13.

**திரியாவரம்** – Frowardness, plots evil. வஞ்சகம் செய்தல், சூழ்ச்சி செய்தல் நீதி. 6:14.

**திருக்கு** – Deceitful. வஞ்சகம், ஏமாற்றுதல் எரே. 17:9.

**திருஷ்டாந்தங்கள்** – Proofs. Evidence helping to establish a fact. நிரூபணங்கள், உதாரணங்கள், உண்மையை நிலைநாட்ட உதவும் சான்றுகள் அப். 1:3.

**திருவுளம்** – Respect. கருத்தில் கொள்ளுதல் 1 இராஜா. 8:28. His will. அவரது சித்தம் அப். 22:14. Said. சொன்னார் அப். 7:32 Seemed good அவரது விருப்பம். மத். 11:26.

**திரைகள்** – Billows, Waves. கடல் அலைகள். சங். 42:7; எசே. 27:34.

**திவ்விய பலம்** – Power of God. தெய்வீக பலம், தேவனுடைய பலம். 2 கொரி 6:7.

**திவ்வியம்** – Goodly. மிகச் சிறந்த 2 நாளா. 36:19. Divine. தெய்வீக 1 பேது. 1:3,4.

**திறந்திருக்கிற பிரதி/ திறந்திருக்கிற பிரதி பத்திரம்** – Evidence of purchase which is open. நகல் பத்திரம், முத்திரையிடப்படாத பத்திரம். எரே. 32:11,14.

**தினவு** – Itching (ears). அரிப்பு 2 தீமோ. 4:3.

**தீர்க்கம்** – Make it plain, make it clear, Distinct. பிணீதீ 2:2 தீர்க்கம் – தெளிவு, துலக்கம் எஸ்றா 4:18; நெகே. 8:8, ஆப. 2:2

**தீர்வை** – Custom, Tax, Tribute. சுங்கம், வரி, ஆயம். நெகே. 5:4; மத். 17:25; ரோ. 13:7.

**துணிக்கைகள்** – Small Pieces, Fragments, Morsels, Broken Pieces, crumbs. சிறு துண்டுகள், சிந்திய துகள்கள். சங். 147:17; லூக். 16:21.

**துண்டரிக்கக்காரர்** – Robbers, Violent men. திருடர்கள், வன்முறையாளர்கள், கலகக்காரர், கொடூரமானவர்கள். தானி 11:14.

**துபாசி** – Interpreter. மொழிபெயர்ப்பாளர் ஆதி. 42:23.

**துப்பட்டி** – Cloth, Linen cloth, Blanket, Thick cloth. துணி,

சணல் நூல் துணி, சமுக்காளம், போர்வை. எண். 4: 6–9; அப். 10:11; மத். 27:59; மாற். 15:46.

**துய்யதான** – Clean. சுத்தமான மத். 27:59.

**துரவு** – Fountain, well. ஊற்று, கிணறு ஆதி. 26 :18–22; நெகே. 9:25.

**துராகிருதம்** – Evil deeds, Insolent. தீபொல்லாங்கு, தீமையானவை ரோமர் 1:30.

**துராகிருதன்** – Evil doer, Rude . தீமை செய்கிறவன், முரடன் 1 சாமு. 25:3.

**துரிசாய் நடந்து** – going fast, Rapid progress. அதிவேகமாக. எஸ்றா 5:8;

**துரிஞ்சில்கள்** – Bats. வௌவால்கள் ஏசா. 2:21.

**துருகங்கள்** – Towers, Strong holds. கோட்டைகள், பாதுகாப்பான அரணான கோட்டைகள். செப். 3:6.

**துருக்கங்கள்** – Tower, watch tower, Rampart. அரணான கோட்டை, மலையின் மேல் கட்டப்பட்ட கோட்டை மீகா 4:8; சங். 18:2; நியா. 9:49; 51:52.

**துருத்தி** – Wine Skin, Bottle. திராட்சரசம் முதலியவற்றை பத்திரப்படுத்தும் தோல் பை. ஆதி. 21:14,15; யோபு 32:19; சங். 56:8; ஆப. 2:15; மத். 9:17.

**துரும்பு** – Stubble, Mote. வைக்கோல், அரிதாள் கட்டை, உறுத்தும் மிகச் சிறிய பொருள். ஒப. 1:18; மல். 4:1; மத். 7:3–5.

**துருவச்சக்கர நட்சத்திரங்கள்** – Arcturus. வடக்கு விண்மீன் குழு யோபு 9:9; 38:32.

**துர்ச்சனப்பிரவாகம்** – Floods of ungodly men. தேவனற்றவர்களின் பெருந்திரள். 2 சாமு. 22:5; சங். 18:4.

**துலக்கம்** – Very Plain, Polished. தெளிவாக, தீர்க்கமாக, பிரகாசமாக, பிரகாசம், பளபளப்பு. உபா. 27:8; ஏசா. 49:2.

**துலாக்கோல் / துலாம்** – Scales, Balance, weighing instrument. அளவுகோல் – தராசு. ஏசா. 40:12.

**துறடு** – Hook. கொக்கி, துறட்டி. ஆமோஸ் 4:2; 2 இராஜா. 19:28.

**துறைகள்** – Watering Places. நீர் நிலைகள், தண்ணீருள்ள இடங்கள். நியா. 7:24.

**துன்மார்க்கர் / துன்மார்க்கன்** – Ungodly, wicked. மார்க்கம் தப்பி நடக்கிறவன், துஷ்டன், துன்மார்க்கன். சங். 1:1.

**துன்னாள்** – Day of trouble. துன்பநாள், துயரநாள் யோபு 30:25.

**தூபவர்க்கம்** – Incense, perfume. A perfume is made with Stacte, Onycha, Galbanum and Frankincense after the art of apothecary. It is specially prepared to be used in the tabernacle. வெள்ளைப்போளம், குங்கிலியம், அல்பான் பிசின், சாம்பிராணி முதலிய வாசனைப் பொருள்களால் ஆனது. ஆசரிப்புக் கூடாரத்தில் பயன்படுத்த தேவனால் கட்டளையிடப்பட்டது. யாத். 30:34–36.

**தூலம்** – Threshing Instrument. போரடிக்கும் கருவி. ஏசா. 28:27.

**தெண்டனிட்டு** – Bow the knee. முழங்கால்படியிட்டு ஆதி. 41:43.

**தெப்பம்** – Float, Raft, Catamaran. மிதவை, கட்டுமரம். 1 இராஜா. 5:9.

**தெள்ளுப்பூச்சி** – Flea. A most annoying and unfortunately most common insect in the East. கீழை நாடுகளில்

சாதாரணமாகக் காணப்படுகிற மிகவும் தொல்லை தரும் பூச்சி. 1 சாமு. 24:14; 26:20.

**தெற்றுகள்** – Watch posts, Towers, Mount. மண்மேடுகள், அலங்கம், துருகம், அடைப்பு ஏசா. 29:3; 2 சாமு. 20:15.

**தேசாந்தரி** – One who wanders from his father's house, wanderer, vagabond. அலைந்து திரிபவர், பரதேசி. ஆதி. 20:13; அப். 19:13.

**தேராபீம்** – These were household gods. These images were in human form. The Fist son is supposed to posses these images. The theft of the household gods by Rachel was a serious offense aimed at pressing for her husband the first title to her father's estate. The children of Israel used this for some time to inquire and to know the will of god. இவைகள் வீட்டுத் தெய்வங்கள். மனித உருவில் இருந்தன. குடும்பத்தில் மூத்த மகனுக்கே இவற்றை வைத்துக்கொள்ளும் உரிமை உண்டு. இவை தனது கணவனுக்கு தன் தகப்பனின் சொத்துக்களைப்பெற உரிமை தரும் என்றே ராகேல் இவற்றைத் திருடிக்கொண்டாள். சில காலமாக இஸ்ரவேல் புத்திரர் தேவ சித்தம் அறிய இதைப் பயன்படுத்தினார்கள். ஆதி. 31:19; 30–35; நியா. 17:5; ஓசி. 3:4 நியா. 18:5; 6:10.

**தேவயத்தனமாய்** – Divinely. தெய்வீகமாக, தெய்வச்செயலாக. அப் 10:22

**தொந்திப்பானவன்** – Companion, one who keeps company. சேர்ந்து பழகுகிறவன், உறவை ஏற்படுத்தியவன். நீதி. 29:3.

**தொய்ந்துபோகிறது** – Fails, gives disappointment. தளர்ந்து போகிறது. நம்பிக்கையற்றுப்போகிறது. சங். 143:7.

**தொழுமரம்** – Stocks, Fetters, Shackles. மரத்துடன் கால்களை பிணைத்து வைப்பதற்கான மர அமைப்பு. சங். 105:18; அப். 16:24.

**தொழுவடித்து** – Put in Stocks. தொழுமரத்தில் பிணைத்தல். யோபு 13:27.

**தோண்டி** – Cruse, Jar, Pot. குடம் 2 இராஜா. 2:20.

**தோப்பு விக்கிரகங்கள்** – Idols in the groves. Images for worship in the midst of a grove. தோப்பில் உள்ள விக்கிரகங்கள். வழிபட தோப்பில் உண்டாக்கப்பட்ட சிலைகள். நியா. 3:7; உபா. 16:21; 1 இராஜா. 14:15; 2 இராஜா. 23:4,6,7.

**நகல்** – Copy. பிரதி. எஸ்றா 4:11.

**நகைக்கிறார்** – Laughs. சிரிக்கிறார் சங். 37:13.

**நசரேயன்** – This word has two meanings (1) Nazarite (2) Nazarene (1) Nazarite. One of either sex who was bound by a vow of peculiar kind to be set apart form others for the service of God. The obligation was either for life or for a defined time. இந்த வார்த்தை இரண்டு அர்த்தங்களைக் கொண்டது. 1, ஆண் அல்லது பெண் தேவனுடைய ஊழியத்துக்காக தங்களைப் பிரித்துக்கொண்டு, ஒரு வித்தியாசமான விரதத்தை மேற்கொண்டவர்கள் நசரேயன் என்னப்படுவார். இந்த விரதத்தை ஆயுள் முழுதுமோ அல்லது குறிப்பிட்ட காலத்திற்கோ கைக்கொள்ளலாம். இவரை நசரேயன் என்பர். எண். 6:1–21; நியா. 13:7,14. 2. நாசரேத் என்னும் ஊரைச் சேர்ந்தவர் மற்றும் நாசரேத் ஊரில் பிறந்து வளர்ந்தவர். இவரையும் நசரேயன் என்பர். மத். 21:11. 2:23.

**நசல் கொண்டது** – Sick. வியாதிப்பட்டது, நோய் கொண்டது எசே. 34:4;16; மல். 1:8;13.

**நடபடிகள்** – Acts, Deeds, Doings, Events செயல்கள், கிரியைகள், நிகழ்வுகள் 1 நாளா. 29:29.

**நடபடி புஸ்தகங்கள்** – Books of the records. Books of the archives. தஸ்தாவேஜிகள், ஆவணங்கள், கால வர்த்த மானங்கள் மற்றும் நிகழ்வுகள் எழுதியிருக்கிற புத்தகங்கள் எஸ்றா 4:15; எஸ்தர் 6:1.

**நடைகாவணங்கள்/நடைக்காவணங்கள்** – Galleries, Verandah நீண்ட தாழ்வாரம், கூடங்கள். உன். 7:5; எசே. 41:15,16; 42:3,5.

**நமுட்டை** – Crane, Stork. கொக்கு, நாரை. ஏசா. 38:14.

**நரஜீவன்** – Human being, Man, Person. மனிதன், மனுஷன், மானுடன், மனுபுத்திரன். லேவி. 27:28,29.

**நலவு** – Speaking friendly, Speaking kindly. அன்பாகப் பேசு நியா. 19:3.

**நவமாய்ப் பூசினபின்பு** – After it is plastered newly. வீடு புதிதாக சாந்து பூசின பின்பு. லேவி. 14:43.

**நவமான** – New. புதிய எசே. 36:26; மாற்கு. 14:25.

**நளதம்** – Perfume made of Nard, Spikenard or liquid nard. An aromatic oil extracted from East Indian plant.'நளதம்' என்னும் செடியிலிருந்து தயாரிக்கப்படும் வாசனைத் தைலம். மாற்கு 14:3.

**நற்கந்தம்** – Sweet Savour, A sweet smell, Pleasant odour, Fragrance. நறுமணம் 2 கொரி. 2:15.

**நாகசுரக்காரர்** – Those who play the harp. Harp is a stringed instrument.நாகசுரம் என்பது கம்பிகள் உள்ள இசைக்கருவி.

இதை வாசிப்பவர் நாகசுரக்காரர். தற்காலத்தில் வாயால் ஊதி இசைஎழுப்புகிற கருவிகளையும் குறிக்கின்றனர். ஆதி. 4:21.

**நாச்சியார்** – Mistress. எஜமாட்டி ஆதி. 16:8;9; 2 ராஜா. 5:3.

**நாணல்** – Reeds, Bulrushes. These are marsh plants having long hallow stem like papyrus. இது ஒரு சதுப்பு நிலத் தாவரம். நீண்ட குழல் போன்ற தண்டுகள் உள்ளவை 'பாப்பிரஸ் போன்றது. யாத். 2:3.

**நாபி** – Navel. A round depression on the surface of the belly. கொப்பூழ், தொப்புள். நீதி. 3:8; உன். 7:2.

**நாலத்தொரு** – One fourth, Fourth part, Ouarter. நான்கில் ஒரு பகுதி, கால் பாகம் 1 இராஜா. 6:33.

**நாழிகை** – At once, At the same time, Immediately; Hour, Time. உடனே, அந்நேரமே, அந்த நேரத்திலேயே மத். 8:13; 15:28. நேரம், வேளை மத். 24:36;50; மாற்கு 13:11, 32.

**நாளாகமம்** – A record of events that happened in the past. கடந்த காலத்தில் நடைபெற்ற சரித்திர நிகழ்வுகள் எழுதப்பட்டுள்ள புத்தகம். எஸ்றா 4:15; 6:1.

**நிக்கிரகம்** – Destroy, Destruction. அழித்தல். ஆதி. 6:7; 7:4 கட்டுதல், சகோதரக்கட்டு, ஐக்கியம். சக. 11:7,14.

**நிக்கொலாய் மதத்தினர்** – Nicolaitans. A Sect or party which arose in the apostolic period of the church. They indulged in idolatry. They ate food offered to idols . Denied God to be the creater of the world. They were immoral people and engaged in fornication. அப்போஸ்தலர் காலத்தில் எழும்பிய ஒரு பிரிவினர். விக்கிரக ஆராதனைக்காரர். விக்கிரகங்களுக்குப் படைத்ததை உண்பவர்கள். தேவன் உலகத்

தைப் படைத்தார் என்பதை மறுப்பவர்கள். ஒழுக்கம் கெட்ட வர்கள். வெளி. 2:6:15.

**நிசார்கள்** – Hosen, Trousers. கால்சட்டை, சல்லடங்கள் தானி. 3:21.

**நிணம்** – Fat. கொழுப்பு நியா. 3:22.

**நிணம் துன்னினபோது** – Obese, Obesity. உடல்பருமன், உடம்பு பருத்தபோது உபா. 32:15.

**நித்தியம்** – Eternal., Everlasting Time without any beginning and end. Time which cannot be measured. எப்போதும், ஊழிக்காலம், யுகாயுகம். தொடக்கமும் முடிவும் இல்லாத காலம் அளக்கப்பட முடியாக காலம் ஆதி. 21:33; 1 நாளா. 12:32; சங். 119:160.

**நித்திய ஜீவன்** –Eternal life. முடிவில்லா வாழ்க்கை. யோவான் 3:16.

**நிபச்சொல்** – Speaking Vanity, Malicious பொல்லாப்பான பேச்சு, விரோதமான பேச்சு,. ஏசா. 58:9.

**நிமித்தம்** – Enchantments 1. To Seek sorcery, Magic, witchcraft. சகுணம் பார்த்தல் எண். 24:1 காரணம், முகாந்தரம் சங். 69:4.

**நியாய சாஸ்திரிகள்** – Teachers of the Law. A lawyer. நியாயப் பிரமாணத்தைப் போதிக்கிறவர்கள். லூக்கா 5:17.

**நியாயப்பிரமாணிகன்/நியாயப்பிரமாணிக்கன்**– A Law giver. சட்டம், ஒழுங்கு தருபவர். கட்டளைகள், நியமங்கள் ஆகியவற்றை அமைத்துத் தருபவர். ஆதி. 49:10; உபா. 33:21; சங். 60:7.

**நிருபம்** – Epistle, Letter. கடிதம் 1 தெச. 5:27.

**நிர்த்தூளியாக்கினார்கள் (நிர்த்தூளி)** – Destroyed. அழித்துப்போட்டார்கள். 2 இராஜா. 19:18; சங். 74:8;.90:3.

**நிர்ப்பந்தம்** – Calamity, Misery, wretched. துன்பம், துக்கம், விசனம். யோபு 6:2; யாக். 5:1; ரோமர் 7:24.

**நிர்மூலம்** – Consume பட்சித்துப்போடுதல், சர்வ அழிவு யாத். 33:3; யோபு 4:9; புல. 3:22.

**நிர்விசாரம்** – At ease, Feel Secure. Amos 6:1 யாரைப்பற்றியும் எதைப்பற்றியும் அக்கறை, கவலை, கவனம் இல்லாமல் இருத்தல். பாதுகாப்பாக, பயமின்றி இருத்தல் ஆமோஸ் 6:1.

**நிஷ்டூரம் (நிட்டூரம்)** – Outrageous. மூர்க்கமான, மிகக்கொடிய. நீதி. 27:4.

**நீசர்/நீசன்** – Base, vile, Mean men. இழிவானவர்கள், அற்பமானவர்கள் சங். 35:15; உபா. 25:3; 2 சாமு. 6:22.

**நீறாக** – Lime, Ash. சாம்பலாக. ஆமோஸ் 2:1.

**நுகத்தடி** – Yoke. A wooden bar placed on the neck of the oxen to plough and draw cart. நிலத்தை உழுவதற்காகவும் வண்டியை இழுப்பதற்காகவும் காளை மாடுகளின் கழுத்துகளின் மேல் பூட்டப்படும் மர உருளை. லேவி. 26:13.

**நுழுந்துவானாக** –Let him put his mouth in the dust. தன் முகத்தை மண்ணில் புதைப்பானாக. புல. 3:29

**நெகிழ** – Forsake. கைவிட. சங். 138:8.

**நெசவுக்காரரின் படைமரத்தின் கனதி** – In the thickness of the weaver's beam. நெய்கிறவனின் படைமரத்தின் அளவு. 1 சாமு. 17:7; 2 சாமு. 21:19.

**நெடிதாங்கிடையாய்** – Falling straightway all along on the earth, Falling face to the ground. நடுஞ்சாங்கிடையாய், சாஷ்டாங்கமாய், தரையில் முகங்குப்புற. 1 சாமு. 28:20; மத். 2:11.

**நெரிசல்** – Broken. Levi 22:22 உடைந்தது, எலும்பு முறிந்தது. லேவி. 22:22.

**நெரிஞ்சில்** – Brier, Thorny Bush. முட்கள் உள்ள செடி. நியா. 8:7,16; ஏசா. 5:6.

**நெருக்கிடை** – Afflication. பேரிடர், துன்பம், வேதனை. சக 8:10.

**நெளிவான சர்ப்ப நட்சத்திரம்** – Fleeing Serpent, Crooked Serpent. Stars looking Like so. பாம்பு போல் காட்சியளிக்கும் நட்சத்திரங்களின் தொகுதி யோபு. 26:13.

**நேமித்தவர்** – One who had appointed. நியமித்தவர். மீகா 6:9; 1 சாமு. 25:30

**நேரஸ்தராக மாட்டீர்கள்** – You shall not trespass. you will not be guilty. அக்கிரமக்காரர் ஆக மாட்டீர்கள். 2 நாளா. 19:10.

**நேரஸ்தராகாதபடிக்கு** – Trespass not against the Lord. க்கிரமக்காரர் ஆகாதபடிக்கு. குற்றவாளிகள் ஆகாதபடிக்கு. 2 நாளா. 19:10.

**நொய்** – ground or broken grain or corn. உடைபட்ட தானியம், குறுணை. 2 சாமு. 17:9.

**பகுதி (தீர்வை, ஆயம்)** – Toll (Tribute, Custom) சுங்கம், கப்பம் (திறை), தீர்வை. எஸ்றா 4:13.

**பகுதி கட்டுதல்** – Paying tribute. கப்பம் கட்டுதல். ஆதி. 49:15; உபா. 20:11.

**பகுதி விசாரிப்புக்காரன்** – Incharge of forced labour. கடின வேலை செய்கிறவர்களை விசாரிக்கிறவன், அவர்களுக்குப் பொறுப்பானவன் 1 இராஜா. 4:6.

**பச்சைக்கிளிகள்** – Green locust, crawling locust. Caterpillar that suddenly appears in great numbers and devouring herbage. தாவித்தாவிச் செல்லும் பச்சை நிற வெட்டுக்கிளிகள். திடீரென திரள் திரளாகத் தோன்றி தாவரங்களை அழிக்கும். யோவேல் 1:4; 2:25; எரே. 51:14.

**பச்சைப்புழு** – Palmer worm, chewing locust. தாவரங்களின் பச்சையத்தை அரித்துத்தின்னும் புழு. யோவேல் 1:4;2:25.

**படர்** – Spot. Batches on the skin with inflammation and reddish. படை, பத்து. வீக்கத்துடன் சிவந்து சருமத்தில் தோன்றிப் படரும் ஒரு வித தோல் நோய். லேவி. 13:28.

**படி** – 1. Provisions, A Small gift, Tips, Allowance. று வெகுமதி. 2 இராஜா. 25:30; நெகே. 5:18. 2. A measure. மரக்கால் படி. ஆதி. 18:6; ரூத் 3:15.

**படைச்சால்கள்** – Furrows, A narrow trench. உழவுக்கால்கள், உழவுச்சால்கள். சங். 129:3; ஓசியா 10:4.

**பட்சபாதம்** – Partiality, Regards persons. பாரபட்சம், முகத்தாட்சணியம். பேதம், வேறுபாடு காட்டுதல். யாக். 2:4; உபா. 10:17.

**பட்சிகள்** – Fowls, Birds. பறவைகள், பறப்பன. நெகே. 5:18.

**பட்சித்து** – Eaten up, consumed. அழித்து விட்டது, தின்று விட்டது, நிர்மூலமாக்கிவிட்டது. யாக். 10:15.

**பட்டணத்துச் சம்பிரதி** – Town clerk. மணியக்காரர், செயலாளர், அலுவலக எழுத்தாளர். அப். 19:35.

**பட்டயக் கருக்கு** – Sharpened edge of the sword. Edge of the sword. பட்டயத்தின் கூர்மை, கூர்மையான பட்டயம். யோசு. 6:21; 8:24.

**பணிதிகள்** – Fashioned ornaments. Wrought (Jewels). அழகிய வேலைப்பாடான ஆபரணங்கள். கைவேலையாக செய்யப்பட்ட நகைகள். எண். 31:51.

**பணிந்த ஆவி** – Humble spirit, Lowly in spirit, poor in spirit. தாழ்மையுள்ள ஆவி, எளிமையான ஆவி. ஏசா 57:15; மத் 5:3.

**பணிந்து** – Worshipped. முகங்குப்புற விழுந்து அல்லது முகங்கவிழ்ந்து வணங்குதல். ஆதி 24:26; மத் 2:11.

**பணையம்** – Rewards, Hire. பரிசு, வாடகை. ஓசி. 2:12; 9:1; மீகா. 1:7.

**பண்டம் பாடிகள்** – Own stuff, Possessions, Carriages. உடைமைகள், தட்டுமுட்டுச் சமான்கள். யோசு. 7:11; நியா. 18:21.

**பதர்** – Chaff, Useless thing. தானியம் தூற்றும்போது காற்றில் அடித்துச் செல்லப்படுவது, உபயோகமற்றது, உதவாதது, அற்பம், அறிவீனன். சங். 1:4.

**பதிவிடை** – Ambush. பதுங்குபடை, கண்ணி, பதுங்கு குழி. யோசு. 8:2,4.

**பதிவிருக்கிறவர்கள்** – Men in ambush, Rear guard. பதிவிடைக்காரர், பதிவிடை ஆட்கள், எதிரிகள் அறியாமல் தாக்குவதற்காக மறைந்திருக்கிறவர்கள். யோசுவா 8:13;19 நியா. 9:25; 20:29;38.

**பதிவிருப்பேன்** – I Will lurk for them by the way. Lie in wait, Lie in ambush in the fields. பதுங்கியிருப்பேன், மறைந்திருப்பேன், ஒளிந்திருப்பேன். நியா. 9:32; ஓசியா 13:7.

**பத்தேர் நிலம்** – Ten acres of Vineyard. The land in which ten ploughs can plough in a day. பத்து ஏக்கர் நிலம். ஒரே நாளில் பத்து ஏர் பூட்டி உழும் அளவிலான நிலம். ஏசா 5:10.

**பத்தை** – Bandage to bind. A thin piece of wood or metal. Put a roller to bind it. கட்டுவதற்கான பொருள். மெல்லிய மரப்பட்டை, உலோகப்பட்டை, சுற்றிக் கட்டும் கட்டுத்துணி எசே 30:21.

**பந்தி** – Table. உணவருந்தும் மேசை, விருந்து, உணவு பரிமாறுதல் நெகே. 5:17; சங். 23:5.

**பயில்காட்டி** – Hissing. will hiss unto them with such a sharp sound. கீழ்க்கை ஒலி (விசில்) ஏசா. 5:26; 7:18.

**பரணி** – I Will hiss for them. whistle. I will signal. சுகந்த பரணி, வாசனைத் தைலம் உள்ள குப்பி (பாட்டில்). ஏசா. 3:20; மத். 26:7; மாற்கு 14:3; லூக்கா 7:37.

**பரதீசு** – Alabaster box, Bottle. சொர்க்கம், பரலோகம், நீதிமான் களின் வசிப்பிடம். மிகுந்த மகிழ்ச்சியும் இளைப்பாறுதலும் உள்ள இடம். லூக். 23:43; 2 கொரி. 12:3; வெளி. 2:7.

**பரதேசம்** – Another Place, Strange place, Foreign. வேறொரு இடம், அந்நிய தேசம், புறதேசம். எசே. 12:3.

**பரதேசி** – Foreigner, stranger, Sojourner, Pilgrim. அந்நியன், அயலான், தேசாந்தரி, நாடோடி, யாத்ரீகர் ஆதி. 15:13; எபே. 2:19.

**பரந்தது** – Scattered. பரவியது 2 சாமு. 18:8.

**பரம்பச் செய்தார்கள்** – Made to spread. பரவச் செய்தார்கள். எண். 13:33.

**பரம்படிக்குமோ** – will it level up a ploughed field using a levelling instrument? உழுத நிலத்தை பரம்படிக்கும் பலகை யால் கட்டிகளை உடைத்து சமன் செய்யுமோ நிலத்தைப் பண் படுத்துமோ யோபு 39:10.

**பரம்படிப்பான்** – shall break the clods. பரம்படிக்கும் பலகையால் மண்கட்டிகளை உடைத்து சமப்படுத்துவான். ஓசி 10:11

**பரம்பி** – Spread. May have free course. பரவி. சக. 1:17; 2 தெச. 3:1.

**பரம்பியிருக்கும்** – will spreed. பரவியிருக்கும். சக. 1:17.

**பரம்பிற்று** – Noised, Made public, Spread. பரவிற்று, பரவலாகத் தெரியப்படுத்தப்பட்டது. யோசுவா 6:27.

**பரம்புவாய்** – You Shall spread. பரவுவாய். ஆதி. 28:14.

**பரஸ்திரீ** – Prostitute, Harlot. விலைமாது. நியா. 11:1.

**பரிகரிக்கப்படுதல்** – Destroy, Abolish அழித்தல், இல்லாமல் செய்தல். 1 கொரி. 15:26; 2 தீமோ. 1:10.

**பரிகள்** – Horses. குதிரைகள் 1 இராஜா. 4:26.

**பரிகள் பவுஞ்சு** – Company of horses. குதிரைகளின் கூட்டம். உன். 1:9.

**பரிசம்** – Dowry. பெண்ணின் தாய், தகப்பனுக்கு மணவாளன் கொடுக்கும் வெகுமானம். ஆதி. 34:12.

**பரிசாரகி** – Temple keeper, Guardian worshipper, காவலாளி, பாதுகாவலன், தொழுகிறவன். அப். 19:35.

**பரிசேயர்** – Pharisees. They belong to one division of the Jews. They believe in resurrection, angel and Spirit

.பரிசேயர் என்பவர்கள் யூதரில் ஒரு பிரிவினர். உயிர்த்தெழுதலும், தேவதூதனும், ஆவியும் உண்டென்று நம்புகிறவர்கள். அப். 23:8.

**பரிசை** – Shield, Buckler, Protective armour, Target, Targe கடயம், பெரிய கேடயம், பாதுகாப்பு ஆயுதம். 1 இராஜா. 10:16; நெகே. 4:16.

**பரிச்சேதம்** – At all, In any way. எப்படியும், முழுவதும். மத். 5:34.

**பரிதானம்** – Bribe. கையூட்டு, லஞ்சம். யாத். 23:8.

**பரிபாலிக்கும்படி** – To Maintain, To keep safe. பராமரிக்கும்படி, பாதுகாக்கும்படி. 1 நாளா. 26:27.

**பரியந்தம்** – Upto அதுவரை. ஆதி. 7:23.

**பரிவாரக் கூட்டம்** – Bands, Camps, Troops, Very great gathering. மனிதர் கூட்டம், குழு, படை. ஆதி. 32:10.

**பரிவாரம்** – Followers. Retinue. Group of subordinates or attendants who travel with a person of importance or who appear with him on important occasions. உடன் வருபவர்கள், பயணத்தில் உடன் வருபவர்களின் கூட்டம், பாலைவனத்தில் பிரயாணக்காரரின் கூட்டம். 1 இராஜா. 10:13; 2 நாளா. 9:1,12.

**பருக்கைக்கற்கள்** – Gravel. கப்பி, சரளைக்கல். நீதி. 20:17; புல. 3:16.

**பலகணி** – 1. Lattice. Frame like latticed window. 1. வலை போன்ற ஜன்னல் நியா. 5:28; 2 சாமு. 6:16. 2. திரளான தண்ணீர்கள் உள்ள வானத்தின் வாசல்கள், மதகுகள். மல். 3:10; ஆதி 7:11.

**பலட்சயம்** – Weak. பலமிழந்து போதல், பெலவீனம் நியா. 16:11,7.

**பவிஞ்சு / பவுஞ்சுகள்** – Bands, A group gathered together to do something ஆட்கள் அல்லது உயிரினங்களின் கூட்டம், பிரிவுகள், படைகள். யோபு 1:17; நீதி. 30 :17.

**பள்ளியறை** – chamber, Bed room. ஓய்வெடுக்கும் அறை, தூங்கும் அறை 1 இராஜா. 1:15.

**பறி** – Drag, A Fishing net used from the boat, a basket used in fishing. மீன்களை வாரி எடுப்பதற்குரிய கூடை, படகிலிருந்து பயன்படுத்தப்படும் வலை ஆப. 1:15,16.

**பறிகாரரின் கூட்டங்கள்** – Bands of Robbers. Troops of Robbers. Extortioners. திருடர்களின், கொள்ளையர்களின் கூட்டம்,.மற்றவர் பொருளைப் பறிக்கிறவர்கள். ஓசி. 6:9; 7:1; யோபு 5:5;எசே. 7:22; லூக்கா 18:11.

**பறைமுறையிடுதல்** – To proclaim, To announce publicly. பலர் அறிய பொது அறிவிப்பு செய்தல், பறை சாற்றுதல். தானி. 5:29.

**பனைமரத்தொழுங்கு** – The height of the palm tree. பனைமரத்தின் உயரம் உன். 7:7.

**பஸ்கா** – Pass over. when the blood is seen, I will pass over you and the plague shall not be upon you to destroy you. In memory of this incident, the Israelites observe this day in their generations for ever. கடந்து செல்லுதல். இஸ்ரவேலரின் வீடுகளில் இரத்த அடையாளத்தைப் பார்க்கும்போது சங்கார தூதன் அவர்களை அழிக்காத படி கடந்து சென்றான். அதன் நினைவாக இஸ்ரவேலர் தலை முறை தலைமுறையாக பண்டிகையாக கொண்டாடினர். யாத். 12:11; 1 கொரி. 5:6–8.

**பாகை** – 1. Mitre குல்லா, தலைப்பாகை, தொப்பி. யாத். 28:4;37;39
2. Degree கோணம் 2 இராஜா. 20:9–11.

**பாதகர்** – Transgressors. மீறுதல் செய்கிறவர்கள், துன்மார்க்கர் ஓசியா 14:9.

**பாதாள வல்லடி** – power of the grave. Power of sheol. பாதாளத்தின் வலிமை, பாதாளத்தின் வல்லமை. சங். 89:48.

**பாத்தியம்** – Right. உரிமை. நெகே. 2:20.

**பாரிசமாக்குகிறான்** – He draweth, Drags away. தன் வசமாக இழுத்துக் கொள்கிறான், தன் பக்கமாய் இழுக்கிறான். யோபு 24:22.

**பாரிசமாய்** – Will be turning to, will turn back, Draw near, Draw away. பாரிசம் என்றால் பக்கம், வசம். பக்கமாக, தன் வசப்படுத்துதல் ஒருவர் பக்கமாய், பாரிசமாய், வசமாய் சென்றுவிடுதல் 1 இராஜா. 12:27; யோபு 24:22.

**பார்வோன்** – Pharaoh. This is not a name, but the tittle of the Egyptian kings. இது ஒரு பெயரல்ல. இது எகிப்திய அரசர்களின் பட்டம். ஆதி. 12:18; யாத். 1:22.

**பாலிய** –Young. People in the young age. Young women and men. இளமையான, இளவயது, இளையோர். இளவயதுடைய ஆண்களும் பெண்களும் தீத்து 2:4,6.

**பால்துருத்தி** – A bottle of milk, A flask of milk, A skin bag of milk. பால் இருக்கும் தோல் பை. நியா. 4:19.

**பாவாமல்** – Without touching the ground, Not touching the ground. தரையில் கால் படாமல். தானி. 8:5.

**பாவு** – Warp of linen or wool. Length wise thread on a loom. நெய்யும் போது நீள வாக்கில் செல்லும் நூல் இழைகள். லேவி. 13:48,49,51,52.

**பாழ்க்கடிப்பு** – Desolation, devastation, Destruction. பாழாக்குதல், அழித்தல், அழிவு தானி. 8:13;9:2; ஓசி. 9:6.

**பாளயம்** – Camp. முகாம், முகாமிடுதல் வழிப்போக்கர் இடைவழியில் தங்குமிடம் யாத். 32:17; யோசுவா 10:43.

**பானபலிகரகங்கள்** – Bowls. Pitchers for pouring. A vessel or jug with handles. A round vessel, A deep basin நீண்ட குறுகிய கழுத்தும் கைப்பிடியும் உள்ள குடம். ஜாடி, கூஜா போன்ற அமைப்புள்ள பாத்திரம். கிண்ணம் போன்ற வட்டவடிவமான குழியான பாத்திரம் யாத். 37:16.

**பானபாத்திரக்காரன்** – Cup bearer. ராஜாவுக்கு திராட்ச ரசம் வழங்குபவர். ஆதி. 40:1;2; நெகே. 1:11.

**பிகெமோத்** – Behemoth. Plural of the Hebraw word for beast. Colossal beast. Herbivorous animal. A large and very strong animal supposed to be the Hippopotamus. மிருகத்தின் பன்மையைக் குறிக்கும் எபிரெயச் சொல். தாவரங் களை உண்ணும் மிகப்பெரிய பலமுள்ள மிருகம். நீர்யானையாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது. யோபு 40:15–24.

**பிசின்** – Pitch. It is known as Asphalt or Bitumen. It was produced from the Dead Sea in ancient times. It was one of the major source of building material. இது ஒரு கரிய நிற திடப்பொருள். முற்காலத்தில் சாக்கடலிலிருந்து எடுக்கப்பட்டது. கட்டிடங்கள் கட்டுவதற்கு இது முக்கியமாகப் பயன்பட்டது. யாத். 2:3.

**பிசின் தைலம்** – Balm, Ointment. An aromatic gum or resin. Spices. Producing pain balm in Gilead was very familiar and prime article of commerce. காயங்களை ஆற்றும் மருந்து. வலி நீக்கும் தைலம் காயங்களை ஆற்றும் மருந்து.

வலி நீக்கும் தைலம். வாசனை மிகுந்த பசைப்பொருள். கந்தப் பிசின்கள். கீலேயாத்தின் பிசின் தைலம் புகழ் பெற்றதாகவும் பிரதானமான வர்த்தகப் பொருளாகவும் இருந்தது. எரே. 8:22; 46:11; ஆதி. 37:25; உன். 4:16.

**பிச்சு** – Bile, Gall, Bitterness. எட்டி, பித்து, பித்தநீர், கசப்பு. புல. 3:19.

**பிணைப்படுதல்** –To Stand as a surity. உடன்படுதல். நீதி. 6:1; 11:15; 20:16.

**பிணையாளி** – Surety. A person who stands bail or guarantee for another. உத்தரவாதம் அளிப்பவர். காப்புறுதி அளிப்பவர். ஜாமீன் அளிப்பவர் எபி. 7:22.

**பிதாலோகு** – Bdellium. A fragrant gum obtained from a tree in Arabia, Babylonia, Media and India. It is said to have had the same colour as manna. It is listed with gold and onyx stone or beryl, as products of the land of Havilah. அரபியா, மேதியா, இந்தியா ஆகிய தேசங்களில் மரத்திலிருந்து எடுக்கப்படும் நறுமணமுள்ள பிசின். மன்னாவைப் போன்ற நிறமுள்ளது எனச் சொல்லப்படுகிறது. இது ஆவிலா தேசத்தில் விளையும் பொன், சந்திரகாந்தம் மற்றும் படிகப் பச்சையுடன் சேர்த்து வகைப்படுத்தப்பட்டுள்ளது. ஆதி. 2:12; எண். 11:7.

**பித்தங்கொண்டவர்** – A madman. பைத்தியம் பிடித்தவன், பைத்தியக்காரன். 1 சாமு. 21:13.

**பித்து** – Gall, Bitterness. எட்டி, கசப்பு, பிச்சு உபா. 32:32.

**பிரசன்னம்** – Appear, Appearing, Presence தோன்றுதல், காட்சியளித்தல், சமுகம் அளித்தல், சந்நிதி, சந்நிதானம். எண். 6:26; 2 தீமோ. 4:8; தீத்து 2:11;13;3:4.

**பிரதாபம்** – Majesty, Stateliness. மாட்சிமை, ராஜரீக வல்லமை எஸ்தர் 1:4; சங். 145:5;11.

**பிரதானம்** – Great, Chiefest, The best. மேலான, மேன்மையான, உயர்ந்த, முதன்மையான 1 சாமு. 2:29; 15:21; மத். 22:36,38.

**பிரதானி** – Administrator, An officer, President. Castrated person especially one employed in harem. நிர்வாகி, நிர்வாக அதிகாரி, அலுவலர், அதிகாரி, அரசனின் அந்தப்புரத்தில் பணியமர்த்தப்பட்ட ஆண்தன்மையற்றவன். ஆதி. 39:1; 40:2; 2 இராஜா 7:2; தானி. 6:2–4 எஸ்தர் 2:3,14,15.

**பிரதானிகளின் தலைவன்** – The Chief of the officers. Chamberlain. அதிகாரிகளுக்கும் மேலான அதிகாரி. அரச குடும்பம் அல்லது பிரபு வீட்டுக் காரியங்களை மேற்பார்வையிடும் அதிகாரி. தானி. 1:4,7.

**பிரதிக்கினை** – Vow. ஆணை, பொருத்தனை எண். 21:2.

**பிரதிஷ்டை** – Consecration. Dedication. பரிசுத்தப்படுத்துதல், அர்ப்பணித்தல், நியமித்தல், ஒப்புக்கொடுத்தல் லேவி. 8:33; நெகே. 12:27; எபி. 9:18.

**பிரத்தியட்சம்** – Openly. with outward show. visible in the sight. முன்பாக, வெளிப்படையாக கண்ணால் பார்க்கும்படி தரிசனமாகுதல். யாத். 19:11 1 சாமு. 3:1; லூக்கா 17:20.

**பிரத்தியேகம்** – Set Apart, Set aside, Separate. தனிப்பட, தனிப்பட்ட, தனியாக. யோசு. 16:9; எசே. 41:15.

**பிரபந்தம்** – Treatise, Discourse, Acts, Book, Records. நூல், புத்தகம், பதிவேடு, ஆகமம், நடபடிகள், சரித்திரபுஸ்தகம், வரலாற்று நூல். அப். 1:2; 1 நாளா. 29:30.

**பிரபை** – Clearness, Brightness. It was like the heavens in its clarity. தெளிவான, வானம் போல தெளிவான. யாத். 24:10.

**பிரமியம்** – A discharge from a man. மனிதனிலிருந்து வெளிப்படும் உயிரணு திரவம். லேவி. 15:2;32.

**பிரமை கொண்டு** – with madness. without spirit. மதி மயங்கி, உயிரூட்டமின்றி, உயிரோட்டமின்றி. 1 இராஜா. 10:5; எரே. 29:26.

**பிரயத்தனம்** – Attempt, Assay, Effort, Trial. endeavour, முயற்சி, பெருமுயற்சி, எத்தனம். உபாயம், தந்திரம் அப். 16:7; 27:17; 1 தெச 2:17;

**பிரயாசம்** – Labour, Effort. உழைப்பு, முயற்சி, வருத்தம். தானி. 6:14.

**பிரலாபிக்கும்** – Put to shame, shall be ashamed. லம்பும், மிகவும் துக்கிக்கும் சக. 9:5.

**பிரவாகம்** – Increasing greatly. மிகவும் பெருகுதல், ஆக்கிரமித்தல். ஆதி. 7:18.

**பிரவேசம்** – Entering in. Entrance, Reception, Welcome உட்புகுதல், வரவேற்பு, ஈடுபடுதல், அங்கீகாரம். 1 தெச. 1:9; 2 பேதுரு 1:11.

**பிரளயம்** – Waters of flood. வெள்ளம், பெருவெள்ளம் ஆதி. 7:6; 7:10.

**பிரஸ்தாபம்** – Memorial, Rememberance, Commemoration, fame. நினைவு கூருதல், நினைவு படுத்துதல், புகழ் 1 நாளா. 16:4; சங். 104:12; 135:13.

**பிராகாரம்** – Court- A wide alley with only one opening into a street. An open enclosure applied in Scripture mostly to the enclosures of the Tabernacle and temple. House rendered court விசாலமான பாதை. இது தெருவில் முடியும். பெரும்பாலும் வேதாகமத்தில் ஆலயத்திலும் ஆசரிப்புக்

கூடாரத்திலும் வெளிப்புறத்தில் உள்ளே சுற்றி வருவதற்கான பாதை, சுற்றுமதில் வீடு. யாத். 27:9; 2 இராஜா. 21:5; ஆமோ. 7:13.

**பிராது** – The Charges made, Accusation, Entreat, Implore, Beseech.குற்றம், குற்றச்சாட்டு, குற்றம் சாட்டுதல், பழி சுமத்துதல், வழக்கு தொடருதல், முறையீடு அப். 25:2; 1 தீமோ. 5:19.

**பிரியாது** – Accusation. குற்றச்சாட்டு, வழக்கு. எஸ்றா 4:6.

**பிரீதியாயிருப்பதாக** – Be acceptable, Be pleasing. பிரியமாயிருப்பதாக, ஏற்கப்படுவதாக. சங். 19:14.

**பிளவை** – The boil. Painful swelling under the skin. An inflamed swelling caused by infection, tumour கொப்புளம், தோலுக்கு அடியில் வேதனை தரும் வீக்கம். வெடித்தபுண், கட்டி ஏசா. 38:21; 2 இராஜா. 20:7.

**பிள்ளையாண்டான்** – Boy, Not fully grown youth, stripling, Young one. சிறுவன், சிறுபையன், இளைஞன், பதின் பருவத்தில் இருப்பவன் 1 சாமு. 2:21,26; 17:56,58; ஆதி. 17:25.

**பிறன்** – Neighbour. அயலான், அடுத்தவன் லூக். 10:29.

**பிறைச்சிந்தாக்குகள்** – Ornaments, Pendants ளம்பிறை அணிகள், அலங்கார ஆபரணங்கள். நியா. 8:26.

**புசல்** – A Tempest. புயல் காற்று. சங். 50:3.

**புடமிடுதல்** – Refining in an earthen furnace. மண் உலையில் வைத்து தூய்மையாக்குதல். சங். 18:30.

**புத்திர சந்தானம்** – Off spring. சந்ததி, சந்தான பாக்கியம், பிள்ளைப்பேறு, வம்சம். ஆதி. 15:3.

**புத்திரசுவிகாரம்** – Accepting sons and daughters as own

children, Adoption. தத்து எடுத்தல், சொந்தப் பிள்ளையாக ஏற்றுக்கொள்ளுதல். ரோமர் 9:4; கலா. 4:5.

**புத்திரர்** – Children, Son, Sons. மகன்கள், குமாரர்கள், மக்கள், ஜனங்கள். ஏசா. 14:22; எபி. 11:22.

**புல்பத்தைகள்** – Clods, Thick lump of earth. மண்கட்டி, மண்ணாங்கட்டி. யோபு 21:33.

**புல்லறுப்பு** – Mowings. அறுவடை. ஆமோஸ் 7:1.

**புல்வாய்** – Mountain Sheep, wild mountain goat. வரையாடு, மலைஆடு, செம்மறி வகையைச் சேர்ந்த ஆடு. உபா. 14:5 ; யோபு 39:1.

**புறக்குடிகள்** – Strangers, Sojourners, Nomads. அந்நியர், பரதேசிகள், நாடோடிகள். லேவி. 25:23.

**பூண்கள்** – Fillets, Connecting rods, The bands or cords. Something necessary to bind. கயிறு, நாடா, இணைக்கும் கோல் அல்லது தடி யாத். 38:10,11.

**பூண்டுகள்** – Herbs, Green herbs, Grass. Thorn and the thirstle. செடிகள், தாவரங்கள், புல், முட்பூண்டுகள். ஆதி. 1:29; 9:3; யோபு 5:25; ஓசி. 10:14;10:8.

**பூதங்கள்** – The Elements. மூலகங்கள், மூலப்பொருட்கள் 2 பேது. 3:10;12.

**பூத்துப் போயிற்று** – Failed. பெலன் அற்றுப்போயிற்று. சங். 69:3; புல. 4:17.

**பூரிகைகள்** – Trumpets. எக்காளம். எண். 10:2,8,9; 31:6; ஓசி. 5:8.

**பூஷணம்** –Jewels. அணிகலன், தங்க ஆபரணம், தங்க நகை, அபரஞ்சி பூஷணம், சிர பூஷணம். உன். 7:1.

**பெக்கா** – Bekah. This is a weighing measurement. 1 Bekah = 1/2 a shekel.இது ஒரு நிறுத்தல் அளவை. யாத். 38:26.

**பெத்தரிக்கம்** – Pride, Arrogance. அகந்தை, கர்வம், தற்பெருமை எரே. 48:29.

**பெந்தெகொஸ்தே** – Pentecost. Greek word meaning fifty ஐம்பது என்று பொருள்படும் கிரேக்க வார்த்தை. அப். 2:1.

**பெருநெஞ்சுள்ளவன்** – Bold, Foolish. அகம்பாவம், தைரியம், முட்டாள். யோபு 11:12.

**பேடிகள்** – Women, பெண்கள், பெண்டுகள். எரே. 50:37;51:30, நாகூம். 3:13.

**பேடு** – Female of Birds. றவைகளில் பெண் இனம். ஆதி. 7:3.

**பேட்டைகள்** – Castles, Settlements.கோட்டைகள், குடியிருப்பு கள். 1 நாளா. 6:54.

**பேதகம்** – Partiality, Divisions, Heresies. பட்சபாதம், பாரபட்சம், பிரிவினை, மார்க்கபேதங்கள். யாக். 2:4; 1 கொரி. 3:3; 11:19.

**பேதலித்து** – Estranged, Separated. நெருக்கமாக இல்லாமல், மனவேறுபாட்டை உண்டாக்கி, பிரிந்து எசே. 14:5,7.

**பேரீந்துகள்** – Palm trees. பேரீட்சை மரங்கள் 1 இராஜா. 6:35; 7:36.

**பேர்டாப்பின் படியே** – According to names. By number of names. By their polls. பெயர் வரிசையின்படியே, பெயர் பதிவின்படியே, பெயர் பட்டியலின்படியே. 1 நாளா. 23:24.

**பேர்த்தெழுதின** – Copy out in writing. Transcribe. நகல் எடுத்த, பிரதி எடுத்த, பார்த்து எழுதிய. நீதி. 25:1.

**பேர்த்தெழுதினான்** – He copied it out. பார்த்து எழுதினான் யோசுவா. 8:32.

**பேலியாளின் மகன் / மனுஷன்** – A Man of Belial, Naughty person, Villain, A rogue, wicked man. துஷ்டன், அயோக்கியன், நீசன், துரோகி. நீதி. 6:12; 1 சாமு. 25:17;25.

**பேலியாள் மக்கள்** – Trouble Makers. Scoundrel, Rascal, Blackguard. கலகக்காரர்கள், துஷ்டர்கள், துன்மார்க்கர், நீசர், போக்கிரிகள் 1 சாமு. 2:12; நியா. 19:22.

**பேலியாள்** – Belial, Naugty person, wicked person. அயோக்கியன், நீசன், துன்மார்க்கன். 1 சாமு. 1:16; நீதி. 6:12.

**பேழை** – Ark, Ark of Bulrush, Box, Case. பெரிய கப்பல், நாணல் பெட்டி, பெட்டகம், ஆதி. 6:14 யாத். 2:3.

**பைரி** – Red Kite. செந்நிற பருந்து, கருடன். உபா. 14:13.

**பொட்டரிப்பு** – As eaten by moth (an insect like butterfly) அந்துப்பூச்சியின் அரிப்பு. ஓசியா 5:12.

**பொட்டுப்பூச்சி** – Moth, An insect like butterfly. அந்துப் பூச்சி. யோபு 27:18; 4:19; ஓசியா 5:12.

**பொந்தியு பிலாத்து** – Pontius Pilate. Pilate was appointed governor of Judaea by Tiberius (AD 26) Pontius was his family name .He was a descendent of Roman Family. The name 'Pilate' came from the Latin 'pilatus' meaning 'one armed with javelin' திபேரியு ராயனால் கிபி 26 இல் யூதேயாவின் தேசாதிபதியாக பிலாத்து நியமிக்கப்பட்டான். 'பொந்தியு' என்பது அவரது குடும்பப் பெயர். ரோம வம்சாவழியைச் சேர்ந்தவன். 'பிலாத்து' என்ற வார்த்தை இலத்தீன் மொழியிலிருந்து வந்தது. இதன் பொருள் 'ஈட்டியைப்

போராயுதமாகக் கொண்டவன்' என்பதாகும். லூக்கா 23:12; யோவான் 19:12;15.

**பொலிசை** – Increase, Excessive interest, unjust gain. அதிகப்படியான வட்டி, அநியாய லாபம். லேவி. 25:36;37; எசே. 18:8;13; 22:12.

**பொலிவதுண்டு** – Should conceive. கருவுறுதல், இணை சேருதல், சினையாகுதல். ஆதி. 30:38.

**பொழிவு** – Gain. ஆதாயம், சுரண்டல். 2 கொரி. 12:17,18.

**பொளிந்த கற்கள்** – Hewn stones, Stones cut with a sharp tool. வெட்டிய கற்கள், நன்றாக வடிவமைக்கப்பட்ட கற்கள். ஆமோஸ் 5:11; ஏசா. 9:9.

**பொறி** – Ember. A piece of wood or coal that is still hot and red after a fire has stopped burning. Last chance, last hope. நெருப்புப் பொறி, நெருப்புத்தழல், கங்கு. கடைசியான வாய்ப்பு, நம்பிக்கை 2 சாமு. 14:7.

**பொன் திரணை** – Round about. Edges of the shew bread table and altar of incense made into a round shape with gold. ஓரங்களை உருண்டையாக்குதல். சமுகத்தப்பங்களின் மேசை மற்றும் தூப பீடத்தின் ஓரங்களை (விளிம்புகளை) அலங்காரமாக பொன்னினால் உருட்டி வடிவமைத்தல் யாத். 37:11,12,26,27.

**போக்காடு** – Scape goat. A goat sent into the wilderness after the Jewish chief priest had symbolically laid the sins of the people upon it. யூத பிரதான ஆசாரியன், ஜனங்களின் பாவங்களை ஆட்டின் தலையின் மேல் கை வைத்து அதன் மீது ஏற்றிய பின் வனாந்தரத்துக்கு அனுப்பி விடப்படும் ஆடு. லேவி. 16:10

**போதிகை** – Chapiter, lintel, Crown on a pillar.தூணின் முகடு, கும்பங்கள். தூண்களின் தலைப்பில் வைக்கப்படும் கும்பம், சுமையடைக்கட்டை. ஆமோஸ் 9:1; 1 இராஜா. 7:16.

**போத்திபார்** – Potiphar. Name of a person, not a title. An officer of Pharaoh, Captain of the guards. இது ஒரு நபரின் பெயர், பட்டமல்ல. பார்வோனின் காரியக்காரன், காவல் காக்கிறவர்களின் தலைவன். ஆதி. 37:36.

**போந்த** – Suitable. தகுந்த, சரியான, போதிய, வசிப்பதற்கு போதிய இடம், உரிமையான இடம். நியா. 18:1.

**போந்த இடம்** – Enough distance, great space. போதுமான இடம், போதிய இடைவெளி 1 சாமு. 26:13.

**போரடித்தல்** – Act of threshing grain. கதிரடித்தல், கதிர்கள் மேல் மாடுகளை நடக்கச் செய்து தானியத்தைப் பிரித்தெடுத்தல் உபா. 25:4; 1 கொரி. 9:9,10.

**போர்க்கவசம்** – A coat of mail. Defensive armour of bronze for the body. A corselet of scales. நெருக்கமான போர்க்கவசம், செதில்கள் உள்ள வெண்கலத்தாலான மார்க்கவசம். 1 சாமு. 17:5.

**பௌத்திரர்** – Son's sons, grand sons. பேரன்கள், பெயரன்கள். 1 நாளா. 8:40; யோபு 18:19.

**மகத்துவம்** – Great, Greatness, Majesty, Mighty. To be revered, Terrible. Power of might. பெரிய, மிகப்பெரிய, மேன்மையான, போற்றத்தக்க, பயப்படத்தக்க, பயங்கரம், சத்துவத்தின் வல்லமை. சங். 150:2; மல். 1:11;14; எபே. 6:10.

**மகாபாரிக் குடித்தனக்காரன்** – The man was very great. Great man, wealthy man. பெரும் செல்வந்தன். 1 சாமு. 25:2.

**மகுடவர்த்தனர்** – Crowned. Chosen men, Guards, Watchmen. முடி சூட்டப்பட்டவர்கள், கிரீடம் சூட்டப்பட்டவர்கள், சிறந்தவர்கள், காப்பாளர், காவல்வீரர்கள், தலைவர்கள். நாகூம் 3:17

**மகேர்–சாலால்–அஷ்–பாஸ்** – MAHER - SHALAL- HASH-BAZ The prey hastens The Spoil Spreads. தீவிரிக்கும் இரை, கொள்ளை ஏசா. 8:1,3.

**மச்சங்கள்** – Fish, Fish of the sea, Great sea Creatures மீன்கள் மற்றும் கடல்வாழ் பெரிய உயிரினங்கள். ஆதி. 1:21; 9:2 ஓசி. 4:3.

**மச்சுப்பாவி** – Panelled the temple. Panel the inner surface of the wall of the ceiling of the temple with cedar. covered with beams and boards. தேவாலயத்தின் மேற்கூரையின் உட்புறத்தை கேதுரு மரப் பலகைகளினால் மூடுதல். 1 இராஜா. 6:9; 15; 7:3.

**மடங்கடித்தல்** – Slay, slew, Slaughter, Smite, Beat. கொன்று போடுதல், முறியடித்தல் யோசு. 10:10; 1 சாமு. 15:3; 1 நாளா. 11:14; 20; சங். 89:23.

**மடல்கள்** – Boughs, Branches of palm. ஓலை மடல், பனை மட்டையின் கங்கு உன். 7:8.

**மடுக்கள்** – Valleys. Swamps, Marshes, Low lying areas. பள்ளத்தாக்குகள், சதுப்பு நிலப் பகுதி, தாழ்வான, பள்ளமான இடம் எசே. 47:11.

**மட்டிட்டு** – Numbered. weighed and divided. குறைக்கப்பட்டு. தானி. 5:26.

**மட்டுக்கட்டுகிறவன்** – One who can Appoint me the time.

Assign me a time. என் நேரத்தை முடிவு செய்பவன். திட்டம் சொல்பவன். எரே. 49:19; 50:44.

**மணியக்காரர்** – Officers, Governors, Officials, Judges, Scribes, Writers. அலுவலர், ஆளுநர், அதிகாரிகள், விசாரிப்புக்காரர், நீதிபதிகள், நியாயாதிபதிகள், எழுத்தாளர். 1 இராஜா. 4:7,27; 1 நாளா. 23:4; 26:29; 1 நாளா. 34:13.

**மணிவேளைகள்** – In the New Testaments we read of the 3rd, 6th, the 9th hours of the day. From 6pm to 10 pm is called First watch from 10pm to 2am is called 2nd watch. From 2 am to 6am is called 3rd watch. 3rd hour = 9.am (Mtt20:3) (Mk 15:25), (Acts 2:15) 5th Hour = 11am 6th hour = 12noon Mtt 20:5; 27: 45; Jn 4:6. 7th hour = 1pm Jn 4:52;53. 9th hour = 3pm Acts 10:3. 11th hour = 5 pm. Mtt 20:6,9. புதிய ஏற்பாட்டில் 3 –ஆம் மணிவேளை, 6 –ஆம் மணி வேளை, 9 –ஆம் மணிவேளை பற்றி வாசிக்கிறோம் மாலை 6 மணி முதல் இரவு 10 மணிவரை முதலாம் சாமம், இரவு 10 மணி முதல் இரவு 2 மணிவரை இரண்டாம் சாமம், இரவு 2 மணி முதல் காலை 6 மணிவரை மூன்றாம் சாமம் என்று பிரித்துள்ளார்கள். 3 –ஆம் மணிவேளை என்பது காலை 9 மணி – மத். 20:3 மாற்கு 15:25 அப். 2:15. 5 –ஆம் மணி வேளை என்பது காலை 11 மணி, 6 –ஆம் மணி வேளை என்பது நண்பகல் 12 மணி, மத். 20:5; 27: 45; யோவான் 4:6. 7 –ஆம் மணி வேளை என்பது பிற்பகல் 1 மணி யோவான் 4:52;53. 9 –ஆம் மணி வேளை என்பது பிற்பகல் 3 மணி. அப். 10:3. 11 –ஆம் மணி வேளை என்பது பிற்பகல் 5 மணி. மத் 20:6,9.

**மணை/ மணைகள்** – Couches, Bed, Anything to sit on, Table, Birth stools. படுக்கை, மெத்தை, இருக்கை, உட்காருவதற்காக உள்ள எதுவும், பிரவசத்திற்கான பீடம். யாத். 1:16; லேவி. 15:22;23;26; மாற். 7:4.

**மதகுகள்** – Sluice, Regulator. shutter. windows of heaven, flood gates of heaven, valleys of the sea. மடைகள், தண்ணீர் வரும் வழி, நீரை வெளியேற்றவும் நிறுத்தவும் திறந்து மூடக்கூடிய அமைப்பு. வானத்தின் பலகணிகள், வானத்தின் மதகுகள், பண்டகசாலைகள். ஆதி. 7:11; 8:2; 2 இராஜா. 7:2 ஏசா. 24:18; நாகூம் 2:6; மல்கி. 3:10; 2 சாமு. 22:16; சங். 18:15.

**மரக்கால்** – Ephah, Bushel, Homer. கலம், குருணி, படி. லேவி 14:21; ஏசா. 5:10.

**மரண சாசனம்** – Testament, Evidence, will. Promises are in written form from the old person to the related persons concerning wealth. An agreement on property or possessions which cannot be altered according to the law. உயில். ஒருவர் தன்னுடைய மரணத்துக்குப் பின்பு தனது சொத்துகள் யாருக்கு அல்லது எதற்கு சேரவேண்டும், யாருக்கு தனது சொத்துக்கள் மேல் அதிகாரம், உரிமை உள்ளது என அதிகாரப் பூர்வமாக எழுதிவைக்கும் பத்திரம். சொத்து சம்பந்த மாக சட்டத்தின்படி எழுதப்பட்ட மாற்றமுடியாத ஓர் ஒப்பந்தம் எபி. 9:16;17 எரே. 32:14.

**மருளாதிருக்கிறீர்கள்** – Not terrified. பயப்படாமல், அச்சமில்லா மல் இருக்கிறீர்கள். பிலி. 1:27,28.

**மரைகளின் குட்டி** – Young stags. இளம் கலைமான்கள். உன். 2:7; 8:14.

**மரைகள்** – Hinds, Hart - Male Deer or stag. பெண்மான் உன். 2:7 ஆண்மான் அல்லது கலைமான் உன். 8:14.

**மல்காம்** – 'மோளேக்' காண்க.

**மல்யுத்தம் / மல்லயுத்தம்** – Boxing, Wrestling. போராடுதல், போட்டியிடுதல், முயற்சி செய்தல் 2 தீமோ. 2:5.

**மறுமனையாட்டிகள்** – Concubine. Husband's other wives. Adversary. கணவனின் மற்ற மனைவியர். சக்களத்தி (சக்கிழத்தி) ஆதி. 37:2; 1 சாமு. 1:6; தானி. 5:23.

**மனத்தாங்கல்** (உன் மேல் தாங்கல்) – Displease. வெறுப்பு. 1 சாமு. 29:7.

**மனம் பேதித்து** – Heart turns away. மனம் விட்டுப் போய், மனம் பிரிந்து போய். உபா. 30:17 (பேதலித்து காண்க).

**மன்னா** – Manna. In Hebrew, its meaning is what is this? It is given from above for food to Israelites. எபிரெய மொழியில் மன்னா என்றால் 'இது என்ன' என்று பொருள். வானத்திலிருந்து இஸ்ரவேலருக்கு கொடுக்கப்பட்ட உணவு. தூதர்களின் அப்பம், உணவு, ஆகாரம், வானத்தின் தானியம். யாத். 16:14–36; சங். 78:24,25.

**மாகாணம்** – District, Area, Region, Province, மாவட்டம், மாநிலம், பிரதேசம், பிராந்தியம். நெகே. 3:16; தானி. 2:48.

**மாகாணங்களின் அதிபதிகள்** – Provincial commanders, Princes of the provinces, Rulers of the provinces மாநிலத் தலைவர்கள் 1 இராஜா. 20:17,19; தானி. 2:48.

**மாட்சிமை** – Greatness, Excellent, Grandeur, Majesty. மேன்மை, கம்பீரம். 1 நாளா. 29:11; சங். 150:2.

**மாரிக்காலம்** – Winter, Rainy season. Early rain and latter rain. மழைக்காலம், முன்மாரி, பின்மாரி (முன் மழை, பின் மழை) 2 தீமோ. 4:21; சக. 10:1; யாக். 5:17.

**மாறாட்டம்** – Lie, Turned, Polluted, changing the mind. பொய், மனம் மாறுதல், மனதை மாற்றிக்கொள்ளுதல், கெடுதல் செய்தல் லேவி. 6:2; எரே. 34:11;16.

**மாற்றான்** – Enemy, Adversary. எதிராளி, விரோதி, சத்துரு, பகைவன் 1 சாமு. 24:19.

**மானியம்** – Assigned Portion, Allotted, Allowance, Ration, Subsidy. ஒதுக்கிக் கொடுத்தல், பங்களித்தல் படியளத்தல், போஷித்தல், நிதியளித்தல் ஆதி. 47:22.

**மிகவும் முனையற்றுப் போய்** – Much cast down in their own eyes. Very much disheartened in their own eyes. பெலனற்றுப் போய். நெகே. 6:16.

**மிதுனம்** – Gemini. The Constellation of the Zodiac having the figure of the twins as its sign. Twins, Castor and pollux. இரட்டையர் உருவத்தைத் குறியீடாகக் கொண்ட இராசி மண்டலத்தின் மூன்றாவது நட்சத்திரத் தொகுதி. இரட்டை, இரட்டையர் அப். 28:11.

**மிருக சீரிஷம்** – Orion. மார்கழி மாதத்தில் தோன்றும் நட்சத்திரம். யோபு 9:9; 38:31; ஆமோஸ் 5:8.

**மிலாறு** – Rod. கோல், தடி. யோபு 9:34; நீதி. 22:8; புல. 3:1.

**முகதாட்சண்யம் / முகதாட்சிணியம்** – Respecting persons, partiality, Favour shown to one. பாரபட்சம், பட்சபாதம், ஒருதலைச்சார்பு உபா. 10:17; 16:19; யோபு 13:10.

**முகநாடி** – Countenace, Behaviour முகத்தோற்றம், குணம், தன்மை, நடக்கை. 1 சாமு. 21:13; ஆதி. 4:5,6.

**முகாந்தரம்** – Cause, Reason, Grounds காரணம், ஆதாரம், அடிப்படை. 1 சாமு. 17:29; யோபு 9:17; தானி. 6:4.

**முசுக்கட்டைச் செடிகள்** – Mulberry trees. மல்பெரி செடிகள் 2 சாமு. 5:23;24; 1 நாளா. 14:14;15.

**முசுக்கட்டைச் பூச்சி** – Caterpillar. கம்பளிப்பூச்சி. யோவேல் 1:4;2:25.

**முசுக்கட்டை விருட்சங்கள்** – Sycamore trees. காட்டத்தி மரங்கள் 1 நாளா. 27:28; ஏசா. 9:9.

**முட்டுக்கு நிற்பான்** – Push at him, will engage in battle. எதிர்ப்பான், நெருக்கடி கொடுப்பான். தானி. 11:40.

**முதற்பேறு** – First born, first child முதலில் பிறந்த பிள்ளை, தலைச்சன் பிள்ளை, தலைப்பிள்ளை. யாத். 12:29; நெகே. 10:36; லூக். 2:7.

**முதிராப்பிண்டம்** – A Still born child. இறந்து பிறந்த குழந்தை. யோபு 3:16; சங். 58:8.

**முத்திரித்துப் போடுகிறார்** – Sealeth up. முத்திரையிடுகிறார். யோபு 37:7.

**முரட்டாட்டம்** – Rebels against. எதிர்த்து கலகம் செய்தல். யோசுவா 1:18.

**முரண்டுத்தனம்** – Bitter. withdrew the shoulder, shrugged. கசப்பாக. யோபு 23:2. வெறுப்புடன் தோள்களை குலுக்குதல், முரட்டுத்தனமாய் தோளை குலுக்குதல், முரண்டுத்தனமாக நெகே. 9:29.

**முள்குறடுகள்** – Forks. முள்கரண்டிகள். 1 நாளா. 28:17.

**முள்துறடுகள்** – Forks, Hooks, Flesh hooks. முள் கரண்டிகள், கொக்கிகள், பெரிய தூண்டில்கள். யாத். 27:3; 38:3; எண். 4:14; 2 நாளா. 4:16.

**முறியடித்தல்** – Smite, defeat, attack. தாக்குதல், தோற்கடித்தல் உபா. 3:3; 28:7.

**முறிந்தோடினார்கள்** – Fled away, Ran away, Smile, slay. புறமுதுகு காட்டி ஓடுதல், யுத்தத்தில் தோற்று பின்வாங்கி ஓடுதல், மடங்கடிக்கப்படுதல். ஆதி.14:10; யோசு. 7:4; 1 சாமு. 19:8; யோசு. 10:10.

**முற்றிக்கை** – Lay siege to, Besiege, Surrounded with armed forces. முற்றுகை, சூழ்ந்து கொள்ளுதல், படைகளால் வளைந்து கொள்ளுதல். உபா. 20:12; 19; 2 சாமு. 20:15; மீகா 5:1

**முனைவிழுந்து** – Faded away, Lose heart மனம் தளர்ந்து, நம்பிக்கை இழந்து. சங். 18:45; 2 சாமு. 22:46.

**முன்னடி** – Before, Front. முன்னால், முன்பாக யாத். 14:2;9.

**முன்னணை** – Manger, A trough to feed cattle. தொழுவத்தில் வைக்கோல் முதலானவை கால்நடைகளுக்கு இரையாகப் போட்டு வைக்கும் தொட்டி, தீவன தொட்டி. ஏசா. 1:3; லூக்கா 2:7; 12;16.

**முன்னிலை** – Before, In presence of. முன்பாக, முன்னிலையில் நியா. 11:9.

**முஸ்திப்பாக்கி** – Prepared. ஆயத்தம். 2 நாளா. 29:19.

**மூஞ்சூறுகள்** – Rodents, Moles. அகழெலி, சுண்டெலி. ஏசா 2:21

**மூப்பர்** – Elders, Leaders. பொறுப்பில் நியமிக்கப்பட்டவர்கள், வயது முதிர்ந்தவர்கள், தலைவர்கள். யாத். 17:5; யோசுவா 8:10; 20:4.

**மெச்சிக்கொள்ளுகிறார்கள்** – Approve their sayings, Delight in their sayings. பாராட்டுகிறார்கள் சங். 49:13, நீதி. 20:14.

**மெச்சிக்கொள்ள** – To Commend, To praise. பாராட்டிக் கொள்ள, புகழ, மேன்மை பாராட்ட. 2 கொரி. 3:1; 5:12; 10:12.

**மெசொப்பொத்தாமியா** – Mesopotamia. The region between the rivers Euphratis and Tigris. Today's modern Iraq. In Hebrew: Aram, Aran, Haran, Paddam Aran, Naharaim. யூப்ரடீஸ், டைக்ரீஸ் நதிகளுக்கு இடையே உள்ள பெரிய தேசம். இன்றைய ஈராக், அராம், ஆரான், காரானூர், பதாம் அரான், நகராயீம் என்பவை எபிரெய பெயர்கள். ஆதி. 24:10.

**மெத்த** – Very, greatly, Exceedingly. அதிகமாக, பெரியதாக 1 சாமு. 19:4; எரே. 48:29.

**மெத்தவும்** – Greatly, Utterly. முழுவதுமாக, முற்றிலுமாக ஒப. 1:2.

**மெல்கிசேதேக்/மெல்கிசேதேக்கின் முறைமை** – Melchizedek - Gen 14:18-20. Melchizedek, King of Salem brought forth bread and wine and blessed Abraham. Abraham gave 10th part to Melchizedek (Bc 1970) The order of Melchizedek - There are some qualifications and principles in being priest according to the order of Melchizedek which is described in Hebrews Chapter 7. 1. The High Priest should be High Priest for ever and have endless life. 2. The priesthood Should be forever and unchangeable 3. It should be made with an oath 4. The High Priest must be according to Heb 7:3 5. Should be king as well as Priest.

**மெல்கிசேதேக்** – இவர் உன்னதனமான தேவனுடைய ஆசாரியனாக இருந்தார். இவர் அப்பமும் திராட்சரசமும் கொண்டு வந்து ஆபிரகாமை ஆசிர்வதித்தார். இவருக்கு ஆபிரகாம் எல்லாவற்றிலும் தசமபாகம் கொடுத்தார், (கிமு 1970) ஆதி. 14:18–20.

**மெல்கிசேதேக்கின் முறைமை** – மெல்கிசேதேக்கின் முறைமையின்படி ஒருவர் ஆசாரியராக இருப்பதற்கு சில தகுதிகள், விதிமுறைகள் உள்ளன. அவை எபிரெயர் 7வது அதிகாரத்தில் விவரிக்கப்பட்டுள்ளது. 1. பிரதான ஆசாரியன் நித்திய ஜீவன் உள்ளவராக இருக்கவேண்டும் எபி. 6:20. 2. ஆசாரியத்துவம் என்றென்றைக்கும் உள்ளதாகவும் மாற்றப்படாததாகவும் இருக்க வேண்டும் எபி. 7:12;17;20. 3. ஆணையோடே ஆசாரியராக்கப் பட வேண்டும் எபி. 7:20;21;28. 4. பிரதான ஆசாரியர் எபி. 7:3 வசனத்தின்படி இருக்கவேண்டும் 5. ஒரே சமயத்தில் ராஜாவாக வும் ஆசாரியராகவும் இருக்கவேண்டும் எபி. 7:1,2. இவைகளே மெல்கிசேதேக்கின் முறைமை ஆகும். இந்த தகுதிகள் எல் லாம் மகா பிரதான ஆசாரியர் ஆகிய இயேசு கிறிஸ்துவில் காணப்படுகின்றன.

**மேசியா** – Messiah. Christ, Anointed one. கிறிஸ்து, அபிஷேகம் பண்ணப்பட்டவர் யோவான் 1:4; 4:25 சங். 2:2 தானி. 9:25,26.

**மேல்குளத்து சாலகம்** – Conduit of the upper pool. Pipe or channel for conveying water. The tunnel நீர் செல்லும் குழாய் அல்லது கால்வாய். தண்ணீர் செல்லும் சுரங்கப் பாதை. சாலகம் = கால்வாய், வாய்க்கால். 2 இராஜா. 18:17; 20:20; ஏசா. 7:3.

**மேனி** – The Body. சரீரம், தேகம், உடம்பு. 1 கொரி. 15:37–40.

**மேனியுமாயிருந்தார்கள்** – Polishing, Figure, Appearance. அழகாயும் இருந்தார்கள், நல்ல தோற்றத்தில் இருந்தார்கள். நல்ல ரூபமாயிருந்தார்கள். புல. 4:7.

**மோளேக்** – Malcam, Malcom, Malcham, Molech, Moloch, Milcom. The national god of Ammonites. The abomination of Ammonites. A detestable

Semitic deity honoured by the sacrifice of children. Abomination followed and worshipped by Solomon and other kings of Judah. Worship of molech was Prohibited by Hebrew Law. மல்காம், மல்கோம், மோளேக் மோளோக், மில்காம், மில்கோம் என்று அழைக்கப்பட்டன, இது அம்மோனியரின் தேசிய கடவுள். அம்மோனியரின் அருவருப்பு. குழந்தைகளை நரபலியாகச் செலுத்தி கனம் பண்ணப்பட்டது. ஆனால் வெறுக்கப்படத்தக்க அந்நிய தேவதை. சாலொமோன் அரசனாலும் மற்றும் யூதாவின் அரசர்களாலும் பின்பற்றப்பட்டு சேவிக்கப்பட்ட அருவருப்பு. இதை வணங்குவது எபிரெய சட்டத்தால் தடை செய்யப்பட்டிருந்தது. லேவி. 18:21; 20:1–5.

**யதார்த்தம்** – Uprightness, Just Honest in Behaviour. Straight forward. உண்மை, நேர்மை நீதி. ஆமோ. 5:10; மல். 2:6.

**யாகம்** – The Sacrifice. பலி செலுத்துதல். எசே. 39:17;19; செப். 1:7.

**யாசேரின் புத்தகம்** – Book of Jasher. This book seems to have been an early national chronicle of events in Israel that stretched over several centuries of the early history of Hebrews. இப்புத்தகம், எபிரெயரின் பல நூற்றாண்டுகளுக்கான ஆதிகால வரலாற்றுத் தொகுப்புகள் அடங்கிய தேசிய வரலாற்று நூலாக இருந்ததாக கருதப்படுகிறது. யோசுவா 10:13; 2 சாமு. 1:18.

**யாத்திராகமம்** – Exodus - Book of Exodus. The great deliverance extended to the Israelites when " The Lord brought the children of Israel out of the land of Egypt" (Ex 12:51)" with a mighty hand and with an outstretched arm" (Deu 26:8) that is "with full manifestation of divine

power". This book contains the details of the journey of Israelites, God's commandments and more incidents such as the presence of God in the tabernade which was estabblished according to his instructions. இஸ்ரவேலர் மேற்கொண்ட பிரயாணம் பற்றிய புத்தகம். இஸ்ரவேலரை தேவன் எகிப்திலிருந்து பலத்த கையினாலும் ஓங்கிய புயத்தினாலும் விடுதலை செய்த விபரம் அடங்கிய புத்தகம் (யாத். 12:51) ( உபா. 26:8) பயணம் பற்றிய விபரம், தேவனுடைய கட்டளைகள், தேவனுடைய அறிவுரைப்படி உண்டாக்கப்பட்ட ஆசரிப்புக் கூடாரத்தில் தேவன் வாசம் பண்ணியது போன்ற பல விபரங்கள் அடக்கிய புத்தகம்.

**யுக்தி** – Wisdom, Knowledge, Skill, capability, cleverness. ஞானம், புத்தி, திறமை 1 இராஜா. 2:6; பிர. 2:21.

**யுத்த சன்னத்தர்** – Armed men for war யுத்தத்திற்காக ஆயுதம் அணிந்தவர்கள். எண். 31:5; 32:21,27.

**யூபிலி** – Jubilee. Joy, Rejoice, Happiness, Victory, celebration, Festival, Rest, Liberty The fiftieth year was a hallowed year and its observances include;- 1. Family reunion 2. cancelled mortgages 3. The return of lands to their original owners. Slaves will be freed மகிழ்ச்சி, குதூகலம், களிப்பு, உவகை, வெற்றி, பெருவிழா, கொண்டாட்டம். ஓய்வு, விடுதலை. 50 வது ஆண்டு யூபிலி ஆண்டு – பரிசுத்தமாக கொண்டாடப்படும். அப்போது 1. குடும்பங்கள் மீண்டும் இணைக்கப்படும் 2. அடமானங்கள் ரத்து செய்யப்படும் 3. நிலங்கள் முந்தைய உரிமையாளருக்கு திரும்பக் கொடுக்கப்படும். 4. அடிமைகள் விடுதலை செய்யப்படுவர். லேவி 25:8–17.

**யூரோக்கிலிதோன்** – Euroclydon. A tempestuous head wind. North East great wind. கடும் புயல் காற்று. வடகிழக்கு திசையிலிருந்து வீசும் கடுங்காற்று அப். 27:14.

**யெகோவா / யேகோவா** – Jehovah. Also Said " Yahweh" meaning "I am that I am.தேவனைக் குறிக்கும் எபிரெய வார்த்தை. "யாவே" என்றும் சொன்னார்கள். "இருக்கிறவராக இருக்கிறேன்" என்பது இதன் பொருள். யாத். 6:2,3.

**யெஸ்ரயேல் (இஸ்ரவேல்)** – Israel (Izrael) meaning "having power with God" or "gods fighter". Israel was the name conferred by the angel upon Jacob at Peniel (Gen 32:28). His Descendants, the 12 tribes were called Israelites. Some times the whole nation is represcented as one person" Israel is my son" இதன் பொருள் 'தேவனிடம் வல்லமை பெற்றவன்' அல்லது 'தேவனுடைய போராளி' என்பதாகும். இது யாக்கோபுக்கு பெனியேல் என்ற இடத்தில் தேவ தூதனால் வழங்கப்பட்ட பெயர் (ஆதி. 32:28). யாக்கோபின் 12 கோத்திரங்களும் இஸ்ரவேலர் என்று அழைக்கப்பட்டனர். சில சமயங்களில் முழு தேசமும் ஒரு மனிதனைப் போல எண்ணப்பட்டு, "இஸ்ரவேல் எனது குமாரன்" என்று கூறப்பட்டுள்ளது (யாத். 4:22).

**யெஷுரன்** – Jeshurun - meaning upright. An honourable surname given to Jacob. Representing Israel as nation of just or upright men. இதன் பொருள் நேர்மை. இது யாக்கோபுக்கு கொடுக்கப்பட்ட மேன்மையான பட்டப்பெயர் ஆகும். நீதியும் நேர்மையும் உள்ள இஸ்ரவேல் தேசத்துக்கு பிரதிநிதியாக எண்ணப்பட்டான். உபா. 32:15; ஏசா. 44:2.

**யோக்கியன்** – Worthy man. தகுதியானவன், பாத்திரவான், ஒழுங்கான முறையில் நடப்பவன் 1 இராஜா. 1:52.

**யௌவன ஜனம்** – Youth, young people. இளம் வீரர், வாலவயதுள்ளவர்கள், வாலிப மக்கள், இளவயதுள்ள மக்கள் சங். 110:3.

**ரபீ** – Rabbi. Master, Teacher, Guide, போதகர், தலைவர், வழிகாட்டி மத். 23:8; யோவான் 1:38.

**ரஸ்துக்கள்** – Baggages, Stuff, Supplies, Stores, Provisions. பயண மூட்டைகள், உணவுப்பொருள்கள் 1 சாமு. 25:13; 2 நாளா. 17:12.

**ராசிகள்** – Maggaroth, ie Zodiacal Ssigns, Constellations. 12 ராசிகள் உள்ளன. விண்மீன்களின் கூட்டம். யோபு 38:32.

**ராசியாகி** – Make Peace. சமாதானமாகி, ஒப்புரவாகி, நல்மனம் பொருந்தி 2 இராஜா. 18:31.

**ராசியானால்** – If it pleases you. சம்மதமானால், விருப்பமானால், விரும்பினால் 1 இராஜா. 21:6.

**ராத்தல்** – Pound. This is a weighing measurement. This is an unit of weight and unit of money. இது ஒரு நிறுத்தல் அளவை ஆகும். நிறுத்தல் அளவு மட்டுமின்றி பணத்தின் அளவாகவும் உள்ளது. லூக்கா 19:13.

**ராஜ வம்சஸ்தர்** – Seed royal, Royal heirs, Seed of the kingdom. ராஜ வம்சத்தார், அரச பரம்பரையினர் 2 இராஜா. 11:1.

**ராஜ ஸ்திதி** – According to the state of the king. Royal liberality. அரச நிலைக்கு ஏற்றபடி, தாராளமாக. எஸ்தர் 2:18.

**ராஜாதிபத்தியம்** – Chief Ruler. பிரதான ஆளுநர், ஆளுகிறவர். 1 நாளா. 5:2.

**ரிஷபம்** – Ox, Bull. காளை, எருது. 1 இராஜா. 7:25; சங். 68:30.

**ரூபகாரம்** – Maintain, Defend. நிரூபணம் செய்தல், நிரூபித்தல். யோபு 13:15.

**லபியாது** – Not for your honour. அமையாது, கிடைக்காது. 2 நாளா. 26:18.

**லவுகீகம் / லௌகிகம்** Cares of this life (pertaining to the world). உலக சம்பந்தமான. லூக்கா 21:34; 2 கொரி. 7:10; யாக். 3:15.

**லிபர்த்தீனர்** – Libertines. Captive Jews taken to Rome by Pompey in 63 BC. They were Roman citizens. They settled in the place of Libertum so they were called Libertines. After liberated, they Came to Palestine and built a synagogue. லிபர்த்தீனர். இவர்கள் கிமு 63 –இல் சேனாதிபதி பாம்பேயால் சிறைபிடிக்கப்பட்டு ரோமா புரிக்கு கொண்டு செல்லப்பட்ட யூதர்கள். இவர்கள் ரோம குடி மக்களாக இருந்தார்கள். இவர்கள் 'லிபர்டம்' என்ற இடத்தில் குடியமர்த்தப்பட்டதால், 'லிபர்த்தீனர்' என்று அழைக்கப்பட்டார் கள். இவர்கள் விடுதலையாக்கப்பட்ட பின்பு பாலஸ்தீனத்திற்கு வந்து ஒரு ஜெப ஆலயத்தைக் கட்டினார்கள் அப். 6:9.

**லிவியாதான்** – Leviathan. A large Sea creature. May be a crocodile. May be a large serpent. May be a sea monster - Whale. மிகப்பெரிய கடல் வாழ் உயிரினம். முதலை அல்லது அதைப் போன்ற விலங்கினமாக இருக்கலாம். மிகப்பெரிய பாம்பாக இருக்கலாம். திமிங்கிலமாக இருக்கலாம். யோபு 41:1; சங். 74:14; ஏசா. 27:1; சங். 104:26.

**லேகியோன்** – Legion. A main division of the Roman Army. It comprised larger number of men running from3000 to about 6000 men. The word legion came to

mean a great number. ரோமப் படையின் பிரிவு. 3000 முதல் 6000 ஆட்களைக் கொண்டபிரிவு. இந்த வார்த்தை அதிக எண்ணிக்கையைக்குறிக்க பயன்பட்டது. மத். 26:53.

**லேவியராகமம்** – Leviticus. As Exodus is the book of redemption, Leviticus is the book of cleansing, worship and service of the redeemed people. லேவியர்+ஆகமம்=லேவியராகமம். யாத்திராகமம், மீட்பின் புத்தகமாக இருப்பதைப்போல, லேவியராகமம் பரிசுத்தம் செய்தல், ஆராதனை, மீட்கப்பட்ட மக்களின் ஊழியம் எல்லாம் பற்றி தெரிவிக்கும் புத்தகம். இதன் கருப்பொருள் லேவி. 7:37ல் உள்ளது.

**லேவியர்** – Levites. The descendants of Gershon, Kohath, Merari, the sons of Levi, the son of Jacob (Gen 46:11) Levites were of the Lord. They were appointed to serve the priest Aaron. They had duties and responsibilities in the tabernacle. யாக்கோபின் குமாரனாகிய லேவியின் குமாரர்களான கெர்சோன், கோகாத், மெராரி என்பர்களின் வம்சவழியில் வந்தவர்கள் லேவியர்கள் எனப்பட்டனர் (ஆதி. 46:11) லேவியர்கள் கர்த்தருடையவர்கள். ஆரோனுக்கு பணிவிடை செய்யும்படி நியமிக்கப்பட்டவர்கள். ஆசாசரிப்புக்கூடாரத்தில் பற்பல வேலைகளும் பொறுப்புகளும் இவர்களுக்கு கொடுக்கப்பட்டிருந்தது.

**லோபி** – Miser, churl. கஞ்சன். ஏசா. 32:5,7.

**வகையரா** – Companions, Associates. கூட்டாளிகள். எஸ்றா 4:9,17.

**வசமாய்த் திரும்பி** – Turn again, Loyalty, Allegiance. ராஜ பக்தியினால் அவன் பக்கமாய்த் திரும்புதல். 1 இராஜா. 12:27.

**வச்சிரம்** – Diamond, Adamant Stone, Crystal, Jasper, Agate, Ruby. வைரம், பளிங்கு, ஸ்படிகம். யாத். 28:18;39:11; எசே. 1:22; 3:9; 27:16; வெளி. 4:3; 21:11;18;19; யோபு 28:18.

**வடிப்பம்** – Beautiful. Beautiful in elevation and in situation. அழகான, அழகிய இடம், உயர்ந்த இடம், அழகான அமைப்புள்ள இடம், அழகிய நிலப்பகுதி. சங். 48:2.

**வட்டக்கலசம்** – A rounded goblet. A drinking glass with a foot and stem. மது, திராட்ச ரசம் முதலியவற்றைப் பருகுவதற்கான பாதமும் தண்டும் உள்ள கோப்பை. உன். 7:2.

**வட்டணிக்கையில்** – Ordained the circle. Set a compass. Marked out. வட்டத்தை ஏற்படுத்தும்போது, சக்கர வட்டம் தீர்க்கையில், சக்கர வட்டம் குறிக்கையில். நீதி. 8:27.

**வண்டல்கள்** – Dregs, Silt, Lees. The remnants of a liquid left in a container, together with any sediments. மண்டி சங். 75:8; ஏசா. 51:17.

**வம்சபதிகள்** – Chief of your tribes. Heads of your tribes. வம்சத் தலைவர்கள் உபா. 1:15.

**வரத்து** – Produce, Increase, Due. Going in and coming in. உற்பத்தி, வரவு, வருமானம், வருகை, வருதல். எண். 27:17; சங். 121:8.

**வரிசைகள்** – Giving presents, Portions, Gifts. பரிசுகள், வெகுமதிகள் எஸ்தர் 9:19;22.

**வர்த்தமானங்கள்** – Acts, Events. Sayings or things. செயல் பாடுகள், நிகழ்வுகள், நிகழ்ச்சிகள், சங்கதிகள், செய்திகள். லூக். 1:65;2:19.

**வர்மம்** – Despite, Malice. பகைமை எண்ணம், கடும் வெறுப்பு, விரோதம், குரோதம், வன்மம், பொறாமை. எசே. 25:6.

**வலசை** – Flee away, Flight, Fugitives, wandering. ஓடிப் போகுதல், ஓட்டம்பிடித்தல், ஓடுகிறவர்கள், சுற்றித்திரிதல். ஏசா. 10:31; எரே. 49:5.

**வலது பாரிசம்** – Right Hand. Power of God. வலது பக்கம், தேவனுடைய வல்லமை. மத். 22:44;26:64.

**வலுசர்ப்பங்களின் தாவும்** – Den of Dragons. A dwelling place of jackals. A haunting place of jackals and serpents நரிகளின் இருப்பிடம், குள்ள நரி மற்றும் சர்ப்பங்கள் நடமாடும் இடம். எரே.10:22.

**வல்லடி** – Violence. வன்முறை. 2 சாமு. 22:3; எரே. 48:45.

**வல்லடிக்காரர்** – Violent men, Hard hearted, Pitiless, Ruthless. கொடுமைக்காரர், வன்முறையாளர், இரக்கமற்றவர் யோபு 6:23.

**வல்லயம் / வல்லையம்** – Dart, Spear, Javelin. கைவேல், ஏறிபடை, ஏறியும் ஈட்டி. யோபு 41:26; 2 சாமு. 18:14.

**வழங்கலாம்** – May be used in any other way. வேறு வேலைக்கு அல்லது தேவைக்குப் பயன்படுத்திக்கொள்ளலாம். லேவி. 7:24.

**வழிபாடு** – 1. The Manner of women. 2. Customes, Statutes. 3. Elements (principles), Rudiments of the world. 1. பெண்களுக்குள்ள விலக்கம். ஆதி. 18:11;31:35 2. பழக்க வழக்கங்கள், கற்பனைகள். லேவி. 20:23; 2. இராஜா. 17:8;19; எரே. 10:3; 3. கொள்கைகள், அடிப்படைக் கோட்பாடுகள். கலா. 4:3;9; கொலோ. 2:8;20.

**வளப்பம்** – Rich, Good. வளம், வளமை, செழிப்பு. நல்ல, நலமானது, நல்லது. எண். 13:20; லேவி. 27:10; 12:14.

**வளவு** – House. இல்லம் 1 சாமு. 25:1.

**வளைகள்** – Holes - Hiding places. ஒளிந்து கொள்வதற்கான குழிகள், சந்துகள், பொந்துகள், மறைவிடம், பதுங்கு குழிகள் 1 சாமு. 14:11.

**வளைதடிகள்** – Javelins, Spears, Bent or curved staff. The Spear is a weapon common to all nations of antiquity. Several kinds of spears are mentioned in Scripture. Staff that curved at one end to pluck the higher branches from the tree, to feed flocks by shepherds. At evening, the shepherd would have the sheep pass under the crook one by one so he could count them and examine them. ஈட்டிகள், வளைந்த தடிகள். பழைய காலத்தில் எல்லா ஜாதியாராலும் ஈட்டிகள் பயன்படுத்தப்பட்டன. வேதாகமத்தில் பல வகையான ஈட்டிகள் குறிப்பிடப்பட்டுள்ளன. (எசே. 39:9) மேய்ப்பர்கள், ஆடுகளுக்காக மரங்களிலிருந்து இலை, தழைகளைப் பறிக்கப் பயன்படுத்துவர். இதில் ஒரு முனை மட்டும் வளைந்திருக்கும். மாலை நேரத்தில், இந்த வளைதடியின் கீழாக ஆடுகளைச் செல்லவைத்து மேய்ப்பன் அவற்றை எண்ணிப்பார்க்கவும், அவைகளைப் பற்றி ஆராய்ந்து பார்க்கவும் இந்த வளைதடி உதவியாக இருக்கும். லேவி. 27:32.

**வளைவாணிகள்** – Hooks. கொக்கிகள். யாத். 36:38;38:10,11,

**வறண்ட நிலம்** – Dry land. (Is 53:2) Virgin Mary knew not a man and her womb is depicted as the dry land. Jesus Christ resurrected as a tender plant, a root and as a king who won victory from the dry land, that is from the death, burial and from the tomb. வறண்ட நிலம் என்பது புருஷனை அறியாத, கன்னிகையான மரியாளின் கருப்பையைக் குறிக்கிறது. லூக். 1:34;35; இயேசு கிறிஸ்து அடக்கம் பண்ணப் பட்டு, கல்லறையாகிய வறண்ட நிலத்திலிருந்து, மரணத்திலி ருந்து உயிர்த்தெழுந்தார். ஏசா. 53:2.

**வன்கண்** – No Compassion, Unfriendly, Hostile. Evil eye. இரக்கமற்ற, பகை, விரோதம், பொறாமை. உபா. 28:55;56; நீதி. 23:6; 28:22; மாற். 7:22.

**வன்கண்ணன்** – Pserson with evil eye. தீய கண் உள்ளவன், தீய நோக்கம் உள்ளவன். மத். 20:15.

**வாச்சிகள்** – Axe. An axe like instrument for chiselling big trees and logs of wood. கோடரி போன்ற ஆயுதம். பெரிய மரங்களை வெட்டி சீர்ப்படுத்தப் பயன்படும் ஆயுதம். 1 இராஜா. 6:7; எரே. 10:3.

**வாடை** – North wind. வாடைக்காற்று, வடக்குக்காற்று உன். 4:16.

**வாதுமை** – Almond. The nuts of this tree are used in the product of confectionary and for food and as a source of Almond oil. இம்மரத்தின் கொட்டையிலிருந்து எடுக்கப்படும் பாதாம் பருப்பு உணவாகவும், சாக்லேட் தயாரிக்கவும் பாதாம் எண்ணெய் தயாரிக்கவும் பயன்படுகின்றது. வாதுமை மரம், தேவனுடைய நியாயத் தீர்ப்பு நெருங்கிக் கொண்டிருப்பதைக் குறிப்பதாக எரேமியா தீர்க்கதரிசிக்கு தரிசனத்தில் தெரிவிக் கப்பட்டது. ஆதி. 43:11; யாத். 25:33; உன். 6:11 எரே. 1:11.

**வாய்ச்சாலகன்** – Babbler, A Man full of talk, A man fond of talking. அதிகம் பேசுகிறவன், அலப்புகிறவன், வாயாடி. யோபு 11:2.

**வாரிபலகைகள்** – Benches. Planks used for building boats, oars and ships. நீண்ட இருக்கை. படகுகள், கப்பல் மற்றும் துடுப்புகளுக்கான பலகைகள். எசே. 27:5,6.

**வாலவயது** – Youth - இளவயது, வாலிப வயது. யோபு 33:25; 36:14; சங். 127:5.

**வாற்கோதுமை** – Barley. A wild species found in Galilee and northeast ward to the Syrian desert. It is still used for bread among the very poor. பார்லி என்றழைக்கப்படும் இந்த தானியம் கலிலேயா மற்றும் சிரியாவின் பாலைவனத்துக்கு வடகிழக்கிலும் காணப்படும் தானியப்பயிர். ஏழை மக்களால் ரொட்டி செய்யப் பயன்படுகிறது 2 இராஜா. 4:42; யாத். 9:31.

**வானராக்கினி** – The Queen of Heaven. Goddess of Love, synonymous with Roman venus, Goddess of Fertility. The female deity Ashtoreth was associated with the mourning for Tammuz. வானத்தின் தேவதை, வானத்தின் ராணி. அன்பின் தேவதை, செழிப்பின் தேவதை. பெண் தெய்வமான அஸ்தரோத் என்கிற வானராக்கினி எசே. 18:14 ல் சொல்லப்பட்டுள்ள தம்மூசுக்காக அழுகிற சம்பவத்தில், தம்மூசின் மனைவி ஆவாள் எரே. 44:17.

**விகற்பம்** – Diverse, Different, Contrary. வித்தியாசம், வேறுபட்ட. எஸ்தர் 3:8; தீத்து 2:8.

**விக்கினம்** – Disaster, Evil, Mischief. அழிவு, பேராபத்து, தீங்கு. நியா. 20:41; எசே. 7:26.

**விசாரணைக்காரர்** – Task master, Service Master, Overseer விசாரிப்புக்காரன், வேலைவாங்குபவர், மேற்பார்வையாளர் யாத். 1:11; நெகே. 11:9.

**விசாரம்** – Anxiety , Nervousness, Carefulness. கவலை, திடுக்கிடுதல், பயம், படபடப்பு, பரபரப்பு எசே. 12:19.

**விசாரிப்புக்காரர்** – Officers Carrying out orders. அதிகாரிகள், அலுவலர்கள், உத்தரவை நிறைவேற்றும் அதிகாரிகள். 1 நாளா. 23:4; 26:29.

**விடாய்த்த / விடாய்த்து** – Exhausted, Faint, Tired, weary. களைத்துப்போன, சோர்ந்துபோன, சோர்வடைந்த. 1 சாமு. 30:21; ஏசா. 5:27.

**விட்டில்** – Locust, Swarming locust. வெட்டுக்கிளி. உபா. 28:42; யோவேல் 1:4; 2:25.

**விதானம்** – Fastened, Covered. இணைக்கப்பட்டிருந்தது, தொங்கவிடப்பட்டிருந்தது, மூடப்பட்டிருந்தது. எஸ்தர் 1:6; எசே. 27:7.

**விம்மிய** – Enlargement, Belly shaped, Bowl shaped. கிண்ணத்தின் வடிவத்தில், மலர்ந்த. 1 இராஜா. 7:20.

**வியர்த்தமாக்கமாட்டாது** – Cannot disannul, cannot make void, cannot cancel. வலிமையற்ற, தாக்கமாட்டாது பயனற்றதாக்க மாட்டாது, வீணாக்க மாட்டாது கலா. 3:17.

**வியர்த்தம்** – futile, Vain, Useless, Disannul. பயனற்றது, உபயோகமற்றது. உபா. 32:47; ஏசாயா 14:27

**வியார்த்தி** – Interpretation. அர்த்தம், பொருள், விளக்கம் நியா. 7:15

**வியார்த்திபண்ணுதல்** – Ability to interpret, interpreting. அர்த்தம் சொல்லுதல், விளக்கம் அளித்தல் தானி. 5:12.

**வியாச்சியம் / வியாஜ்யம்** – Dispute, case, complaint, Matters of controversy. வழக்கு, சர்ச்சை, பிரச்சினை. யாத். 23:3,6 உபா. 17:8.

**விரகதாபம்** – Burned in their lust. Inflamed in their lust. சரீர இச்சையினால் பொங்குதல். ரோமர் 1:27.

**விரத்தராயிருக்க** – To control themselves. உணர்ச்சிகளை அடக்கிக்கொள்ளுதல். சுய கட்டுப்பாட்டுடன் இருத்தல். 1 கொரி. 7:9

**விருதா** – Futile, Bringing it to naught, Vain, Useless, Void, waste, Nothing. பயனற்றது, வீண், பிரயோஜனமில்லை. சங். 33:10; 127:1;2; மல். 3:14.

**விருது** – Ensign, Emblem. அடையாளச் சின்னம். வெற்றிப் பதக்கம். எண். 2:2.

**விருத்தசேதனம்** – Circumcision, Removing foreskin. நுனித்தோலை அகற்றுதல், சுன்னத்து செய்தல் ஆதி. 17:10.

**விருத்தமாயிராமல்** – Not round in shape. Square in shape. வட்டமாயிராமல். சதுரமான. 1 இராஜா. 7:31.

**விருத்தாப்பியம்** – Old and full of days. Good old age. நல்ல முதிர்ந்த வயது, வயதுமுதிர்ச்சி, பூரண ஆயுள். ஆதி. 25:38; நியா. 8:32.

**விர்த்தாந்தம்** – Declaration. A full account (of the greatness). முழு விவரம், வர்ணனை. எஸ்தர் 10:2.

**விர்த்தாப்பியன்** – Becoming old. well advanced in years, well advanced in age. முதியவர், முதியவரானபோது 1 இராஜா. 1:1.

**விலாசம்** – The face of the depth. சமுத்திர விலாசத்தை, சமுத்திரத்தின் மேல் நீதி. 8:27.

**விளம்பின** – Had spoken. சொல்லிய, பேசிய, அருளிய உபா. 10:4; சங். 119:72.

**விஷப்பனி** – Mildew - அழிவு தரும் அதிகப்பனி. ஆமோஸ் 4:9.

**விஸ்தாரம்** – Extensive, widely spread. விரிந்து பரந்து, பெரிய பரப்பிலான. யோனா 3:3.

**வினா** – Subtlety, Wisdom, prudence. முன் யோசனை, விவேகம், அறிவு நுட்பம் நீதி. 1:4; மத். 10:16.

**வீசிக்கொண்டிருக்கும் சுடரொளி பட்டயம்** – A flaming sword which turned every way. Flaming and turning. ஒளி வீசும் பட்டயம். எல்லாப் பக்கங்களிலும் சுழன்று வீசிக்கொண்டிருக்கும் பட்டயம். ஆதி. 3:24.

**வீட்டு விசாரணைக்கர்த்தன்** – Steward of the house. Lord of the house. மேற்பார்வையாளர், கண்காணி, வீட்டுக் காரியங்களை நிர்வகிப்பவர் ஆதி. 15:2.

**வீரியம்** – Strength, Power, Rage. பலம், வலிமை, சீற்றம். யோபு 39:19 ஏசா. 37:29.

**வெண்கல கால்கவசம்** – Bronze greaves. பாதுகாப்பான வெண்கல காலுறை. 1 சாமு. 17:6.

**வெண்கல தலைச்சீரா** – Bronze Helmet பாதுகாப்பான வெண்கல தலைச்சீரா. 1 சாமு. 17:5;38.

**வெருட்டுவாரும்** – Frighten them away, Fray them away. பயமுறுத்தி விரட்டுகிறவரும் எரே. 7:33.

**வெளிவாங்கும்** – Fair weather. நல்ல தட்ப வெப்ப நிலை உண்டாகும். மத். 16:2.

**வெள்ளாட்டிகள்** – Bondmen, Bond women. Male and Female slaves. ஆண், பெண் அடிமைகள். எஸ்தர் 7:4.

**வெள்ளிக்கலங்கள்** – silver Bowls. வெள்ளிக் கிண்ணங்கள் எண். 7:84.

**வெள்ளிக்காசு** – Drachma. A silver coin (piece of silver) was very common among the Greeks and Hebrews. 'ட்ராக்மா' எனப்படும் வெள்ளி நாணயம் கிரேக்கர் மற்றும் எபிரெயர் நடுவே பழக்கத்தில் இருந்து வந்தது. லூக். 15:8;9.

**வெள்ளித் தாலங்கள்** – Large shallow Silver dishes, Chargers of silver. platters வெள்ளித் தட்டுகள், வெள்ளித் தாம்பாளம். எண். 7:84; எஸ்றா 1:9.

**வெள்ளிப் பணம்** – Piece of Silver. It is equal to one day's wages. ஒரு நாள் கூலிக்கு இணையான வெள்ளி நாணயம். சங். 68:30; மத். 18:28.

**வெள்ளைக்கல் பரணி** – Alabaster box, Alabaster flask. An alabaster jar (A Soft white stone) மிருதுவான வெண்கல்லால் செய்யப்பட்ட வாசனை திரவிய குப்பி. படிகச் சிமிழ். மத். 26:7; மாற். 14:3.

**வெள்ளைப்போளம்** – Myrrh. well known gum extracted from a tree and used as a perfume. Used in embalming and in the holy anointing oil. இது ஒரு வாசனைப் பொருள். அபிஷேக தைலம், தூபவர்க்கம் தயாரிக்கப் பயன்படும் கசப்பான மஞ்சள் நிற பால். இறந்தவர்களின் உடலைப் பதப்படுத்த, பாடம்பண்ண பயன்படுத்தப்பட்டது. யாத். 30:23;34; மத். 2:11; யோவான் 19:39.

**வேதபாரகர்** – Scribes, Learned in the law. Teachers of the law. நியாயப் பிரமாணத்தைப் போதிக்கும் போதகர்கள். வேதத்தைக் கற்றுத் தேர்ந்தவர்கள். நியாயசாஸ்திரிகள். மத். 7:28; நெகே. 8:1; லூக். 5:17.

**வேலை மினக்கட்டு** – The work will cease. வேலை நின்று போகும், வேலை கெட்டுப் போகும். நெகே. 6:3.

**வேவு** – Spying. Observing and collecting informations secretly. உளவு வேலை, ஒற்றுவேலை, இரகசியமாக செய்தி சேகரித்தல் ஆதி. 42:30.

**வேவுகாரர்** – Spy, Spies. One engaged in spying, one who observes and collects information secretly. ஒற்றன், உளவாளி. இரகசியமாய் நோட்டமிட்டு தகவல்களை சேகரிப்பவன். ஆதி. 42:9,11.

**ஸ்தம்பம்** – Pillar. தூண், தூபி யாத். 13:21;22.

**ஸ்தம்பன வித்தைகள்** – Enchantments, Magic spells. மந்திர வித்தைகள், மந்திரங்கள். ஏசா. 47:9;12.

**ஸ்தாதி** – Stadia, Furlong. பர்லாங், தூரத்தை அளக்கும் அளவு வெளி. 14:20; 21:16.

**ஸ்தானாபதி** – Ambassador, Messenger. தூதுவர், செய்தி கொண்டு செல்பவர். எண். 20:14; 2 நாளா. 36:16.

**ஸ்திரம்** – Establish, Firm, Confirm. உறுதி, உறுதி செய்தல், பலம் தளராமல் இருத்தல். எண். 30:13;14; 2 இராஜா. 14:5.

**ஸ்திரீ** – Woman - பெண், மங்கை, மாது. யோசுவா 2:4.

**ஸ்தூலித்த** – Very fat. மிகவும் குண்டான. நியா. 3:17.

**ஸ்தோத்திரம்** – Praise. துதித்தல், மகிமை செலுத்துதல். எபே. 1:3.

**ஸ்தோத்திரிக்கிறேன்/ஸ்தோத்திரிக்கிறோம்** – I Praise you, I thank you. we give thanks, we praise. நன்றி செலுத்து கிறேன், துதிக்கிறேன், நன்றி செலுத்துகிறோம், துதிக்கிறோம். கொலோ. 1:13.

**ஸ்நானன்** – Baptist. திருமுழுக்கு கொடுப்பவர். மத். 3:1.

**ஸ்படிகம்** – Crystal. Any hard material of great transparency and without marked colour. பளிங்கு, படிகம், வச்சிரம், மணி. ஒளி ஊடுருவக் கூடியதும் குறிப்பிட்ட எந்த நிறமும் இல்லாததுமான கடினமாக பொருள். யோபு 28:18; எசே. 1:22.

**ஷம்மா** – With us. Jehovah shamma means God is with us. நம்மோடு இருக்கிறார் என்று பொருள். 'யெகோவா ஷம்மா' என்றால் யெகோவ தேவன் நம்மோடு இருக்கிறார் என்று பொருள். எசே. 48:35.

**ஷாலோம்** – Peace. Jehovah shalom means God is peace. சமாதானம். யெகோவா ஷாலோம் என்றால் சமாதானம் தரும் தேவன் என்று பொருள். நியா. 6:24.

**ஷிபோலேத்** – Shibboleth. Burden, Ear of corn, Stream or flood. It is a code word. பணிச்சுமை, பொறுப்பு, தானியக் கதிர், ஓடை அல்லது வெள்ளம் என்ற பொருள்களை உடைய வார்த்தை. இது ஒரு சங்கேதச் சொல், உச்சரிக்கக் கடினமான சொல். நியா. 12:6.

**ஷெகினா** – Shechinah, Shekinah meaning residence of God. This word is not in scripture but used by later Jews and christians to express the visible divi ıe presence. 'தேவனுடைய வீடு' என்று பொருள்படும் இந்த வார்த்தை வேதாகமத்தில் இல்லையென்றாலும் பிற்கால யூதர் களும் கிறிஸ்தவர்களும், கண்களுக்குப் புலப்படும் கர்த்தரின் சமுகத்தைத் தெரிவிக்க இந்த வார்த்தையைப் பயன்படுத்தி னார்கள். யாத். 40:34,35.

**ஜநந நாள்/ ஜென்ம நாள்** – The day of one's birth. Birthday. பிறந்த நாள். பிர. 7:1; மத். 14:6.

**ஜநந பூமி / ஜன்ம தேசம்** – The land of birth, Native land. பிறந்த தேசம், சொந்த நாடு. ரூத் 2:11; எரே. 22:10.

**ஜநிப்பித்தல் / ஜநிப்பிக்கப்பட்ட** – Bring forth. Have begotten. பிறப்பித்தல், உண்டாக்குதல், பெற்றெடுத்தல் ஆதி. 1:20;21; சங். 2:7.

**ஜந்துக்கள்** – Creatures.உயிரினங்கள், ஜீவன்கள் ஆதி. 1: 20;21.

**ஜலதாரைகள்** – Garlands or festoon work, wreathes சரம், மலர்வளையம், தோரணங்கள் 1 இராஜா. 7:29; 30:36.

**ஜல்லடம்** – Breeches. கால்சட்டை. லேவி. 6:10; 16:4.

**ஜன சதளங்கள்** – People, Nations. தேசத்தின் குடிகள், மக்கள் சங். 45:5; எசே. 26:2.

**ஜாமம்** – Watch - A guarding. Lk 2:8. Among the Jews the night was divided into three wetches (Ex14:24; Jud. 7:19). The Romans divided the night into four watches. This was recognised among the Jews. (Mtt3:35)

Day time
First watch = 6Am to 9Am
Second watch = 9Am to 12 noon
Third watch = 12 noon to 3Pm
Fourth watch = 3Pm to 6Pm

Night time

First watch = 6Pm to 9Pm
Second watch = 9Pm to 12 Mid night
Third watch = 12 mid night to 3Am
Fourth watch = 3Am to 6Am

காவல். லூக்கா 2:8 யூதர்கள் இரவை 3 ஜாமங்களாகப் பிரித்திருந்தார்கள் (யாத். 14:24; நியா. 7:19). ரோமானியர்கள் இரவை 4 ஜாமங்களாகப் பிரித்தனர். இதை யூதர்களும் ஏற்றுக்கொண்டனர் (மத். 13:25)

பகல் காலத்தில்

**முதலாம் ஜாமம்** = காலை 6மணி முதல் 9 மணிவரை

**இரண்டாம் ஜாமம்** = காலை 9மணி முதல் 12 மணிவரை

**மூன்றாம் ஜாமம்** = 12மணி முதல் 3 மணிவரை

**நான்காம் ஜாமம்** = 3 மணி முதல் 6 மணிவரை.

இரவு நேரத்தில்

**முதலாம் ஜாமம்** = மாலை 6 மணி முதல் 9 மணிவரை

**இரண்டாம் ஜாமம்** = 9 மணி முதல் 12 மணிவரை

**மூன்றாம் ஜாமம்** = 12 மணி முதல் 3 மணிவரை

**நான்காம் ஜாமம்** = 3 மணி முதல் 6 மணிவரை

**ஹின்** – Liquid measure of Egyptians .Eze 4:11; Ex 30:24. 1Hin = 6.5 litres எகிப்தில் வழங்கி வந்த திரவங்களை அளக்கும் அளவை. 1 ஹின் என்பது 6.5 லிட்டருக்கு சமம். எசே. 4:11; யாத். 30:24.

# கிறிஸ்தவ கீர்த்தனைப் பாடல்களின் வார்த்தைகளுக்கான அருஞ்சொற்பொருள்

## அகர வரிசையில்

அ

அகத்தியம் – அவசியம்

அங்கரங்கள் – அழகிய கைகள்

அசலக்குழி – பூமிக் குழி

அஞ்ஞான – ஞானமில்லாத

அடிகள் – ஆசாரியர், கடவுள்

அடைக்கலம் – புகலிடம்

அட்சயன் – இறைவன், அழிவில்லாதவன்

அட்டியின்றி – மறுப்பு இன்றி, தடைஇன்றி

அண்டபரன் – நெருங்கலும்

அண்டினோர்க்கு – சேர்ந்தவருக்கு

அண்ணல் – பெருமையில் சிறந்தவன், அரசன்

அதபிமானி – அதை விரும்பு

ஆதீத – எட்டாத, மிகுந்த

அதீத சுந்தரன் – மிகுந்த அழகுடையவன்

அத்தனார் – தகப்பனார்

அத்தன் – கடவுள், தகப்பன், உயர்ந்தோன்

அத்தா – கடவுளே, தகப்பனே, உயர்ந்தோனே,

அத்தியந்த – அனந்த, மட்டற்ற

அநந்தம் – முடிவில்லாத

அநாதி – கடவுள், புராதனம்

அநீதன் – நீதியற்றவன்

அந்தரம் – ஆகாயம்

அந்தரவான் தரையுந் தரு – அந்தர வானத்தையும் தரையையும் தருகின்ற

அபயம் – அடைக்கலம்

அமரர் – வானோர்

அமர் – யுத்தம், வெறி

அமலர் – மாசற்றவர்

அமலன் – கடவுள், மாசற்றவன்

அபிலாதிபன் – தேவன்

அமிழ்துக்கழுதவனை – பசியினால் தாய்ப்பாலுக்காக அழுதவனை

அம்பரம் – ஆகாயம்

அம்பரா– வானோர், வானத்தில் உள்ளவர்

அம்புவி – சகம்

அம்மான் – தகப்பன், தாய்மாமன், அத்தையின் கணவன்

அரிய சித்தே – அபூர்வமான அரூபமே, அபூர்வமான அறிவே

அருகிலன் – அருகதை இல்லாதவன்

அரூபி – வருவம் இல்லாதவர், கடவுள்

அலகை – பிசாசு

அலைகளை – துன்பங்களை, உபத்திரவங்களை

அல்லைகள் – அல்லல், துன்பம், மனத்துயர்

அவர்பட்சம் வைத்துறும் தொழும்பரை– அவர்பால் அன்பு வைக்கும் அடிமைகளை

அவனியோர் மாதிடமே – உலகத்திலுள்ள பெண்ணிடமே

அழிம்பு – புரண்டு, கேடு, பாழ்படுத்துதல்.

அற – முற்ற, மிக

அனந்த – அளவற்ற

அனந்தம் – அளவற்ற நிலை

அனவரதமும் – எப்பொழுதுமாக

அனாதி – தொடக்கம் இல்லாத

அனுகூலன் – காரிய சித்தியுடையோன்

அன்பின் கரத்துளே – அன்புள்ள கரத்துக்குள்ளே

**ஆ**

ஆக்களுடைய – பசுக்களுடைய

ஆதம் – ஆதாம்

ஆதரை – பூமி, தலம்

ஆதன் – ஆதாம், உயிர், குரு, ஆதிமனிதன்

ஆதாரநிராதரா – ஆதரவு பெற்ற, ஆதரவு பெறாத

ஆதாரம் – ஆதரவு

ஆதி ஓலோலம் – ஒலி, திருவார்த்தை

ஆதிபன் – அரசன், எசமான் அதிபன்

ஆதிரை – புவி, பூமி, உலகம்

ஆதிரையோர் – பூமியில் உள்ளவர்கள்

ஆதீனம் – சுதந்திரம், உரிமை, சொந்தம்

ஆயர் – இடையர், மேய்ப்பர்

ஆரணம் – வேதம்

ஆரணன் – வேத முதல்வன்

ஆரேந்தர் – மேய்ப்பர்

ஆர்மணன் – நிறைந்தவன், கூர்த்த மதியினன்

ஆனகம் – தொழுவம்

ஆனடை – பசு, கால்நடை

**இ**

இக பர – இம்மை, மறுமை

இங்கிதமாக – இனிமையாக

இங்கிர்த – இனிய மொழி பேசுதல்

இணையில் – இணையில்லாத, ஒப்பில்லாத

இந்நிலத்துற்றோனை – இந்த உலகத்திற்கு வந்தவனை

இப்பாருய்ய – இவ்வுலகம் காக்கப்பட

இமையவர் – வானவர்

இம்பரா – இவ்வுலகில்

இம்மணர்க்கும்– திருமணம் செய்துகொள்கிறவர்களுக்கும், மணமக்களுக்கும்

இவ்வெளியார்க்கு – இந்த எளியவருக்கு

இழிஞன் – இழிவானவன்

ஈ

ஈடேற்றிட – காப்பாற்ற

ஈண்டல் – கூட்டம்

ஈண்டு – கூடு, நெருங்கு, முயன்று, கொண்டாடி இவ்விடம்

ஈந்துசெடி – பேரிந்து செடி

ஈறில்லாத – முடிவில்லாத

உ

உசாவி – ஆராய்ந்து, எண்ணிப் பார்த்து, யோசனை கேட்டு

உடு – நட்சத்திரம்

உடைமை – உரிமையானவை, உரியவை, செல்வம்

உட்பகை – நட்பு பாராட்டி கெடுக்கும் விரோதம், உள்ளுக்குள் இருக்கும் பகை

உண்டுகொலோ – உண்டோ

உத்தரித்தே – ஈடு செய்த, ஆசித்தே, கடன் செலுத்திய

உதிரம் – இரத்தம்

உம்பரம் – விண்ணுலகம்

உம்பரன் – உயர்ந்தோன்

உம்பர்கள் – மேலோர்கள், வானோர்கள், தேவதூதர்

உய்க்க – காக்க

உய்ய – ஈடேற, தப்ப

உவந்தாள்– மகிழ்வுடன், ஆளுகை செய்

உள்ளிஞ்ச – உறிஞ்ச

உற்றுதிரம் – மிகுதியான உதிரம்

உற்றுனக்கிரங்கி – கவனமாக உனக்கு இரங்கி

உன்னதகஞ்சீர் – உயர்ச்சி, மேன்மை

உன்னதனார் – உயர்ந்தவர், மேன்மையானவர்

ஊ

ஊதல் – ஊதக்காற்று, வாடைக்காற்று

ஊழிக்காலம் – உலகத்தின் முடிவுகாலம், முடிவில்லாத காலம்

எ

எக்கஸ்தியும் – எந்த கஷ்டமும், எத்துன்பமும்

எத்தால் – எதனால்

எந்தா – என் தந்தை

எந்தாய் – என் தந்தை

எம்பரா – என் இறைவன்

எம்பிரான் – எங்கள் தலைவன், எங்கள் தேவன்

எம்மாவிக்குருகி – எம் ஆவிக்கு உருகி

ஏ

ஏகோபித்து – ஒன்றுபட்டு

ஏதம் – துன்பம், குற்றம், கேடு

ஏர்குணன் – நற்குணம் உடையவன், அழகு மிகுந்தவன்

ஏவை – ஏவாள்

ஐ

ஐயம் – சந்தேகம்

ஒ

ஒப்பேதருங்காவலே – ஒப்பு ஏதுமற்ற காவலாளியே

ஒய்யாரத்து – அலங்காரத்து

ஒன்னாரின் கும்புகள் –பகைவரின் கூட்டம், போர்ச் சேவகரின் கூட்டம்

ஓ

ஓசன்னா – இப்போது காப்பாற்றும், உன்னதத்தில் இருக்கிறதேவனுக்கு மகிமை

ஓச்சுவார் – நல்லாட்சி புரிவார்

ஓதரும் – சொல்வதற்கு கடினமான, விவரிக்க இயலாத

க

கங்குல் – இருள்

கடி – அலகை, பேய்

கண்மணி பொன்றினோர் – கண்பார்வை இழந்தோர்

கந்த ரசமாக – சுவையுள்ள, வாசனையுள்ள திராட்ச ரசமாக

கபோதி – குருடன்

கமழ் – கந்தம் வீசு

கரிசித்து தா நற்புத்தி – கரிசனையோடு நற்புத்திகொடு

கரிசித்தெனை – என்னைப் பாதுகாத்து

கலி – வஞ்சகம்

கலிக்கம் – கண்ணில் இடும் மருந்து

கலைகியானன் – கலை ஞானம் உடையவன்

கஸ்தி – துன்பம்

கியானன் – ஞானமுடையோன்

கா

காசினி – பூமி

காசினியில் – பூமியில்

காதகர் – கொலைஞர்

காத்தார் – காப்பாற்றினார்

காயவினை – உடலின் வினை

காருணியம் – கருணை

காவலன் – அரசன்

கானலில் – வெப்பத்தில்

**கி**

கிஞ்சிதமும் – கொஞ்சமும்

கிலேசம் – வருத்தம், துன்பம்

**கு**

குணாளன் – குணமுள்ளவன்

குருதி – இரத்தம் , உதிரம்

**கொ**

கொண்டல் – கீழ்க்காற்று

கொண்டிதமே – இனிமையாய்

கொற்றவன் – அரசன், மன்னன்

**கோ**

கோட்டி – கேலி பேசுவது

கோதணுகா – குற்றம் அணுகாமல்

கோதில்லாதோனே – குற்றம் அற்றவனே

கோத்திரம் – குலம்

கோது – குற்றம், தவறு

கோதேபுரி – குற்றமுள்ள ஊர்

கோமகன் – அரச குமாரன்

கோமான் – அரசன், வானவர்

கோலப் பதுமை – அழகிய பொம்மை

கோவே – அரசனே

கோனவர் நாட – அரசர்கள் நாட

கோனார் – அரசன்

கோனே – அரசனே

கோன் – அரசன்

**ச**

சக்கந்தக்காரர் – பரியாசக்காரர்

சக்கந்தம் – பரிகாசம்

சக்கியமதாக – சிநேகமாக

சங்காரன் – அழிப்பவன்

சங்கீர்த்தனம் – துதித்தல், அறிவித்தல்

சங்கை – அச்சம், கனம், மாண்பு

சங்கையின்றியே – அச்சமின்றியே, கனமின்றியே

சச்சிதானந்தா – சத்தும் சித்தும் ஆனந்தமுமாய் நிற்கும் தேவன்

சடமுலக – கொடும் உலக

சண்டாளன் – இழிஞன்

சதமல்ல – நித்தியமல்ல

சதானந்தா – எப்போதும் மகிழ்ச்சி உடையவர்

சந்ததம் – எப்போதும்

சந்நிதானத்தில் – தேவ சந்நிதியில்

சம்பிரம – மகிழ்ச்சியான

சரணம் – வணக்கம்

சரணா விந்தத்தில் – பாத கமலத்தில்

சராசரங்கள் – பிரபஞ்சங்கள்

சருவலோகாதிபா – சர்வலோகத்தின் அதிபதியே

சருவேசா – சர்வத்துக்கும் ஈசனே

சர்வ வியாபி – எங்கும் நிறைந்திருப்பவன், கடவுள்

சற்குரு – தெய்வீக குரு, தெய்வீக போதகர்

சிருஷ்டி – படைப்பு

**சா**

சாகரம் – கடல்

சாங்காலிலும் – சாகும் போதும்

சாட்சாத் – அசல், மெய்யான

சால – மிகுந்த, மிகவும், நிறைய

சாலவும் – நிறையவும்

சாற்று – சொல்லு

சாற்றுதற்கரிய – சொல்வதற்கரிய

**சி**

சித்து – அரூபம், அறிவு

சித்தே – அரூபமே, அறிவே

சிரேஷ்டம் – முக்கியம், சிறந்தது

சிரோமணிகள் – சிறந்த பெண்மணிகள்

**சீ**

சீதளம் – குளிர்ச்சி

சீர் – அழகு, நன்மை, சிறப்பு

சீலம் – குணம், நல்லொழுக்கம்

**சு**

சுகந்தபலி – சுகந்த வாசனையான பலி

சுகவாரி – சுகமான கடல், நிறை புனல்

சுகிர்தம் – நல்லறம், நன்மை, இன்பம்

சுத்தாங்கம் – கலப்பற்றது, முற்றும்

சுந்தர – அழகிய

சுபசோபன – மங்களமான அழகு, மங்கள வாழ்த்து

சுயம்பு – தானாக இருப்பவர், கடவுள்

சுரர் – வானோர், தேவர்

சுரர்பதி – வானோர் தலைவர்

சுவிசேடக – நற்செய்தியின்

**செ**

செம்பொன்னுருவானை – சுத்தமான பசும்பொன் உருவமானவனை

செய்ய – அழகான

சென்னி – தலை

**சே**

சேணும் – வானமும்

சேணுலகு – மேலுலகு, வானலோகம்

சேமம் – சுகம்

சேயர் – மகன், குமாரன், மைந்தர்

**சொ**

சொரியும் – பொழியும்

சொரூபனார் – கடவுள்

சொன்னமும் – சொர்ணமும்

**சோ**

சோபனமாய் – அழகாய், சுபமாய்

சோபனம் – அழகு, சுபம், வாழ்த்து

சோரி – மழை, இரத்தம்

சோனாமாரி – பெருமழை, விடாமழை

**ஞா**

ஞாலம் – உலகம்

ஞானதீட்சை – ஞான உபதேசம்

ஞானப்பர்த்தா – ஞான கணவன்

**த**

தத்தம் செய்தே – ஒப்புக் கொடுத்தே

தந்தானை – தன்னையே தந்தவனை

தந்தை தமர் – தந்தை, சுற்றத்தார்

தமியன் – தனித்தவன்

தயாபரர் – தயாள குணமுள்ள தேவன்

தரணி – பூமி

தரு – மரம்

தற்பரன் – தேவன்

தன்னவன் – தனித்தவன், தன்னைச் சேர்ந்தவன்

தன்னார் – தன் மக்கள்.

**தா**

தாண்டவம் – நடனம்

தாதா – ஈகையாளன், கடவுள், தந்தை

தாரகங்கள் – அடைக்கல கோட்டைகள்

தாரகம் – ஆதரவு, பாதுகாப்பு, அடைக்கலம்

தாரகை – நட்சத்திரம்

தாரணனே – நிலையானவனே

தாரணி – பூமி, உலகம்

தாள் – பாதம்

தானவர் – அசுரர்

**தி**

திவ்ய – இனிமையான, தெய்வீகமான, மேன்மையான

**தீ**

தீதுறு – தீமைகள் நிறைந்த

தீரமுள்ள – வல்லமையுள்ள

தீர்க்கர் – தீர்க்கதரிசி

**து**

துங்க – மேன்மை

துங்கம் – சுத்தம், உயர்வு, வெற்றி

துங்கவன் – தூயவன், தூயன்

துங்கன் – உயர்ந்தவன்

துத்தியம் – துதி
துந்தமி – மழைத்துளி
துப்பார் – தூய்மையான, தூய்மையுள்ள
துய்யன் – சுத்தமானவன்
துர்க்கன்மி – துர்ச்செய்கை உள்ளவன்
துன்பும் – துன்பமும்
துன்னிய – நட்பு, சிநேகம்

**தூ**

தூயலங்கிர்தமாய் – தூய அலங்காரமாய்

**தே**

தேசிகர் – குரு, வேதம் ஒதுவிப்போன், ஆசிரியர்
தேட்ட – தேற்றுகிற
தேவமறி – தேவன் ஏறிவந்த கழுதைக் குட்டி
(கானான் நற்) தேயனுக்கு – கானான் நாட்டை உடையவனுக்கு

**தொ**

தொந்தமாய்/தொந்தம் – சேர்க்கையாய், சேர்க்கை
தொழும்பர் – அடிமைகள், குற்றேவல் புரிவோர்
தொழும்பரை – அடிமைகளை
தொழுவதிதம் – தொழுவது சுகம்

**தோ**

தோண – தோன்ற

**ந**

நண்ணி – விரும்பி
நத்தி – விரும்பி
நந்தன் – இடையன், புத்திரன்
நமஸ்காரம், நமஸ்தே , நமோ– வணக்கம்
நயந்தான் – நன்மைதான், மேன்மை தான், இன்பம் தான்

நரகில் – நரகத்தில்

நரராமீனரை – மனிதர்களாகிய ஈனமானவர்களை

நரர் – மனிதர்

நரர் சுரர் – மண்ணோர் விண்ணோர்

நரலோகரில் அன்பேனையா – நரக உலகத்தில் அன்பு ஏன் ஐயா.

நவமான – புதிதான

நவிலல் – சொல்லுதல்

நன்னயம் – நன்மை

**நா**

நாகவிம்பர் உயர் கோலா – வானவிரிவைப் போன்று எல்லையில்லாமல் மேம்பட்டு இருக்கும் அழகினை உடையவனே

நாதர் – ஆண்டவர், எஜமானர்

நாயானார் – தந்தையர், நாதனார், தலைவன், இறைவன்

நாயன் – கடவுள், பெருமையில் சிறந்தோன்

**நி**

நிகர் – சமானம், உவமை

நிண்ணயங்காண் – நிச்சயம் காண்

நிர்மலம் – பரிசுத்தம்

நிஷ்களம் – எங்கும் நிறைந்த

நிஷ்டூரம் – கொடுமை, இடையூறு

**நீ**

நீசன் – கீழ்மகன்

நீடு – நெடுங்காலமாய்

நீட வாரி – பெருங்கடல்

நீதம் – நீதி

நீதன் – நீதிமான்

**நூ**

நூங்கிடவும் – அதிகரிக்கவும்

**நே**

நேரேறு போதகன் – நன்னெறி போதிக்கும் போதகன்

**நை**

நைந்த – சோர்ந்துபோன

**ப**

பங்கமுற்று – தாழ்மைக்கோலம் எடுத்து, சிறுமைப்பட்டு

பங்கம் – ஈனம், தோல்வி, வெட்கம், பாவம்

பஞ்சமாபாதகங்கள் – களவு, கள் உண்ணல், குருநிந்தை, கொலை, பொய்

படியோர் – உலகோர்

பட்சமுள்ளவர் – நேசமுள்ளவர்

பத்திராசனம் – தலைமை ஆசனம்

பத்திராசனர் – தலைமை ஆசனத்தில் வீற்றிருப்பவர்

பத்ராசனக் கிறிஸ்து – முதன்மையான ஆசனத்தில் வீற்றிருக்கும் கிறிஸ்து

பரகதி வாழ்வு – பரலோக வாழ்வு

பரஞ்சோதி – பரலோகத்தில் உள்ள ஒளி

பரமபதனுக்கு – வீடுபேறு உடையவனுக்கு

பரமானந்தா – பரம ஆனந்தம் உள்ளவன்

பாடும்பலம் வந்தர் – வற்றுபுத்தப்படுபவர்

பராபர வஸ்து – பரம்பொருள், தேவன்

பராபரன் – தேவன், உன்னதமானவன்

பரிபாலனம் – பாதுகாத்தல்

பர்த்தா – கணவன்

பன்னரும் – விவரிக்க அரிதான

**பா**

பாங்காய் – பட்சமாய், அழகாய், யோக்கியமாய்

பாதகர் – துரோகம் செய்பவர், பாவிகள்

பானு – சூரியன்

பானுவே – சூரியனே

**பி**

பிணையாளி – பொறுப்பாளி, உத்தரவாதி

பிரதாபம் – பிரகாசம், வீரம், பெருமை

பிரவாகம் – வெள்ளம்

பிரஸ்தாபிக்க – குறிப்பிட்டுக்கூறபு

புங்கவன் – கடவுள், குரு

புணையாயினை– தெப்பம் ஆனாய், மரக்கலம் ஆனாய்

புந்தி – புத்தி

புரக்க – காக்க, ஈய, நிலை நிறுத்த

புல்லர் – கீழ்மக்கள், தீயோர்

**பூ**

பூசனை – தொழுகை, ஆராதனை

பூதகணங்கள் – பூதக்கூட்டங்கள்

பூபதி – அரசன்

பூமான் –புருஷன்

**போ**

போந்த – தகுந்த, பழகிய

**ம**

மகானுபவர்க்கும் – தேவ தூதர்களுக்கும்

மகிதலம் – பூமி

மகிபன் – அரசன்

மண்டலாதிபா – சர்வ பூமிக்கும் அதிபர்

மறுவிய – மயங்கிய

மறைந்தீட்டிய – மறைந்து செய்த

மன்றலர் – விவாகம் புரிகிறவர்

மன்றல் – விவாகம்

மன்னிய – மிகுந்த

**மா**

மாதவன் – சிறந்த தவம் உடையவன்

மாதுடை – மாதுவினுடைய

**மி**

மித்திரனே – நண்பனே, சிநேகிதனே

**மு**

முசிப்பாறுதல் – இளைப்பாறுதல்

முன்னணை – தீவனத்தொட்டி

முன்னவன் –முதல்வன்

**மெ**

மெத்த –மிகவும்

**மே**

மேதினி – பூமி

மேவி – விரும்பி

மேவிய – நிறைந்த, சேர்ந்த, பரவிய

**மோ**

மோக்கிஷ தீபன் – மோட்ச ஒளியன்

மோனமாய் – மௌனமாய்

**ர**

ரஞ்சிதனார் – அழகு நிறைந்தவர்

**ரா**

ராயர் – சக்கரவர்த்தி

**ல**

லட்சணத்தன் –லட்சணம் உள்ளவன், அழகுள்ளவன்

**வ**

வண்டக்கள்ளர் – குறும்புக்காரர்

வண்டலத்தவர் – திண்ணியர், பருத்தவர்

வலிய பரிசத்தால் – பெரிய விலைக்கிரயத்தால்

வன்னரர் – கொடிய மக்கள்

**வா**

வாகு – அழகு, தோள்

வாரி – வாய்க்கால், கடல்

வாரி திரை – கடல் அலை

**வி**

விக்கினம் – இடையூறு, தீமை

விண்டலத்தவர் – தேவதூதர்கள், பரலோகத்தில் உள்ள பரிசுத்தவான்கள்

விண்டலம் – விண்தலம்

விண்டணன் – ஆணையிட்டான், கட்டளையிட்டான்

விண்டோம் – நீங்கினோம்

வித்தகர் – சான்றோன், பலவித்தைகள் கற்று தேர்ந்தவன்

விமலன் – கடவுள், தூயவன்

விமோசனம் – நிவிர்த்தி, விட்டு நீங்குதல்

வியாகுலம் – துக்கம், கலக்கம்

விள்ளற்கரிய – உரைப்பதற்கரிய

விண்தாரன் – எங்கும் நிறைந்து இருப்பவன்

**வெ**

வெம்பவம் – கொடும்பாவம்

வெருண்டலகை – பயந்தவர்கள்

**வே**

வேதர்க்கு – தேவத்தைக் கற்றவர்களுக்கு பக்தருக்கு, பரிசுத்த வான்களுக்கு

வேதாள கணங்கள் – பிசாசு கூட்டங்கள்

**வை**

வைதீகர் – வேதியர்

**ஜா**

ஜாலர் – மீன்பிடிக்கிறவர்கள், மீனவர்கள்

**ஜெ**

ஜெகத்து இரட்சகன் – உலக இரட்சகன்

ஜெகம் – உலகம்

ஜென்மித்தார் – பிறப்பித்தார்

**ஹா**

ஹாரன் – ஆரான், நட்பு, திறமையான

## கீர்த்தனைகள்

**சத்தாய் நிஷ்களமாய் ஒரு சாமியமும்மிலதாய்**

சத்தாய் – உண்மையாய், நன்மையாய், அறிவாய், சாரமாய்

நிஷ்களமாய் – எங்கும் நிறைந்தவராய்

சாமியமும்மிலதாய் – ஒப்புமையற்றவராய்

சித்தாய் – அரூபமாய்

எத்தால் – எதனால்

கடைத்தேறுவன் – கடைத்தேறுவேன், ஈடேறுவேன்

என்பவதீர்ந்து – என்பாவம் தீர்ந்து

அத்தா – தகப்பன், குரு, உயர்ந்தவன், கடவுள்

எம்மாவிக்குருகி – எம் ஆவிக்கு உருகி

உயிரீந்து – உயிரைத்தந்து

புரந்ததற்கோர் – காத்ததற்கு ஒரு

கைம்மாறுண்டு கொலோ – பிரதி உபாகரம் உண்டோ

கடைகாறும் – கடைசி வரை, முடிவு வரை

கையடையாய் – அடைக்கலம் ஆனாய்

சும்மாரட்சணை செய் – இலவசமாக ரட்சித்தாய்

அம்மான்– தகப்பன்

திரைசேர் – கடல்சேர்

வெம்பவமாம் – கொடும்பாவமாம்

கரைசேர்த்துய்க்க வென்றே – கரையில் சேர்த்து ஈடேற்றவென்றே

புணையாயினை – தெப்பம் ஆனாய், மரக்கலம் ஆனாய்

கண்ணிலியான் – கண் இல்லாத நான்

பரசேன் – துதிக்காதவன் நான்

பற்றுகிலேன் – பிடித்துக்கொள்ளாத நான்

நிண்ணயங்காண் – நிச்சயம் காண்

மேய்பிடித்துப்பவத்தே – பேய் பிடித்துப் பாவத்திலே

அத்தா – கடவுளே, தகப்பனே, உயர்ந்தோனே, உருவே

துப்பார் சிந்தையிலேன் – துப்பு+ ஆர்+ சிந்தை+இலேன். சுத்தமுள்ள சிந்தை இல்லாதவன்

நடுநாள் – நியாய்த்தீர்ப்பு நாள்

இப்பாருய்யவென்றே – இப்பார் உய்ய என்றே – இவ்வுலகம் ஈடேற வேண்டும் என்றே

மோக்கிஷ தீபன் – மோட்ச ஒளியன்.

**ஆதிப்பிதா குமாரன் – ஆவி திரியேகர்க்கு அனவரதமும் தோத்திரம் – திரியேகர்க்கு அனவரதமும் தோத்திரம்**

நீடுவாரி – பெருங்கடல்

பணிபாதர் – பணிவுடையர்

பிரபோதர் – தெளிவுடையர், ஞானமுள்ளவர்

அதி நீதர் – மிகுந்த நீதியுடையவர்
தாபன் இல்லான் – துன்பம் இல்லாதவன்
பகர் அடி முடிவில்லான் – பகர்வதற்க அடி, முடி இல்லாதவன்
நீணிலத்தில் – உலகத்தில்
தீதுறு – குற்றம் நிறைந்த
மிசை – மேல்

**ஆதி திருவார்த்தை திவ்ய அற்புத பாலனாக பிறந்தார். ஆதாம் தம் பாவத்தின் சாபத்தை தீர்த்திட ஆதிரையோரை யீடேற்றிட**

ஆதிரையோரை – பெரியோரை
உன்னதகஞ்சீர் – அகவழகும்
முகஞ்சீர் – முகவழகும்
மின்னுஞ்சீர் – ஒளியழகு
ரஞ்சிதனார் – அழகு நிறைந்தவர்
சோபனம் – அழகு, மகிழ்ச்சி, வாழ்த்து
இங்கிர்த – இனிய மொழி பேசுதல்
ஈசாய் வங்கிஷத்தானுதித்தார் – ஈசாயின் வம்சத்தில் தோன்றினார்

**சோபனமே சோபனமே / சோபன பெண்தாள் சோபனமே**

சோபனமே சோபனமே
சோபன பெண்தாள் சோபனமே
தீப ஞான ஸ்நான பிரதாப
தேவதை பெண்தாள் சோபனமே
சங்கை மணாளர்க்கு சோபனம் சோபனம்
தாவீது மைந்தர்க்கு சோபனம் சோபனம்
எங்கள் அரசர்க்கு சோபனம் சோபனம்
இயேசு நாதர்க்கு சோபனம் சோபன ம் – சோபனம்

ஆட்டுக்குட்டிக்கு சோபனம் சோபனம்
அவர் மனைவிக்கு சோபனம் சோபனம்
தேட்ட கணவர்க்கு சோபனம் சோபனம்
செல்வ குமாரிக்கு சோபனம் சோபனம் – சோபனம்
ஆதியான் மணவீட்டுக்கு சோபனம்
ஆத்தும பெண்கள் கொண்டாட்டுக்கு சோபனம்
வேதநாயகன் பாட்டுக்கு சோபனம்
மேசியாவின் மன்றாட்டுக்கு சோபனம் – சோபனம்

**பாடலின் பொருள்**

சரணங்கள்

1. சிறப்புமிக்க மணமகனுக்கு மங்களம்
தாவீதின் குமாரனுக்கு மிகவும் மங்களம்
எங்கள் ராஜாவுக்கு மங்களம்
இயேசு நாதருக்கு மங்களம் மங்களம்.

2. ஆட்டுக்குட்டியானவராகிய குமாரனுக்கு மங்களம்
அவர் மனைவியாகிய திருச்சபைக்கு மங்களம்
தேற்றரவாளனாகிய ஆவியானவருக்கு மங்களம்
செல்வகுமாரியாகிய திருச்சபைக்கு மங்களம்

3. ஆதிபிதாவின் மணவீட்டுக்கு மங்களம்
ஆன்மாவாகிய பெண்களின் கொண்டாட்டத்துக்கு மங்களம் மங்களம்
வேதநாயகனின் பாடலுக்கு மங்களம்
மேசியாவின் ஜெபத்திற்கும் மங்களம் மங்களம்

பவர் (O.V) மொழிபெயர்ப்புக்கான சொற்பொருள் அகராதி

# தமிழ் வேதாகம சொற்களஞ்சியம்

தமிழ்க் கிறிஸ்தவர்களில் பெரும்பான்மையோரால் பயன்படுத்தப்பட்டு வருகிற தமிழ் வேதாகமம் (பவர் O.V. மொழிபெயர்ப்பு) சுமார் நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்னர் மொழிபெயர்க்கப்பட்டது. அக்காலத்திய மக்களின் பழக்கத்தில் இருந்த தமிழில் இது யாவரும் புரிந்துகொள்ளுவதற்கேதுவாகவே இருந்தது. ஆனால் இன்றைய காலகட்டத்திலுள்ள கிறிஸ்தவர்களுக்கு இதனுடைய பெரும்பாலான வார்த்தைகள் புரியாதவை யாகவே உள்ளன. இக்குறையை நிவிர்த்தி செய்யும் பொருட்டு ஒரு துணை நூலாக எழுதப்பட்டதே இந் நூலாகும். சுமார் 1400 வார்த்தைகளுக்கு இந்நூலில் அதனுடைய தற்கால பொருளும் அதற்குரிய ஆங்கில வார்த்தையும் கொடுக்கப்பட்டுள்ளன. வார்த்தைகளை எளிதில் கண்டு வாசிக்கும்படி அகர வரிசையில் ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளன. நூலின் கடைசியில் பின்னிணைப் பாக சபைகளில் பாடப்படும் கீர்த்தனைகளில் புரியாத வார்த்தைகளுக்கும் அர்த்தங்கள் அகர வரிசையில் கொடுக்கப்பட்டுள்ளன.

வேதாகம அகராதி

ISBN 819565013-9

Bible Dictionary

9 788195 650132